# சேசுநாதர் அம்மானை

இஃது

ஸ்ரீமான ச. செல்வராஜு ரெட்டியார் பி.ஏ., எல்.டி.

இயற்றியது

MARAIMALAI ADIGAL LIBRARY

பிரசுரக்கர்த்தர்:

செல்வம் அண்டு கம்பெனி,

கத்தோலிக்கு புத்தக வியாபாரிகள்,

480, சில்வர் தெரு,

பரங்கிமலை

1927

[Copy Right]

# சேசுநாதர் அம்மானை.

## காப்பு வெண்பா.

உலகைப் புரக்க வுபர்பரமன் வந்து
கலகநிறை யூதர் கரத்தால்—அலகிலாப்
பாடுபட்ட சீர்சரிதை யம்மானை பாடுதற்கு
நீடுயரங் நேர்சிலுவை காப்பு.

## அம்மானை.

### ஆதி வரலாறு.

ஆதிநா ளேதேன் அம்பொழிலில் உண்டான
தீதுநிறை பாவத் தீங்கதனைப் போக்குதற்கு
மாதுகன்னி மாமரிபால் வந்துதித்த தேவசுதன்
கோதில் சரிதைதன்னைக் கூறிடுவேன் அம்மானை.
மூவா முதல்வனவன் மூவுலகக் காரணனைப்
பாவா லறையொண்ணுப் பாங்குருவைப் போற்றிசெய்து
ஏவாள் பழியேற்கா ஏந்திழையாங் கன்னிகையை
காவல் புரியுமந்த கைத்தாதை சூசைதனை
நாவாறப் போற்றிசெய்து நவிலுவே னம்மானை.
ஆவலுந்தான் தீர அறைகுவேன் அம்மானை.
குற்றங்குறையிருந்தால் கோதொழித்துக் கொள்ளுவது
உற்ற பெரியோரின் ஒண்கடமை யம்மானை.
பழலை மொழிபோலும் வையகத்தில் யான்பாடும்

கழலாச் சரிதைதன்னைக் காசினியில் கேட்டிடுவீர்.
ஆறுலட் சணக்கடவுள் அம்பரமன் மாட்சிமையை
ஈறிலா தேவபரன் இட்டமுடன் காட்டுதற்கு
மானிடர்க ளீசன் மகத்துவத்தைக் காணவென்று
ஆனவொரு வல்லபத்தை ஆதரையோர் காணவென்று
அண்ட சராசரங்க ளத்தனையு மோர்மொழியில்
உண்டாக்கித் தந்தார் உயர்பரனார் அம்மானை.
வானமொடு சூரியனும் வட்டமிடு சந்திரனும்
மீனினங்க ளத்தனையும் மேவுமெழில் வையகமும்
ஆறு தினங்களிலே யாக்கிவைத்தா ரம்மானை,
கூறும் பொருளனைத்துங் கூட்டிவைத்தா ரம்மானை.
உண்டான பூமியிலே ஓரினிய பூம்பொழிலில்
கண்டானந் தங்கொள்ளுங் காவினிலே யம்பரனார்
ஆதாமோ டேவையெனும் ஆதித்தாய் தந்தையரை
காதலோ டுண்டாக்கிக் கத்தனவர் வைத்தாரே.
வைத்தா ரவர்களுக்கு வாயா லறை யொண்ணா
மொய்த்த வரம்பலவும் மோனபரன் தந்தனர்காண்.
சாகா வரம்பெற்றார் சர்வநலம் பெற்றார்கள்.
போகாதி யாவும் புனைந்துமகிழ்ந் தேயிருந்தார்.
இவ்வா றவர்களுந்தான் இன்பமுடன் சோலையினில்
எவ்வகைய தாங்குறையு மில்லாமல் வாழ்கையிலே
கலகம் விளைக்குமந்தக் கார்நரகப் பேயரசன்
உலகைக் கெடுக்கவரும் ஒன்றாப் பகையலகை
சிங்காரத் தோட்டமதில் செல்வமாய் வாழுகின்ற
மங்காப் பரிசுத்த மானிடரைக் கண்டலகை
மிக்க விசாரமுற்றான் மேவிமன மேங்கியே
துக்கம் நிறைந்தவனாய்த் தோன்றும் பலநினைவு
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியவன் சொல்லுவனாம்
பண்ணாத யோசனைகள் பண்ணியவன் பன்னுவனாம்
முன்னம் நமக்களித்த மோட்சப் பதவிதனை
இந்நாளில் மண்ணா லியன்ற மனிதருந்தான்
பெற்று மகிழ்வதையான் பேசாமல் பார்க்கிறதா
உற்ற அவர்பெருமை ஓர்பொழுதாங் கூடாது
என்று சபத மியம்பியந்தப் பேயலகை
நின்றுசெய்த சூழ்ச்சியினை நீணிலத்தில் யானுரைப்பேன்.

பாம்புருவ மாகியந்தப் பாங்குடைய சோலைதனில்
மாண்பெழிலோ டோங்கி மகிதலத்தோர் கெடவளரும்
மரத்திற்பாய்ந் தேறி மையலுறவே யமர்ந்து
வரத்திற் சிறந்த வனப்புடனே தவழ்ந்ததுகாண்.
அதனெழிலைக் கண்டந்த ஆரணங்கா மேவாளும்
பதமா யதனருகிற் பாய மரத்தடியில்
சோதனைக் கிடந்தந்து சொல்மறந்த பாவையரும்
ஏதம் விளைக்கவந்த இங்கிதநற் பாம்பதனை
நோக்கி யுரைத்திடுவாள் நுண்ணறி வில்லாதவளும்
அழகு நிறைபாம்பே ஆடுகின்ற நற்பாம்பே
பழகியது போலவிந்தப் பாங்காய் மரமேறி
ஆனந்தமாக அமர்ந்திருப்ப தேனோசொல்
ஏனந்தப் பூமரத்தி லேறிவிளை யாடுகின்றாய்
என்றவளுங் கேட்க எரியரவந் தானகைத்து
நின்ற கிளைவிட்டு நேரிழையைத் தானணுகி
ஏந்திழையே பெண்மணியே இப்போது நான்கேட்கும்
தேர்ந்த வினாதனக்குச் செப்பிடுவா யுத்தாரம்
உன்னை யொருவார்த்தை கேட்கா னிங்குற்றேன்
கன்னல் மொழியனைய காரிகையே சொல்லென்றான்.
சூதொன்று மறியாத தோகையரு மேதுசொல்வாள்
ஓதுகிறேன் கேட்டிடுவாய் ஒய்யாரப் பாம்பரசே
உண்மை யுரைக்கின்றேன் உன்கேள்வி யாதெனவே,
சர்ப்ப உருவெடுத்துத் தந்திரமாய் வந்தஅந்த
அற்ப அலகையுந்தா னாரணங்கை நோக்கியே
மாதே மனமகிழ்ந்து மாட்சிமையாய் நீ வாழும்
போதம் நிறைந்தவிப் பூங்காவில் பல்விதமாம்
விருட்சங்க ளின்கனிகள் வேண்டுமள வேபுசித்துத்
திருப்தி யுடனிருக்கத் தேனினிய விம்மரத்தின்
சுக வனத்தின் மத்தியிலே சொகுசாக நிற்குமிந்தத்
தகமரத்தின் தீங்கனியைத் தாவிபறுத் துண்ணாமல்
தூர விலகி நின்று தோகையரே போவானேன்
காரணஞ் சொல்லிடுவாய் கன்னல் மொழியாளே
என்றந்தப் பாம்பலகை இங்கிதமாய்க் கேட்டானும்.
நன்றெனவே யந்த நாகலகைச் சூதறியாப்
பேதை யருகணைந்து பேய்மாய்கை யேசிக்கி

ஆந்தம் நிறைந்த அரவமே சொல்லுகிறேன்
விந்தை நிறைபாம்பே விளம்புவதைக் கேட்டிடுவாய்
ஆதி பராபரமன் அப்புவியைத் தான்படைத்து
மேதினியில் யாவும் மிகவாய் நிறைத்தபின்பு
எங்களை யாக்கி எழில்வரங்கள் தந்தனர்காண்
மங்கள மாக மருவி மனமகிழ்ந்து
யாவு மனுபவிக்க ஆண்டவரு முள்ளுவந்து
மேவி யனுமதித்த போதினிலே மேலவரும்
சொன்னார் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேள்பாம்பே
இந்த மலர்ச் சோலையிலே எங்கு மிருக்கின்ற
கந்தக் கனியெல்லாஞ் சிந்தைமகிழ்ந் தேபுசிப்பீர்
ஆனால் நடுவணசைந் தாடிநிற்கு மிம்மரத்தின்
ஈனக் கனியதனைத் தின்றா லிருபேருஞ்
சாவீர்கள் சத்தியமாய்ச் சாவீர்கள் என்றாரே
ஆவிதந் தெங்களை யாட்கொள்ளுந் தேவபிதா
ஆகவே இம்மரத்தின் ஈங்கனியை யுண்ணாமல்
சாக வழிகாட்டுந் தப்பான இப்பழத்தை
புசியாமல் யாம்விலகிப் பூவில் இருக்கின்றோம்
நசியாமல் பார்ப்பதெங்கள் நற்கடமை யாமென்றாள்.
ஏவை யெனும்பாவை யியப்பு மொழிகேட்டு
மேவி நகைத்தந்த மெல்லியரைத் தான்பார்த்து
கேடு விளைக்கவந்த ஆடரவ மேதுசொல்லும்
நீடுபுவி யும்போல் நெறியறியாப் பேதைகளை
மதியில்லா மானிடரை மானிலத்திற் கண்டதில்லை
இதன் மகிமை நீரறிதல் ஏற்றதல்ல என்றுபரன்
மெய்யாக உங்களைத்தான் மேதினியில் வஞ்சித்தார்
தையலரே சூதாகத் தற்பரனே மாற்றிவிட்டார்
இக்கனியை நீங்களுண்டால் எல்லா மறிந்திடுவீர்
திக்கனைத்துங் காணுந் தேவனாய் நீங்களும்
மாறி விடுவீர் மகிமையுடன் தோன்றிடுவீர்
தேறிமெய், பொய்நன்மை தின்மை யறிந்திடுவீர்
என்று கடவுளெண்ணி யிவ்வாறு சொன்னாரே
ஒன்று மறியீரென் றுங்களையும் எச்சரித்தார்
செய்தி யுணராமல் சேயிழைநீ ஏமாந்தாய்
உய்வதிதுவழியாம் ஓதினேன் என்றுரைத்தான்.

அந்தமொழி கேட்டாள் ஆதியன்னை யேக்கமுற்றாள்
தந்திர வார்த்தையால் தான்மயங்கி ஏவையரும்
கலகப்பேய் சொல்லியதைக் காரிகையும் நம்பிவிட்டாள்.
உலகனைத்து முண்டாக்கு முண்மையுள்ள தேவனுரை
மீறத் துணிந்துவிட்டாள் மெல்லியலும் அம்மானை.
ஆடுகின்ற பாம்பே யடியா ளுனதுரையும்
நீடுபுவி நிச்சயமோ நின்மொழிபோ லிக்கனியைத்
தின்பேன் எனப்புகலத் தீயலகை நற்சமயம்
என்று கணாந்தரியா தேந்திழையைத் தூண்டினதாம்.
கண்ணுக் கினிய கனியின்மே லாசைகொண்டு
விண்ணுலகோ ராகி விடலா மெனநினைத்து
நேர்த்தியாய்த் தோன்றும் நிறைகனியைத் தானறுத்து
பூர்த்தியா யுண்டு புருஷனுக்கு மீந்தனளாம்.
பேயின் மொழிகேட்டுப் பேதையவ ளப்பழத்தைத்
தீயதென் றெண்ணுமல் தேடியவள் காதலனை
யடைந்து மொழிபகர்வா ளாயிழையங் கேவாளும்
எந்த னருந்துணைவா என்னினிய காதலனே
உந்தனுக்கோர் செய்தி யுரைக்கவந்தேன் பத்தாவே
தயவுசெய்து கேளுமெனத் தையலருஞ் சொன்னாளே.
நயமொழிகேட் டாதாமும் நன்றெனவே சொல்லென்றான்
என்னசெய்தி சொல்வதையா னின்பமாய்க் கேட்டிடுவேன்
கன்னல் மொழியணங்கே காதலியே என்றுரைத்தான்.
அதைக் கேட்டுப் பாவையரு மன்புடனே சொல்லுவளாம்
இதைக்கேளும் காதலரே இந்தமலர்ச் சோலையிலே
நான்கண்ட பாம்பு நவின்றதை யான்கூறுகிறேன்
வான்கொண்ட வல்லபிரான் வையகத்தை யாக்கியபின்
நம்மைப் படைத்தளித்தார் நல்வரங்கள் தாங்கொடுத்தார்
செம்மை நிறைந்தமரஞ் சேர்ந்த நடுமரத்தின்
கனியைப் புசித்தாலே காசினியிற் சாவோமென்றார்
தனிமரத்தை மட்டுமவர் தள்ளிவைத்த தேனோசொல்
என்றந்தப் பாம்பென்னை இட்டமுடன் கேட்கயான்
ஒன்று முறைக்கவில்லை உத்தமரே அப்பாம்பு
யாவு மறிந்தந்த அரவமுறை கேளுமையா
மேவும் பராபரனும் மெய்யை நமக்கோதாமல்
பழமருந்தேல் என்று பகர்ந்தாரே யல்லாமல்

அழகு நிறைகனியை ஆசித்துண் போமானால்
நன்மைதின்மை நாமறிந்து நல்தேவ ராய்விடுவோம்
வன்மையொடு வையகத்தி லன்னவரைப் போலாவோம்.
அதனாலே யையன் அதைபொளித்தா ரப்போது
இதனாலே நேர்ந்தகூ தென்னருமை நாயகரே
இப்போ தெரிகிறதா என்றந்தப் பாவையரும்
செப்புவாள் மீண்டுஞ் செயலெடுத்துத் தானுரைப்பாள்
அக்கனியை யுண்டால் அவனியிலே மேன்மையுடன்
தக்க விதமாகத் தாரணியில் வாழ்ந்திடுவோம்
ஆதலா லக்கனியை அப்போதே யுண்டதுடன்
காதலனீ ருண்ணக் கனியொன்று கொண்டுவந்தேன்
யாரு மிதையென்று பாவையரு மோர்பழத்தை
நேரு மவன்கையில் நீட்டியருந் தென்றாளே
இந்தக் கனியின்ருசி யெந்தக் கனிக்குமில்லை
சோலையிலே இக்கனி போல் காண்பது துர்லபமாம்
சீலமுடனிப்பழத்தைச் சீக்கிர முண்ணுமென்றாள்.
அந்தச்சொல் கேட்டாதன் அங்கம் பதறலுற்று
நிந்தனைக் காளாக நிலத்திலே பயந்தவனும்
பெண்ணேநீ இப்படியும் பேதகமாய்ச் சொல்வாயோ
அண்ணல் மொழிமீறி யக்கனியை ஏன்புசித்தாய்
பரமன் உரைமீறி பாழ்கனியை ஏன்தின்றாய்
தரையி லவர்வார்த்தை தள்ளலாமா பெண்ணே
கடவுளரும் வந்தால் கடுங்கோபங் கொள்ளாரா ?
படவுரைத்து நம்மைப் பழிவாங்கிச் சபியாரா ?
எந்தன் கிளிமொழியே என்னைக் கெடுக்காதே
அந்த மரக்கனியா லாக்கினைகள் வந்தடுக்கும்
வேண்டா முனக்கிந்த விபரீதப் புத்தியென
தீண்டாக் கனிவிலக்கி வேண்டாமென் றெறிந்திடுவாய்
எனமொழிந்தா னாதன் ஏவையர்க்கு மம்மானை.
மனமயங்கி மாது மன்னனுரை கேட்டுந்தன்
புருஷன் தனதுரையை போற்றா திருப்பதற்காய்
குரோத மிகக்கொண்டு குவலயத்தி லேவிழுந்து
புரண்டு மிகவழுதாள் பொல்லாத நீலியவள்
திரண்டிருண்ட கூந்தல் விரியதரை வீழ்ந்தழுதாள்
இக்கணமே என்னுயிரைப் போக்குவே னென்றழுதாள்.

தூக்கித் தழுமாறைச் சூதறியா ஆகனுந்தான்
கண்டு மனங்கலங்கிக் காரிகையைத் தான் தடுத்து
பெண்டின் முகங்கோணக் கண்டறியாப் பேதையவன்
மனைவியின் சொல்மீறி மாபரமன் கட்டளையை
நினைவில்லை தாதன் நிகழ்த்தாமல் தீவிரமாய்
காதலியே கண்ணே கருத்தழிந்து மாளாதே
ஓதுமுந்தன் சொற்படியே உன்கனியை உண்பேனென்
உயர்கனியை யானுண்ண உத்தமியே தாவென்றான்
நயப்படவே நானுண்பேன் நற்கனியீ வாயென்றான்.
அந்த மொழிகேட்ட ஆரணங்குந் தானெழுந்து
சிந்தா குலம்நீங்கிச் சிற்றிடையா ளன்புடனே
கனியை யவன்கரத்தில் காதலுடன் தந்தாளே.
இனிய தெனவாங்கி இட்டமுட னுண்டானே
பாழலகை செய்சூதைப் பாரி லறியாமல்
தாழ் வுறவோ மென்றந் தனரயில் நினையாமல்
தையல்மொழி தட்டாமல் தற்பரன்சொல் மீறியே
மையலுடன் தின்றான் மா பவத்துக் காளானான்
ஏவைதான் கெட்டதன்றி ஏதமிலா நாதனையும்
மேவிக் கெடுத்தாளே மேதினியி லேபாவம்
வந்தடுக்க அன்னார் வழி வைத்துக் கொண்டாரே
இந்த விதமாக இருபேரு மீறியபின்
பரபனிடு கட்டளையைப் பாரினிலே மீறியதால்
நர உருவ நாணம் நன்றாகத் தானறிந்தார்
நேரிழையு மாதாமும் நிர்வாணத்தை மறைக்க
தருவாரும் பல்லிலைகள் தைத்தாடை யாய்ப்புனைந்து
இடையி லணிந்து கொண்டு ஏக்கம் பிடித்தவராய்
தடுமாற்றங் கொண்டவருந் தங்க மறைவிடத்தை
தேடி யொளிந்தார்கள் தேவனுக்கன் ஞர்பயந்து
ஆதாமும் ஏவாளும் அஞ்சி நடுங்குகையில்
பேதலித்துச் சிந்தை பெரிதுங் கலங்குகையில்
தேவாதி தேவன் திரிகால ஞானியவர்
சாவா வரப்பெற்ற சதிபதி களைத் தேடி
வழக்கம்போல் வந்து வனந் தனிலே தோன்றா
அழைக்கலுற்றா ராதாமை அவ்விடத்தி லம்மானை
ஆதாமே ஆதாமே ஐயோநீ எங்குற்றாய்

தாதாருஞ் சோலையிலே தாழ்ந்தநீ எங்கூற்றாய்
எனவுரைத்த சொல்கேட்டான் ஏங்கிநின்ற ஆதாமும்
மனவுறுதி நீங்கி மட்டற்ற இன்னலுற்று
தேகம் நடுநடுங்கி தெவபயங் கொண்டவனாய்
மேகம்மறை சூரியன்போல் மேலிலையால் மூடியவன்
நின்றவனுஞ் சொல்லுவனும் நித்தமெனைக் காத்துவரும்
என்றந்தா யும்மெதிரி லேகிவர வெட்கமுற்றேன்
நீரெனக் களித்தவொரு நேசமங்கை யால்பாவி
பாரினிலே யானேன் பராபரனே என்றுரைத்தான்.
அப்போது பாவியவன் பாரியளாம் ஏவாளும்
துப்பிதழின் வாய்திறந்து சொன்னவுரை கேட்டிடுவீர்
எந்தையே நீர்படைத்த ஈனசர்ப்பஞ் செய்சூதால்
நிந்தனைக் காளானேன் நீள்புவியி லென்றாளே.
அன்னவருஞ் சொன்னவுரை யாதியந்த மில்லாத
முன்னவனுமே கேட்டு மூலமறை வாயிருந்த
ஆதித்தாய் தந்தையரை ஐயனழைத் தேதுசொல்வார்
நீதிப் பராபரனும் நீசர்தமக் கேதுசொல்வார்
அரவத்தை நோக்கியவர் ஆதரையி லுள்ளபல
தரைவாழ் பிராணிகளில் தாழ்ந்தநீ சாபமுற்று
உந்தன் வயிற்றினால் ஊர்ந்துமண்ணைத் தின்றிடுவாய்
சந்ததமுந் தனுக்கும் பெண்ணுக்கும் சார்ந்தவுந்தன்
வித்துக்கும் அன்னவளின் வித்துக்கும் பகையாக்கி
வைப்போ மவளுனது வாழ்தலை நசுக்குவளாம்
எப்போது நீயவளின் குதிகாலைத் தீண்ட
முயன்றிடுவாய் என்றுபரன் மோசமுற்ற ஏவைதனை
கயல்விழியாட் கீந்த கடுஞ்சாப மிதுவாகும்
காரிகையுன் துன்பங் கருப்ப வேதனைகளையும்
பாரிலதிகரிக்கப் பாவையே செய்திடுவோம்
பிள்ளைகளை வாதையுடன் பெற்றிடுவாய் நீயும்
புருட னதிகாரத்தில் பூதலத்திலே யிருப்பாய்
மருவி யுனையாண்டு மானிலத்திலே யிருப்பான்
என்று பரனுதாமை ஏறெடுத்துப் பார்த்து
நன்றுநன்றுன்செய்கை நன்றிகெட்ட ஆதாமே
உன்மனைவி சொல்கேட்டு உண்ணவேண்டா மென்றகனி
தன்னைப் புசித்ததினால் தாரணியு முன்னாலே

சபிக்கப்பட் டதுவாமே சார்ந்த பலன்றனை
உடரி யளிக்கா துழைத்தே பெறவேண்டும்
பூண்டுகளைத் தின்பாய் புதர் முட்கள் தான் முளைக்கும்
நீண்ட புவியதனில் நெற்றி வியர்வைவிழ
ஈண்டுழைத் துன்னுணவை யென்று மருந்திடுவாய்
மண்ணி லிருந்துவந்தாய் மண்ணுக்கே நீ போவாய்
மண்ணா யிருக்கின்றாய் மண்ணே யுனதிருக்கை
என்றுரைத்துத் தேவன் இருவரையுஞ் சிங்காரம்
நின்ற பொழிலிருந்து நீக்கித் துரத்தியொரு
சம்மனசைக் காவல்வைத்துக் கத்தனு மறைந்தாரே
அம்மனிதரைச் சபித்து அம்பரனு மேகினரே.
பாவ முலகில்வந்து பாக்கியத்தைத் தான்கெடுத்து
மேவுமுயர் விண்ணுலகை மூடி யடைத்ததுகாண்
மோட்சக் கதவுகளை மூடி யடைத்ததுகாண்
சாட்சாத் கடவுளிட்ட சாபமீ தம்மானை.

## இரட்சகர் வருகையை எதிர்பார்த்தல்.

ஆதிவினை யால்விளைந்த அல்லல்தனைத் தீர்த்திடவே
சோதிபரனாதியினில் சொன்னமொழி யெப்போது
நிறைவேறு மென்று நீணிலத்திற் சந்ததியார்
இறையவனை நோக்கி யிருந்தார்க ளம்மானை.
பூவுலகை மீட்கப் புனிதபரன் வருங்காலம்
மேவுநாள் பார்த்திருந்தார் மேதினியிலே ஜனங்கள்,
தீர்க்கத் தரிசிகளும் தேவபய முடையோரும்
ஆர்க்கு மலைகடல்சூழ் ஆதரையி லக்காலம்
குறுகும் பருவங் குறிப்பாகக் கூறினர்காண்.
உறுபரம னெக்குலத்தில் உண்மையாய் வந்துதிப்பார்
வாக்குறுதி யின்படியே வையகத்தை மீட்கவரும்
நீக்கமறு மாபரமன் நீணிலத்திற் கன்னியிடம்
பிறந்திடுவா ரென்றும் பிறந்தபின் எம்மனுவேல்
என்னுந் திருநாமம் ஏற்றிடுவா ரென்றும்
மன்னர் குலத்தினிலே மன்னியுதிப் பாரென்றும்
யூதாவின் கோத்திரத்தில் உற்பவிப்பா ரென்றும்பல
ஓதரிய அற்புதஞ்செய் தூமைக் குருடுமுடம்

தீராத நோய்களையும் தீர்த்துவைப்பா ரென்றுமுயர்
பெத்லகே மூரிற் பிறந்திடுவா ரென்றும்
உத்தமரா யுண்மை யுரைத்திடுவா ரென்றும்பல
இன்னலுற்ற மானிடரும் ஏழையாய்க் காசினியில்
பன்னரிய பாடுபட்டுப் பல்லோரி கழ்ச்சிக்கும்
ஆளா யருவருக்கப் பட்டவராய் நின்றுபல
மாளாத நிந்தை மருவியவர் மூன்றுபத்து
வெள்ளிப் பணத்துக்கு விலைபோகு மாந்தரென்றும்
உள்ள பலகுறிகள் ஓதியவர் ரட்சகரை
எதிர்பார்த் திருந்தனர்காண் இவ்வுலகிற் பல்லாண்டாய்ச்
கதியளிக்குங் கர்த்தருக்காய்க் காத்திருந்தா ரம்மானை.
இவ்வளவு சொல்லியுமேன் ஏற்றரிய ரட்சகர்தாம்
இவ்வுலகில் வேந்தராய் இருந்திடுவா ரென்றும்
பூலோக மன்னராய்ப் புகழ்மருவிப் பல்லாண்டு
சாலத் திசைகளிலும் தந்நாம மோங்கஅவர்
ஆண்டிடுவா ரென்றும் அடிமைத் தனத்தினின்றும்
மீண்டு ஜனம்வாழ மேசையா செய்வரென்றும்
தவறுக எண்ணித் தரையகத்தி லன்னவர்க்காய்
அவதார வேந்தர்க்காய் ஆதரையில் காத்திருந்தார்.
மேதினி யுண்டாகி மேவுபவம் விளைந்ததனால்
கோதிலா வானிடத்தைக் கோபத்தால் மூடியபின்
ஆண்டுக ளாயிரங்க ளாயினகாண் அம்மானை.
மீண்டும் பரன்வருகை மேவினதெவ் வாறென்று
தேவத் திருவருளைச் சிந்தையினி லேயெண்ணி
பாவக் குறைய கலப் பன்னிடுவேன் அம்மானை.

## உலக இரட்சகரின் ஜனனம்.

ஆதரையு முண்டாகி யாயிரநான் காண்டுகளும்
மாதரையி லானபின்பு மனுக்குலத்தை ரட்சிக்க
தேவசித்த மேற்பட்ட திவ்யதிரு நேரத்தில்
ஆவலா யெதிர்பார்த்த ஆண்டவரும் வந்துதித்த
வரலாற்றை யிப்போது வையகத்தோர்க் கோதிடுவேன்.
வரங்கள் மிகவணிந்த வாள்மன்னன் தாவீது
மன்னர் குலத்தினிலே வந்தவொரு தம்பதிகள்

அன்னம்மாள் சுவக்கீன் அருந்தவர்கள் பெற்றெடுத்த
மரியென்னு மங்கையிடம் மாபரனுர் வந்துதித்த
பரிவான செய்தியினைக் கேளுங்கள் அம்மானை.
கன்னி மரியாளும் கற்பதனைத் தற்பார்க்கு
இந்நிலத்தில் தந்து மிருக்கையிலே யன்னவட்கு
மங்களமாய்க் கல்யாண மாணிலத்தில் செய்பவென்று
எங்கிருந்தும் வந்த எழில்மாந்தர்க் குள்ளொருவன்
வேந்தன் குலத்தானும் வேலை தச்சு செய்வானும்
மாந்தர் தமக்குள்ளே வறுமை மிகுந்தவனும்
ஆகிய சூசையெனு மைபன்றிருக் கோன்மலா
ஏகன் அவளுக்கென் றித்தரையி லேகுறித்த
மணவாளன் சூசையென மங்களமாய்க் கல்யாணம்
குணமாய் முடித்துவைத்தார் குவலபத்தில் அம்மானை.
சூசை மரியென்னும் தூயவிரு தம்பதிகள்
மாசில்லா வாழ்வை மருவி யிருக்கையிலே
ஒருநாள் சருவேசன் உற்ற உயர் சம்மனசை
மரியென்னு மாதினிடம் மானிலத்துக் கேயனுப்ப
சம்மனசுங் கன்னியரைச் சார்ந்துரைக்குஞ் சேதிதன்னை
எம்மனசு மின்பமுறக் கூறிடுவேன் அம்மானை.
தேவபரன் உம்முடனே தெரிவையர்க் குள்ளேயாசீர்
பெற்றவள் நீரென்று பேசினது மப்பாவை
உற்றுள் திருக்கருவும் ஒங்குபர னருளாலே.
சருவேச னிஸ்பிரீத்து சாந்துவினுல் கன்னியவள்
கருகொண்டாள் மாதம்பத்தும் கழிந்தபின் பூரணமாய்க்
கர்ப்பம் வளர்ந்தபின்பு கன்னிகையும் பெத்லகேம்
வெற்பாருந் தொன்னகரில் வேதன் பிறக்கவென்று
ஆதியில் சொன்னமொழி யாதரையில் நிறைவேற
சோதிபர னுலகத்தில் தோன்றுமந்த நேரமதில்
பானை யுதரத்தில் பாசமுடன் தாங்கி நின்ற
மரியன்னை தங்க விடம் மண்ணகத்தில் இல்லாமல்,
அத்த னவதரிக்க யாருமிட மில்லையென்று
மெத்த விரக்கமின்றி மேதினியோர் சொன்னதினுல்
நகரின் வெளியிடத்தை நாடியவர் சென்றங்கு
குகையொன்றில் தங்கக் கோதிலாக் கன்னியரும்
சூசையெனு மாதவரும் சோகமுடன் தூரத்தில்

நீசவெல்லை வெற்போரம் நின்ற குகையதனில்
மந்தைகள் தங்குவதால் மாசுற்ற கொட்டகையில்
எந்தை பிறக்கவென ஏந்திழையுந் தங்கினளே.
நல்ல நடுச்சாமம் நாளாதி வாரத்தில்
சொல்லுமார் கழிமாதம் தூயவிரு பத்தைந்தில்
பதினைந்து நாழிகைமேல் பாராளு மீசனந்த
நேரான கன்னியிடம் நின்று பிறந்தாரே.
கன்னியரும் நன்னயமாய்க் கர்த்தனைப் பெற்றெடுத்தாள்
அன்னையரும் நிஷ்டையினி லம்பரனைப் பெற்றெடுத்தாள்
புஷ்பம் மலர்வது போல் புத்திரனைப் பெற்றெடுத்தாள்
கஷ்ட மொன்று மில்லாமல் கான்முளையைப் பெற்றெடுத்தாள்.
அந்தப் பொழுதினிலே அணிமருவும் வானகத்தில்
சந்தமிகுஞ் சம்மனசோர் சந்தோஷ மாகப்பல
கீதங்கள் பாடிக் கிறீஸ்து பிறந்தாரென்று
நாதங்கள் செய்து நலமிகவே தாமகிழ்ந்தார்
நிந்தை துடைக்கவென நேர்சாருந் தாமகிழ்ந்தார்.
அங்கே அருகிருந்த ஆயர்களுஞ் சம்மனசால்
துங்க நிறை செய்தி தொல்லுலகிற் கேட்டுமவர்
விரைவா யிடந்தேடி விந்தையுடன் பாலகனை
உரையாற் புகழ்ந்தேற்றி ஓதி நமஸ்கரித்தார்
தரையிற் சிறம்படவே தற்பரனை போற்றி செய்தார்.
மரியனையுஞ் சூசையுந்தான் மட்டில்லா வின்பமுற்றார்.
பாலன் பிறந்தபின்பு பாங்காக எட்டாம்நாள்
ஆலயங்கொண்டுபோ யாண்டவர்க்கு சேசுவெனும்
நாமமிட்டதன்றி நலிவிருத்த சேதனமாம்
நேமச் சடங்கதனை நிறைவேற்றி யன்னையருஞ்
சூசையுங் களிகூர்ந்தார் சோதிபரன் றன்னருளால்
ஆசை மிகவுற்று ரன்னவரும் அம்மானை.
நாற்பதாம் நாளதினில் நாயகியுஞ் சுத்திகரம்
ஏற்க விதியின்படி ஈந்தார்கள் காணிக்கை
பாலகனைத் தேவனுக்குப் பாங்கா யளித்தார்கள்.
ஆலயத்தை விட்டந்த அன்னையருஞ் சேயேந்தி
வருகையில் மீட்பருக்காய் வையகத்தில் காத்திருந்த
விருத்தாப் பியசிமோன் வேதன் முகங்கண்டு
எதிர்பார்த்த தேவனென இன்ப முடன் கண்டந்த

திபனைப பாலகனை சேரிழையார் கையினின்றும்
வாங்கியணைத்து வல்லவனைத் தோத்தரித்தார்
ஆங்கிருந்த அன்னையவரை யப்பெரியோர் தாம் பார்த்து
உம்மகத்தை யோர்வாளு மூடுருவு மென்றுசொன்னார்.
அம்மையருந் தேவத் திருச்சித்தத் துக்கமைந்தாள்
அப்போ தவர்க்காகக் காத்திருந்த அன்னாளும்
செப்புமுயர்சேயைச் சேன்மக வென்றோர்ந்து
கண்குளிரப் பார்த்துக் கனமகிழ்ச்சி யுற்றாளே
மண்குறையைத் தீர்க்கவந்த மாபரமனென் றுரைத்தாள்.
இவையாவுங் கண்டுகந்த எந்திழையா மாமரியும்
உவகையுற்றாளேனும் உள்விசன முற்றாளே.
மகவைக் காத்தேந்தி மாதவன் சூசையோடு
அகத்துக்குச் சென்றிருந்தாள் ஐயனுடன் அம்மானை.
இவ்வா றிருக்கையிலே எம்பெருமானைத் தேடி
மூவ்வேந்தர் சாஸ்திரிகள் முதலோனைத் தேடி வந்தார்.
கீழ் நாட்டிலுற்ற கேள்விநிறை சாஸ்திரிகள்
வாழ்நாட்டை விட்டு வையகத்தை மீட்கவரும்
துய்யபரனுதித்த சோதியிட மெங்கென்று
மெய்யறியும் நோக்கமுடன் மெசையாவைத் தேடிவந்தார்
நட்சத்திரம் வழிகாட்ட நாத னிருக்குமிடம்
ரட்சகர் வானின் றிறங்குமிடந் தேடிவந்தார்.
ஆடடைக்குங் கொட்டகையி லையன் உருகண்டு
பீடுடைய மூவரசர் பேதமின்றிப் பாதமிசை
வீழ்ந்து வணங்கி வியனடிகள் முத்தமிட்டார்
தாழ்ந்துமவர் பாதத்தில் தங்கமீறை தூபங்கள்
காணிக்கையாக வைத்துக் கத்தனைக் கும்பிட்டார்.
நீணிலத்தை யாண்ட நிருதனறி யாமலே
வந்ததிசை நோக்கி வல்லவனைக் கும்பிட்டு
சொந்த ஊர்போயினர் காண் சோதிடநல் சாஸ்திரிகளும்
யூதர்க் கரசனாய் ஒருபிள்ளை தோன்றியதை
யூதர்க் கரசனா யுற்ற ஏரோது மன்னன்
மூவரைக் கண்டு முதல்வனிடங் காட்டவென
ஏவு மொழிகேளா தேகினதால் கோப முற்று
புதிதா யுதித்த பிரானைசைக் கொல்லவென்று
அதிகாரி எண்ணமுற்றான் அம்பரனைக் கொல்லவென்று

தேவதூத னெச்சரிக்க சேசுவுடன் அன்னைபரும்
காவல் வளஞ்சூசை காணாமல் ஊரைவிட்டு
எரோதன் சதிகேட் டெகிப்தினுக் கேகினரே.
குரோத மிகவுடைய கோமானின் கட்டளையால்
மாசற்ற பிள்ளைகளை மடிய வதைத்தார்கள்
சேசுபிரா னவ்வதையிற் சிக்காமல் தப்பினர்காண்.
திருக்குழந்தை போம்வழியில் சேர்ந்திருந்த பேப்சிலைகள்
உருக்குலைந்து வீழ்ந்துடைந் தோலபிட் டனவென்பார்.
கலக மடங்கியபின் கர்த்தனைக் கூட்டிவந்து
இலகுநச ரேத்தூரில் ஏந்திழை மாமரியாளும்
சூசையுந் தங்கள் தொழிலை நடத்தினராம்.
ஆசையுடன் சேசுவை அன்னார் வளர்த்து வந்தார்.

### காணாமற் போன கர்த்தரைக் கண்டது.

இப்படி யிருக்கையிலே யேசுவுக்குப் பன்னிரண்டு
செப்பும் வயதாகுஞ் சீர்பருவத்தின்போது
தந்தைதா யோடவரும் தக்கஜெரு சலேநகர
விந்தையுறு மாலயத்தில் வேத முறை யின்படியே
பண்டிகையாம் பாஸ்காவைப் பாங்காகக் கொண்டாட
எண்டிசையும் நின்றங்கே ஏகுஜனக் கூட்டமுடன்
போனார் உயர்பரனும் போய்த்திரும்புங் காலையிலே
தானாகத் தங்கிவிட்டார் தற்பரனா ராலயத்தில்.
பெற்றோ ரறியாமல் பிரயாணஞ் செய்தனர்காண்
உற்ற வழியதனில் உயர்மகனில் லாதுகண்டு
மகனைத்தேடி மறுபடியும் பட்டணத்தில்
மிகவாய்க் கவலையுடன் மீண்டும்வரு கின்றனரே.
வந்தெங்குந்தேடி வருத்தமுடன் பார்க்கையிலே
சந்தமகன் சேசுபிரான் சாஸ்திரிகள் மத்தியிலே
பன்னிரண்டாண்டு முடியாத பாலகனார்
மன்னும் பெரியோரின் மாசபையில் வீற்றிருந்து
பிதாவாகுஞ் சர்வேசன் பிரிய சித்தம் நிறைவேற
சதா காலத்துக்குரிய தத்துவங்கள் தர்க்கித்து
ஆச்சரிய முண்டாக ஐபனெடுத் தோதியந்த
ஆச்சாரிமாரை யதிசயிக்கச் செய்திருந்தார்.

அதுகண்டு பெற்ரோ ரதிசயந்தான் கொண்டார்கள்
நிதிகண்ட மானிடர்போல் நேசமுடன் பார்த்தார்கள்.
ஆண்டவரைத்தாம ணுகி அன்னையரு மேதுசொல்வாள்
ஈண்டும்மை மைந்தரோநாம் எங்கெங்கே தேடிடுவோம்
இப்படியுஞ் செய்யலாமோ என்னினிய சேசையா
தப்பாம லெங்களுடன் தாமதிக்கா மல்வாரும்
என்றழைத்த தாய்தந்தைக் கெம்பிரான் சொல்லுவாரம்
என்றன் தாய் தந்தையரே ஏனென்னைத் தேடுகிறீர்
மோட்சப் பிதாவலுவல் முன்பார்க்க வேணுமென்று
சாட்சாத் பரனலுவல் சங்கையுடன் செய்யவென்று
நீங்க ளறியீரோ நேசமுள்ள பெற்ரோரே
தாங்கா தகம்வருந்த வேண்டாமென் ருர்நாதர்.
பின்ன ரிருபேரும் பிள்ளையைத் தம்முடனே
நன்னயமாய்க் கூட்டி நசரேத்தூர் போயினரே
அன்னை மரியாளு மருந்தவராஞ் சூசையுடன்
முன்னாள் வினைதீர்த்து முத்திதர வந்தவரும்
இல்லறஞ் செய்தனர்காண் ஏசுவுடன் அம்மானை
நல்லறத்தை நாடி நலங்கண்டார் அம்மானை.

## திருக்குடும்பம்.

உலகத்தை ரட்சிக்க உற்றபரஞ் சேசுபிரான்
பலகற்றும் மாந்தர் பரிந்துலக வாழ்க்கையினில்
பெற்ரோர்க் கடிபணிந்து பிள்ளைக ளெவ்வாறிருத்தல்
நற்றரையில் என்று நலஞ்சிறக்கக் காட்டுதற்குக்
கைத்தாதை யாஞ்சூசை கன்னிமரி யும்பானை
வைத்தா தரித்துமவர் வாழ்ந்த திருக்குடும்ப
நேர்மையைக் கூறவேன் நீணிலத்தி லம்மானை.
கார்வரையா ரூராம் கனகநச ரேத்தூரில்
சிற்றில்ல மொன்றில் சீரறத்தைச் செய்தார்கள்
பற்றில்லா சூசையப்பர் பாரில் திருக்குடும்பம்
பிழைக்கவெனத் தச்சுப் பெருவேலை செய்தாரே
இழைப்புளியுஞ் சுத்தியலும் ஏற்றுத் தொழில்புரிந்தார்
கஷ்டப்பட் டுழைத்தார் காலைமுதல் மாலைவரை
இஷ்ட முடனுழைத்தே ஈசனைக்காப் பாற்றிவந்தார்

சேசுமகனாருஞ் செய்யுமந்த வேலைக்கு
சூசையப்பருக்குத் துணையா யிருந்துகற்றார்
கையாளாய் நின்று கனவேலை தாஞ்செய்தார்
மெய்யான தேவபரன் மேதினியிற் கீழ்ப்படிந்து
ஆயுதங்க ளாதியவெல் லாமெடுத் தேகொடுத்தார்
நேயமா யூரார்க்கு நேமித்த வேலைகளை
முடித்தபின் கொண்டுபோய் முதலோன் கொடுத்ததுடன்
இடித்துரைத்தாற் கேட்டுமவர் ஏழையின் கூலிபெற்று
இப்படி யல்லவோ பிள்ளை யிருக்கவேணும்
சொற்படியே நடந்தார் சோதிபரன் அம்மானை.
வேதமுறை மாமரியோ வீட்டுவேலை செய்தாளாம்
சேதமின்றிச் சிக்கனமாய்ச் செய்தாள் குடித்தனமும்
தண்ணீர் கொணர்ந்தாள் தகுசமையல் செய்துவைத்தாள்
வண்ணமா யில்லம் வகையாய் விளக்கிச்சுத்தம்
செய்து பலவேலை யானபின்பு தேவதாய்
மெய்வருந்தி வேலை மிகப்பொறுமை யாயிற்றி
ஓய்வான நேரமதில் உற்றநூல் நூற்றிடுவாள்
சேய்பரமன் தன்னிடத்தில் சேர்ந்திருப்பதை நினைத்து
மனமாறப் போற்றியவள் மாபரனை தியானிப்பாள்
இனமாக சேசுபரன் இல்லத்தி லன்னையர்க்கு
உதவி புரிந்திடுவார் உற்றதுணையாயிருப்பார்
நிதமவர்க்குத் தாய்பணிந்து நித்த மகிழ்வோடிருப்பார்
இப்படியே சேசுபிரான் இவ்வுலகில் வந்ததொரு
ஒப்புவமையில்லா உயர் கருமம் நிறைவேறுங்
காலம் வருமளவுங் கத்தனிருந்தாரே.
வயதாகி வானுலகில் வாழ்காலம் வந்தடைய
மயலுலக வாழ்க்கை மாநிலத்தில் முடிவடைய
சேசுமரி யென்னுந் திருநாமங்கள் மொழிந்து
மாசற்ற நீதிமானாய் வானிலத்தில் வாழ்ந்தபின்பு
ஆதரையை மீட்கவரும் ஆண்டவரும் பக்கமுற
கோதசன்ற மாமரியாங் கோதையரும் பக்கமுற
அன்னார் மடியினிலே ஆவி துறந்தாரே
பன்னரிய பாக்கியமாம் பார்மரண முற்றாரே
ஒப்பட்டத்துக் சாதாவாங் கோன்முனிவர் போனபின்பு
சப்பாடு பட்டதனைக் காச்சுப் பொறுப்புந்தான்

கத்தனுக்கு வந்திடவே காசினியி லன்னவரும்
நித்த முழைத்தனையை நேசமுடன் காத்துவந்தார்.
இப்படியே யாண்டவர்க்கு இவ்வுலகிலே வயது
முப்பது நடக்கையிலே முதலோன் குறிகாலம்
மண்டலத்தில் வந்ததுகாண் மானிடர்க்குப் போதகராய்
ஆண்டவரின் ஏற்பாட்டை யாதரையோர்க் கோதிடவே
நசரேத்தூர் விட்டு நாதன் வெளிபோந்த
உசித வரலாற்றை யோதுகிறேன் அம்மானை.

## முதற் சீஷர்களும் முதற் புதுமையும்.

ஐயன் புறப்படுமுன் ஆண்டவருக் காய்ச்சின்னாள்
மெய்யான பாதையை மேலாகச் செம்மை செய்யுஞ்
ஸ்நாபக அருளப்பர் நாளும் ஜனங்களையே
ஞாபகமாகவே ஞாலத்திலே யழைத்து
தவஞ் செய்யப் போதித்துத் தாரணியிலே யிருக்கத்
வந்தார் அவருடைய மாட்சிமையை யட்சணமே
சந்த அருளப்பர் சங்கையொடு கண்டுகொண்டார்.
ஆண்டவரு மாதவரை யங்கணுகித் தண்ணீரால்
மாண்புடைய ஞானதீட்சை தாருமெனக் கேட்டாரே.
அன்னவரும் யான்கொடுக்க அருகனல்ல வென்றுலும்
முன்னவரின் வார்த்தைபடி முதல்ஞான தீட்சையினை
பெற்றுப் பரஞ்சேசு பேருலகில் போதித்து
உற்றதிகு அற்புதங்கள் உண்மையுடன் செய்வதற்குப்
புறப்பட்டார் பொற்பரனும். புண்ணிய நற்பாதை
உறப்பரமன் செய்யுமுனர் ஓயாமல் நாற்பதுநாள்
அல்லும் பகலும் அரியதவஞ் செய்திருந்தார்.
சொல்லரிய சத்துருக்கள் மூவரையுந் தொலைப்பதற்கு
தவத்தோ டுபவாசந் தாரணியில் வேண்டுமெனப்
பவமாந்தர் கண்டறியப் பரன்செய்து காட்டினர்காண்.
உபவாசந் தீர்ந்தவுடன் உண்ணப்போ குந்தருணம்
அபத்தம் நிறையலகை யாண்டவரைச் சோதிக்க
ஆண்டவருஞ் சாத்தானை யப்பாலே யோட்டினரே.
நீண்ட வனாந்தரத்தை நின்மலனுந்தான் கடந்து
வரும்போ தருளப்பர் வாகான சொற்கேட்டு

பரம்பொருளை நாடிப் பகவானைக் காணவந்தார்.
அவ்விதமாய் ஆண்டவரைப் பின்பற்றி வந்தோரில்
எவ்விதத்து மேலா மிருசீஷர் கண்டனரே.
அருளப்பர் என்பவரும் ஆழி வலைவீசிமீன்
பொருளாகப் பற்றும் புண்ணிய பெலவேந்திரரும்
நாதனைப் பின்பற்றி நற்சீஷ ரானதொடு
சோதனைக் கிடந்தந்த சுத்தரா யப்பரையுங்
கூட்டிவந்து விட்டார்கள் நாட்டமுடன் சீஷரானார்
பிலிப்பினையும் நத்தனியேல் பேர்கொண்ட சீஷரையும்
உலப்பொழிய சேசு உவந்தேற்றுக் கொண்டாரே.
இப்போது நம்முடைய ஏசுவுக் கைந்துபேர்
தப்பாத சீஷர்களாய்த் தாரணியிற் கிட்டினராம்.
அப்பரனுஞ் சீஷர்களு மக்கடலைச் சார்ந்ததொரு
அப்பரனார் கலிலேயா நாட்டை யடைந்தனரே.
அங்கே வருஞ்செய்தி அன்னையர்கேட் டானந்தம்
பொங்கி வரவேற்கப் போன நசரேத் தூர்க்கு
ஐந்து மைல் தூரத்தில் அண்டுசிறு கானவூர்
அந்தவூ ரில்நடந்த ஆனகல் யாணமொன்றில்
மாமரியு மைந்தனுமாய் வந்திருந் தாசிதந்தார்.
சேயுடன் கல்யாணச் சீர்விருந்தின் போதுரசம்
இல்லாமற் போக இரக்கநிறை கன்னியரும்
அல்லல் மிகவுற்றுள் அப்பரனைத் தானடைந்து
திராட்சரச மில்லையெனத் திவ்யமகனுக் குரைத்தாள்.
அன்னவரு மட்டோ தருந்தாயைப் பார்த்து நமக்
கென்னவத னுமென்றும் என்கால மின்னும் வர
வில்லையென் றுஞ் சொல்ல இரக்கநிறை மாதரசி
அல்லலுற்றுப் போகாமல் ஆட்களையுந் தானழைத்து
நாதன் மொழிப்படியே நடவுங்கள் என்றுரைத்தாள்.
மாதரசி வார்த்தையை மாபரனுந் தட்டுவரோ
ஜாடிகள் ஆறினிலே ஜலங்கொண்டு வரச்செய்து
நாடியதை யாசீர் வதித்தனர்காண் நற்பரனும்.
ஆறு குடந்தண்ணீர் அற்புதமாய் ரசமாக
மாறி மணவீட்டில் வழங்கப் பெற்றதுவாமே.
அன்னையரு மற்றுமுள்ள யாவரு மனமகிழ்ந்தார்
கன்னிமரி சொற்கேட்டுக் கத்தன் முதற்புதுமை

காசினியிற் செய்தனர்காண் கானாவில் அம்மானை
ஆசியுட னற்புதமு மாற்றினர்காண் அம்மானை.

## தேவாலயப் பிரவேசமும்
## சமாரியப் பெண்ணும்.

அதன் பிறகு நடந்ததை அறைகுவேன் கேளுங்கள்
சுதனுந் திருத்தாயுஞ் சுற்றத்தார் சீஷருடன்
கப்பர்நாவு மென்னுங் கடற்கரையூர் போயினரே.
செப்புமந்த ஊரில் சிலகாலந் தங்கியவர்
ஜெருசலேம் பட்டணத்தில் பாஸ்காத் திருநாளை
துருசாகக் கொண்டாடத் தொன்னகற்கும் போயினரே.
பட்டணத்திலே யிருந்த பார தேவாலயத்தை
கட்டடத்திலே சிறந்த கனக தேவாலயத்தை
வர்த்தகர்கள் சந்தையாய் மாற்றி விலைகூறி
கர்த்த னுறைவிடமாய்க் கருதாமல் பண்டங்கள்
விற்றுப் பொருள்குவித்து வியாபாரஞ் செய்வதையும்
உற்ற பரனார் உளம்வருந்தப் பார்த்துசினங்
கொண்டு கசையெடுத்துக் கோவிலை விட்டவரைத்
தண்டித்துத் துரத்தினதைத் தாரணியில் என்னென்பேன்.
வர்த்தகர்கள் அஞ்சி வளன்கோவில் விட்டகன்றார்
கர்த்தன் சினமஞ்சிக் கணப்பொழுதி லோடினரே.
அப்போது யூதர்சிலர் அங்குவந்து காரணங்கள்
செப்பும் படிகேட்க சேசுபரன் ஏதுசொல்வார்
இந்தே வாலயத்தை இடித்துமே போடுங்கள்
அந்தமாய் முத்தினத்தில் அப்படியே எழுப்புவேன்
என்றதும் மூன்றாம்நாள் ஏகனுயிர்த் தெழுதலையே
சொன்னார் எனக்கண்டார் சூதான சிலயூதர்
மன்னுஞ் சிலரதனை மண்ணி லுணரவில்லை.
ஆயினு மவர்செயலின் அற்புதத்தைக் கண்டவர்கள்
தூயவரின் நாமத்தைச் சொல்லிவிசு வாசித்தார்.
அதன்பின்மூன் றாண்டுகளாய் ஐயன்செய் யற்புதங்கள்
நிதம் புரிந்த புதுமைகள் நீணிலத்தில் கணக்கில்லை.
ஆனாலும் ஆண்டவருக் கங்கணந்த மாற்றலர்கள்
நானா விதத்தினிலு நாளடைவில் ஆயினரே.

அதிரிகள் யாரெனிலோ எரோதியர் பரிசேயர்
சதுசேய ராசாரியர் சார்ந்தபல பேரெனலாம்.
நிக்கொதேமஸ் என்பவனை நின்மலனை நம்பிமறைக்
தக்கரையாய் வந்திரவில் ஆண்டவரைக் கண்டானும்.
அன்னவற்கே ஞான தீட்சை ஆதரையின் மாந்தர்க்கு
இன்றியமை யாததென்றும் ஏகபரன் மானிடர்க்காய்
உறுஞ்சிலுவை யோங்கி உயர்த்தப் படுவரென்றும்
திருமகனார் சொன்னார் திருவருளும் பெற்றானே.
அந்த மனிதனல்லோ ஆண்டவரைக் குருசினின்று
நிந்தையின்றி யிறக்கி நிலவறையிலே புதைத்தான்.
அந்நா ளருளப்பர் அநீதஎரோதராசன்
இன்னாசெய் கட்டளையால் ஏர்சிறையி லிருந்தாராம்.
உத்தமரு மதுகேட்டு யூதேயா நாட்டை விட்டு
அத்தன் கலிலேயா நாட்டிற்குப் போகையிலே
வழியில் சமாரியா வளநாட்டைத்தாங்கடக்க,
இழிவான ஜாதியினள் இபம்பரிய பாவியவள்
சமாரிய மாதொருத்தி ஜலந்திரட்டும் போதுதிரு
குமாரனுங் கிணற்றைக் குறுகியந்தப் பேதையினை
தாகத்துக்குத் தாவென்று தற்பரனார் கேட்டவளைத்
தாகங் களைதீர அவள்தந்த நீருந்தி
ஜீவஜல மாமருளைத் தேவபரன் தந்தவளைப்
பாவ வழியினின்றும் பாரகற்றிச் சென்றாரே
அந்த நல்ல பாவையரு மாண்டவரைக் கண்டறிந்தாள்.
நிந்தையுற்ற சமாரியரும் நேசவிசு வாசிகளாய்
மாறுவதைக் கண்டவுயர் மாண்புநிறை யாண்டவரும்
ஆறுதலுந் தானடைந்தா ராதரையில் அம்மானை.
அப்புறம் ஆண்டவரு மக்கானா வூர் போக
கப்பர் நாவு மூரிலோர் சிற்றரசன் தன்மகன்
சாகக் கிடந்தமையால் சத்தியத்தைப் போதிக்கும்
ஏகனைக் கண்டவனை இரக்கமுட னுயிர்ப்பிக்க
வேண்டுமெனக் கேட்க விபன் பரனு மற்புதமாய்
ஈண்டு குணமாக்கி ஏகபரன் நடந்தாரே.
நாதன் நசரேத்தில் நல்லோய்வு நாள்கழிக்க
ஏதம் விளைத்தந்த ஈனஜனம் உத்தமரைக்
கொல்லத் துணிந்த குறிகண்டு நசரேசு

மெல்ல மறைந்தாரே மேசையா போனரே.
அந்த ஜனங்களிடை ஆண்டவர் சொன்னவுரை
எந்தத்தீர்க் கத்தரிசி தன்ஜென்ம நாட்டினிலே
அங்கி கரிக்கப்பட்டா னென்றார் அம்பரனும்.
பின்னர் அவர்போன பிரியவூர் கப்பர்நாவும்
அன்னவூர் ஆண்டவரின் சொந்தவூ ராயிற்றாம்
ஏனெனிலோ அங்கே அரும்புதுமை பலசெய்தார்
தானும் பலகாலந் தங்கினார் அம்மானை.
ஏற்ற பலசீஷர் ஏகனுக்கு மங்கேதான்
தோற்ற அவர்களையுந் துணையாகக் கொண்டாரே.
அங்கே அவர் செய்த அற்புதங்கள் யாமெடுத்து
துங்கப் புதுமை சிலச் சொல்லுவேன் அம்மானை.

## ஆண்டவர் செய்த புதுமைகள்.

தூயபர னாலயத்தில் பேயலகை பிடித்த
மனிதன்வரக் கண்டு நனியிரக்கந்தாங் கொண்டு
பேய்களை யோட்டிப் பிரியமுடன் காத்தனரே.
நோய்கொண்ட சீமியோன் மாமியரை நூதனமாய்
குணமாக்கி யன்னாள் கொடுத்தஉண வுண்டனரே.
கணப்போதில் ராயப்பர் வீட்டண்டை கணக்கில்லாக்
கூன்குருடும் ஊமைகளும் குணமில்நோ யாளிகளும்
வான்குமரன் பாதம்வந்து வல்லசுகந் தாமடைந்து
சேசுவை வாழ்த்தியவர் சென்றாராம் அம்மானை
ஆசீர் மிகப்பெற் றகமகிழ்ந்தார் அம்மானை.
நாதனா ரச்சமயம் நற்போத கஞ்செய்து
ஓதப்படகிருந்தார் உபதேசந் தீர்ந்தவுடன்
சிமியோனைப் பார்த்து சேசுபிரா னேது சொல்வார்
நிமிஷத்தி லுன்படகை நீள் கடலில் தான் தள்ளி
வலைவீசி மீன்பிடிப்பீர் என்றுரைத்தார் வல்லபிரான்
அலைவீசு மாழியிலே அன்னவரும் நெடுநேரம்
முயன்றோன் றுங் கிட்டவில்லை யென்றாலும் முன்னோனின்
உயர்மொழியைத் தட்டாமல் ஓர்வலையை வீச அந்த
வலைகிழிந்து போமாப்போல் வாகான மச்சங்கள்
அலைபிற் கிடைத்ததுவும் அற்புதமே அம்மானை.

இந்தப் புதுமைகண்டு இராயப்பர் அஞ்சிபரன்
செந்தா மரைப்பதத்தில் வீழ்ந்துமுறை செப்புவாராம்
நான்பாவி யென்னைவிட்டு நீர்போதல் நாயகரே
தான்பாரில் தகுமென்றார் சார்ந்தமற்ற சீஷர்களும்
பிரமிப் படைந்துநின்றார் பீடுடைய சேசுவுந்தான்
தரைமீது மானிடரைத் தாவிப் பிடிப்போனாய்
நீபாவா யென்றுரைத்தார் நீதநிமலாச் சுதனும்.
நோயாளி குஷ்டம்நிறைநொய்யவொரு நிர்ப்பாக்கியன்
இருந்தவூர் தன்னிலே ஏகன் வருகைகண்டு
வருந்தியவர் முன்வந்து வல்லவனைத் தான்பார்த்து
ஆண்டவரே சித்தமுற்றா லடிமேன் குணமடைந்து
கண்டுசுத்தம் நானடைவேன் என்றுபதம் வீழ்ந்தானும்.
சித்த மிருக்குதுகாண் சுத்தமா யிருவென்றார்
அத்தனுரை கேட்டவுடன் அக்குஷ்டம் நீங்கினதே.
அப்போது சேசுபரன் அன்னவனைத் தான்விளித்து
தப்பாமல் நீசென்று ஆசாரிய னிடத்தில்
காட்டுவாய் வேறெங்குங் கழறாதே என்றுரைத்தார்.
நாட்டமுடன் சென்றவனும் நாற்றிசையும் பேசினானும்.
திமிர்வாதக் காரனைத் தேவசுதன் முன்கொணர
அமிர்தவாய் திறந்துபரன் அன்னவனை நோக்கியே
மகனே சுகத்தோ டிருப்பாயுன் மாபவங்கள்
தகவே பொறுக்கப்பட் டனவென்றார் தற்பரனும்
நோயுங் குணமடைய நுட்பமனஸ் தாபமுற்றான்.
தீயர் அதைக்கண்டு தேவதூ ஷணஞ்சொன்னார்
கடவு ளொருவ ரன்றிக் கார்பவங்கள் மன்னிக்கும்
திட முடையார் யாரென்று திட்டமுடன் எண்ணியதைக்
கண்டபரன் சொல்லுவராம் காசினியில் மனுமகற்கு
உண்டுபவம் மன்னிக்கும் ஓங்குவல் லமையென்றார்.
கலிலேயா கடற் றுறையில் கணக்காயன் மத்தேயும்
நிலைகண்டு எம் முடனே வாவென்றார் நேசபரன்
அதுமுதல் அம்மனிதர் ஆண்டவரின் சீஷரானார்.
மதிமிகுந்த மாபரனும் மத்தேயு வில்லத்தில்
விருந்துண் டதைக்கண்ட வேதியர்கள் பாவிகளோ
டருந்துவது மாயக்கா ரோடிருந் துண்ப தையும்
நோக்கியவர் பரனைப் பழித்துரைக்க நுங்குபரன்

வாக்கைப் புவியகத்தில் வாருடனே கேட்டிடுவீர்
வைத்தியன் பிணியாளிக் கன்றிசுக முடையார்க்குக்
கித்ததியில் வேண்டுவதில் நீதிமான் களையல்ல
பாவிகளை பச்சாத்தாபத்துக் கழைக்கவந்தேன்
நீவீர் அறியீரோ நீணிலத்தி லென்றுரைத்தார்.
அக்காலந் தன்னில் அநேகர் ஆண்டவரை
இக்காலம் போல எழிற்பரனை விசுவசித்தார்.
புரோபாத்திக் காவென்னும் புண்யகுளத் தண்டையில்
இருபதோ டிருபதாண் டிருந்ததிமிர் வாதற்கும்
சூம்புகரத் தோனுக்குந் தூயபரன் ஓய்வுதினம்
தாம்புரிந்த நலங்கண்டு தப்பென்ற சேபரியர்
தமக்கேற்ற உத்தாரந் தந்தார் தயாபரனும்
நமக்கேற்ற தல்லவோ நாதனார் செப்புமுறை.

## பன்னிரண்டு அப்போஸ்தலர்.

இப்படி யோராண்டை எம்பிரான் போக்கியபின்
அப்போ ஸ்தலர்களையே அருமறைக் கஸ்திவாரம்
என்று தெரிந்துகொண்டார் ஏசுபிரான் அம்மானை
இன்றியமை யாதவர் இல்லையோ அம்மானை.
அன்னார் தெரிந்துகொள்வ தற்குரிய காரியங்கள்
பன்னிரண்டு பேருக்கும் பாங்கா யெடுத்துரைத்தார்.
எப்போது மன்னவரை ஏகனுந்தான் தம்முடனே
தப்பாமல் வைத்திருந்தார் தாரணியில் அம்மானை
அந்தரங்க மான அருவிஷயங் களையெடுத்து
சிந்தை தெளிந்திடவே செப்பினார் அம்மானை.
அப்போஸ்தலர் தேர்தல் ஆதரையில் முக்கியமென்
றிப்புவியில் முந்தினநாள் எம்பிரான் மாலைமுதல்
இரவெல்லாம் தியானத்தில் ஏகன் செலவிட்டாரே
மறு நாள் சீஷர்களில் பன்னிரண்டு மாந்தரை
பரனார் தெரிந்து கொண்டார் பாரகத்தில் அம்மானை.
வரமெல்லாந் தந்து வையகத்தில் வேதத்தைப்
போதித்து மானிடரைப் புண்யநெறி யிற்றிருப்ப
நீதிபரன் அற்புதங்கள் நீணிலத்தில் செய்வரமும்
அன்னவர்க்குத் தந்தருளி யாசீர் வதித்தனர்காண்

இன்னுமவர் சந்ததியார் இத்தரையிலேபெருகி
ஆண்டவர் செய்தியினை ஆதரைபோர்க் கோதிபல
காண்டரிய கருமங்கள் செய்துவரு கின்றனரே.
அப்போஸ் தலர்நாமம் அறைகுவேன் கேட்டிடுவீர்
செப்பரிய இராயப்பர் சீமோனு மவர்தாமே
பிலவேந்திரார் யாகப்பர் பிலிப்போ டருளப்பர்
நலஞ் செறிந்த பார்த்தலோமை நம்பாத தோமையார்
மத்தேயு ததேயு மருவுசின்ன யாகப்பர்
கத்தனையுங் காட்டிக் கொடுத்தயூ தாஸ்கரியோத்
கனேய ஞகிய சீமோனும் பன்னிருவர்
இனங்கொண்ட அப்போஸ் தலராஞர் ஏசுவுக்கு
இந்த நாமங்களேயும் மத்தேயு எழுதி வைத்தார்.
விந்தையுட னன்னவர்க்கு வேதனுரை தந்தமொழி
கேளுங்கள் சொல்லுகிறேன் கேடுவரா துங்களுக்கு.
நாளு முங்கள் வார்த்தைக்கு நற்செவியைச் சாய்க்கிறவன்
எனக்குச் செவிசாய்க்கு மினிய மானிட ஞவான்
எனச் சொன்ன வேதமொழி இன்றளவு மெய்யாக
நடந்து வருகிறதெந் நாளும் நடந்துவரும்
கடந்ததென வெண்ணுதீர் காசினியில் அம்மானே.
அப்போஸ் தலர்கல்வி யறியாத பேதையர்கள்
அப்புள் அலேமீனே யார்வலேயில் சேர்ப்பவர்கள்
சாதா ரணமனிதர் போலிருந்த மானிடர்தாம்
ஆதார மாயினர்காண் அம்பரம ஞர்மறைக்கு.
மாமரியாள் சூசையப்பர்க் கிரண்டாவ தாயவரும்
தோமிலா நாயகனைத் தொல்புவியில் நன்கறிந்தார்!
மந்த மதிகொண்ட மனிதரா யிருந்திடினும்
சந்தஞ் சேசுபிரான் சத்போத கங்கேட்டு
விந்தையுடன் வேதத்தைப் போதிக்கும் வல்லமையும்
நிந்தை யவமானங்கள் நீணிலத்திலே சகிக்கும்
வல்லமையும் பெற்றூர்கள் வையகத்தில் பின்னுலே
தொல்லுலகில் சேசுபிரான் தூயரா யப்பரையே
திருச் சபையின் தலைவராய் திவ்யபரன் நேமித்தார்.
அருளப்பர் சீஷர்களில் அன்பு நிறை சீஷராய்
விளங்கினர் வேதனவர் வெற்பின் மேல் செய்தருளும்
உளங்கனிந்த போதனையை ஓதிடுவேன் அம்மானே.

## மலைமேற் செய்த பிரசங்கம்.

ஒருநாள் மலைச்சார லேறிவெண் ணாடைபுனை
உருவத்தைப் பின்பற்றி ஓதம்போல் கூட்டமாய்ப்
போயினர் அப்போது பொன்னுலகை விட்டுவந்த
நேயபரன் நின்று நெருங்கிவரு மாந்தர்தமைப்
பார்த்துப் பொறுமையுடன் பாங்கா யமரும்வரை
காத்தா தரிக்கவருங் கத்தனு மங்கிருந்தார்.
சேசுக் கிறீஸ்துலகில் செய்த பிரசங்கமிது
ஆசீர் பிரசங்கம் ஆதரையில் முதலாகும்.
ஐயனொரு கற்பாறை மேலமர்ந்தா ரப்போது
உய்யவழி காட்டி யுலகத்தோ ரட்சண்யம்
அடையும் வகைசொன்னார் அம்பரமன் அம்மானை.
விடையொன்றுஞ் சொல்லாமல் வேதன்மொழி கேட்டாரே:.
மன்பதைகள் பூவில் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு
என்புரிய வேண்டுமென ஏகபரன் அன்றைக்குப்
போதிக்க மனமுவந்தார் போதகரும் அம்மானை
சாதிக்க வேண்டுவன சாற்றினார் அம்மானை.
செல்வசுக போகங்கள் சென்றழியுந் தன்மையன
நல்வினைகளென்றும் நலமளிக்குந் தன்மையன
இவைகளுக் கல்லநாம் இவ்வுலகில் வந்ததுவே
நவையில் பரமனுக்காய் நாம்படைக்கப் பட்டோமே,
இதையறிந்த சேசுபிரான் இவ்வுலகில் மெய்யான
கதியுற்ற பாக்கியவான் யாரென்று சொல்லுகிறார்.
மனத்தே தரித்திரரே மண்ணிற்பாக் கியவான்கள்
இனமா யவர்களுக்கே எழில்மோட்சஞ் சொந்தமதாம்.
சாந்தகுண முள்ளவர்கள் தரையில் பாக்கியவான்கள்
மாந்தரவர் வையகத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.
அழுகின்ற மானிடரும் ஆதரை பாக்கியவான்கள்
பழுதகன்றே யன்னவரு மாறுத லடைவார்கள்,
நீதியின்மேல் தாகமுள்ளோர் நிம்மதியுற் றோராக
ஓதரிய பாக்கியத்தை யுண்மையினி லடைவார்கள்.
இரக்க முடையவர்கள் என்றும் பாக்கியவான்கள்
இரக்க மவர்பெறுவர் இத்தரையில் அம்பானை,
தூய இருதயத்தோர் துன்னும் பாக்கியவான்கள்

ஆயசரு வேசுரனை யன்பாய்த் தரிசிப்பார்.
சமாதானஞ் செய்வோருந் தரையில் பாக்கியவான்கள்
அமல னருமக்கள் எனப்படுவார் அம்மானை.
நீதி நிமித்தமாய் நிஷ்டூரப் படுவோரும்
கோதில் பாக்கியவான்கள் ஏனென்றால் கோனுறையும்
பரலோக மன்னவர்க்குப் பாங்காகச் சொந்தமென்க.
பருவரல் மிக்கார்க்குப் பரலோகங் காத்திருக்கும்
இதுதான் மலைமீதில் எம்பிரான் செய்தவுரை
இதுவாகும் மன்பதையோர்க் கேற்றசுவி சேஷவுரை.
பணக்காரர் தமைக்கண்டு பாரிற் பொறாமை கொள்ளார்
குணமான மனவறியோர் குவலயத்தி லம்மானை.
பொருளுடையார் செல்வம் பொருளிலார் பங்காயின்
அருளோ டார்பெறுவர் வான்செல்வம் அம்மானை.
சகிப்பும் பொறுமையுடன் சாந்தகுண முடையார்
பகைத்துச் சினத்தைவென்று பரலோக மெய்துவர்காண்.
அழுதாரெனப் படுவோர் ஆறுதல் மனஸ்தாபம்
தொழுதே படுவோர்கள் தோமிலா யடைவார்கள்.
நீதியின்மேல் பசிதாகம் நேயமதா யுள்ளவர்கள்
ஆதிதந்த ஆத்துமத்தின் பசிதாகங் கொண்டவராய்
ஆத்துமத்தைப் போஷிக்கு மாவலுடை யாரென்க.
நீத்தார் பசிதாக நீக்குவது நற்கருணை.
இரக்கம் அவசியந்தான் இம்மையில் மாணிடர்க்குப்
இரக்கத்தோ டெம்பரமன் மாந்தர்களைப் பார்ப்பதுபோல்
நமக்கு மிரக்கம் உரியதென்றார் நம்பெருமான்.
இமைக்குஞ் சமாதானம் இயற்றுவார் உத்தமர்கள்
துன்பப்படுவோரும் துன்னுமினல் கொள்வோரும்
இன்ப மனுபவிப்பார் என்றுரைம் பரனுரை.
இந்த மொழிகளெல்லாம் எவ்வளவோ ஆறுதலைத்
தந்தருளி யாவர்க்குந் தந்ததுகாண் அம்மானை.
பாக்கியத்தின் மார்க்கம் பரகதியைக் காட்டுவது
வாக்கியந்தான் கடின வழியெனினுங் கேட்டவர்கள்
நாதனார் மாதிரியை நாளுமவர் கண்டதினால்
ஓதுமவர் மொழியை உற்றுருங் கேட்டார்கள்.
பிரசங்கந் தீர்ந்து பெருமான் மலையைவிட்டு
வரக்கண்ட மாஜனங்கள் இதைப்போல் நாமெங்குங்

கேட்டதில்லை யென்றார்கள் கீர்த்திசித மோங்கினதால்
அன்னாரைப் போல்நாம் அதிசயங்கள் பார்த்திருந்தால்
பொன்னான வார்த்தைகளைக் கேட்டிருந்தால் புண்ணியரை
எவ்வளவோ நேசித் திருப்போமே இவ்வுலகில்
அவ்வளவும் நாமடைய ஐபன்சுவி சேஷமதை
இயற்றுவித்தார் எங்களுக்கு சேசுபரன் அம்மானை
மயற்றவிர்த்து மன்னவனை நேசிப்போம் அம்மானை.

## "நன்மை செய்துகொண்டு போனவர்."

கப்பர்நாவூரில் கனத்ததொரு போர்த்தலைவன்
செப்பரிய உத்தமரின் சீர்வருகை தான்கேட்டுத்
தன்னறிய ஊழியனும் சாகக் கிடந்தமையால்
தன்னாலியன்றளவு தகுந்தபரி காரஞ்செய்
தொன்றும் பயன்படாமல் ஓதரிய அற்புதங்கள்
என்றும் புரிந்துதவும் ஏசுவினை நம்பியவன்
அஞ்ஞானி யாதலினால் அண்டக் கூடாதென்றே
அஞ்ஞால யூதர்களில் மூப்பர்தமை யனுப்பி
மரிமகனை நாடிகுணம் மன்றாடச் சொன்னானே.
அவ்வாறு மன்றாட ஐயனவர் பின்னடந்து
போர்த்தலைவன் வீட்டருகில் போய்க்கொண் டிருக்கையிலே
பார்த்த அந்தப் போர்த்தலைவன் முன்னோடிப் பாதத்தில்
வீழ்ந்து நமஸ்கரித்து வேதனிடஞ் சொல்லுவனும்
தாழ்ந்தவென தில்லத்தில் தாங்கள்புகும் பாக்கியத்திற்
கேற்றவனும்நானல்லேன் ஏசுவெனும் ஆண்டவரே
ஒருவார்த்தை சொன்னாலே ஊழியன் சுகமடைவான்
மறுவார்த்தை பேசி மறுக்காத ஊழியர்கள்
பலபேர் எனக்குண்டு விலகாப் பணியாளர்
வாவென்றால் வருவார்கள் போவென்றால் போவார்கள்
என்று பணிந்துநிற்க ஏகன் பொருளறிந்து
நன்றான் விசுவாசம் நான்கண்ட தில்லையிதைப்
போலிசரா வேலர்க்குள் பொய்யல்ல வென்றுரைத்தார்.
தாலமிசை தற்பரனுந் தான்மகிழ்ச்சி கொண்டாரே
நீபோக லாமுனது நீள்விசுவா சத்தின்படி
நோய்போகும் என்ன நொடிப்பொழுதி லற்புதமாய்

அந்நேரம் ஊழியனும் ஆதரையிற் சொஸ்தமுற்றான்.
எந்நாளும் போர்த்தலைவன் எடுத்துரைக்கும் வார்த்தைதனை
எங்கள் திருச்சபையோர் எடுத்தாண்டு வருகின்றார்
துங்க மொழிகளவன் தூயநவ ஞாபகமாம்.
பிறகொரு நாளாண்டவரும் பின்றொடருங் கூட்டமுடன்
உறவருமப் போஸ்தலரோ டுபர் நயீம் வெற்பேறிப்
பட்டணத்து வாசலண்டை பார்த்திபனும் வருகையிலே
கஷ்டத்துயர் காட்சியாம் ஊர்வலத்தில் பாடையிலே
உயிரில்லாச் சவமொன்றை உத்தமருங் கண்டாரே
உயிரளிக்கச் சித்தமுளங் கொண்டனராக் தற்பரனும்.
செத்தவன்றன் தாய்க்குச்செகமீ தொரேமகனும்
மற்றுமப்பேதையோ மாங்கல்யமில் லாவிதவை.
இரக்கமிகக் கொண்டார் எம்பெருமான் கூட்டத்தைக்
கரத்தால் விலக்கிக் கீலுழுமந்த மாதையழ
வேண்டாமெனச் சொல்லி வேதனந்தப் பாடையினை
ஆண்டவருந் தொட்டே அதை நிறுத்தக் கீழ்வைத்தார்.
சவத்தை யவர்நோக்கி சற்குருவு மேதுசொல்வார்
அவத்தை படும்விதவை ஆறுதற்கா பேதுசொல்வார்
வாலிபனே சொல்லுகிறேன் வாழ எழுந்திருப்பாய்
ஞாலத்தில் என்றாரே நாயக னெம்பெருமானும்.
செத்தமகன் பிழைத்தச் சேயனையுந் தாய்தழுவி
அத்தமதை நீட்டக்கண் டஞ்சி யதிசயித்தார்
பாடையைச் சுற்றிநின்ற பாமர ஜனங்களுமே.
நாடிவந்த நாயகனார் நடந்து மறைந்தாரே.
ஆண்டவர் ஏழைகளுக் கன்புமனு தாபமுடன்
வேண்டியதை யீந்து வியனிரக்கங் காட்டுவதை
இந்தப் புதுமை யினிதியம்பு கின்றதுவே
நந்தம் பராபரனின் நல்லருளை என்னென்பேன்.

## மரியமதலேனாள் மனந் திரும்புதல்.

ஆனால் ஒருதிவசம் ஆண்டவரைப் பின்றொடர்ந்த
மானஜனங்க ளிடை மாதொருத்தி தோன்றினளே
அங்கமதில் பட்டாடை யழகா யணிந்திருந்தாள்
தங்கவொளி திகழும் ஜோதிநிறை யாபரணம்

தகதகவென்றெங்கு மின்னத் தைபலவள் கைவீசி
நகைமுகத் தோடங்குற்றாள் நாரியவள் யாரென்கோ!
அன்னவளுங் கங்கென்ன வேலைபொரு சமயம்
முன்னவரைத் தான்பழிக்க முன்னேறி வந்தனளோ.
நாடறிந்த மாதவளும் நல்வினைகள் தானறியாள்
கேடறிந்த பாவியாய்க் கேடுகெட்ட நாரியாய்
உத்தமர்கள்கூடும் உயர்சபையில் சேராது
நித்தம்பல விதத்தும் துன்மார்க் களாய்நின்று
தேவனை நினையாத தீயமனப் பாவியவள்
பாவப் படுகுழியில் பன்னாட் கிடந்ததையல்
அந்த வழியாக ஆரணங்கும் போகையிலே
மந்தைபோல் மானிடர்கள் மல்கியிருத்தற் கண்டு
என்னவென் றேயறியும் இயல்வினோதப் பிரியம்
துன்னியவள் வந்தாள் தூர்த்தையவள் அம்மானை.
மாதவளின் நாமம் மரியமத லேனென்பர்
பாதகத்தி லாடிநின்ற பாவியவள் நோக்கினாள்.
போதகரின் சீர்முகத்தைப் பொங்குமருள் முகத்தை
நன்றாகவுற்று நாரியுந்தான் பார்க்கின்றாள்
என்று நிகழ்ந்தறியா எழிலுயிர்ப்பைப் பார்க்கின்றாள்
விதவை மகனுயிர்த்த விந்தையினைப் பார்க்கின்றாள்
உதவி புரிந்ததிரு உத்தமரைப் பார்க்கின்றாள்.
அதனால்தான் அன்னவளும் ஐயன்மொழி கேட்கவந்தாள்.
முதலோன் பிரசங்கம் முடிந்துமவர் போகின்றார்.
அப்போ மதலேனாள் .அவர்கூட வேபோகத்
தப்பாமல் எண்ணினளாம் தானணிந்த ஆடையையும்
உயர்ந்த நகைகளையும் உன்னிப்பெரு மூச்செறிந்து
கயல்விழியுங் கத்தனுடன் போகாமல் நின்றனளாம்.
நாதனார் போனபின் மாதுமத லேனாளும்
வீட்டுக்குச் சென்றாள் விசனமுடன் அம்மானை.
அப்பால் பரமனுந்தான் அங்கோர் பரிசேயன்
செப்பும் விருந்தினுக்குச் சென்றிருந்தார் செல்வனவன்
செருக்கால் பராபரனைத் தச்சனது சேயென்று
மரியாதை செய்யாதால் மன்னியவர் சாமான்ய
விருந்தினர் வீற்றிருந்த தாழ்விடத்திலே யமர்ந்தார்.
இருந்த இடந்தனிலே வந்திழையாம் பாவியவள்

வந்து பதம்பணிந்து வல்லவன்தா ளைக்கண்ணீர்
சிந்திக் கழுவியதைச் சீர்கூந்த லாற்றுடைத்து
கந்தப் பரிமளத்தின் தைலத்தால் காலடியை
விந்தையாய்ப் பூசி விலைமகளு முத்தமிட்டாள்.
இந்தச் செயலை இகழ்ச்சியுடன் சுட்டினான்
அந்த விருந்தினரில் ஆனவொரு தருவும்.
பாவி மதலேனாள் பகட்டான வேஷமெல்லாம்
போமென் றொதுக்கிவிட்டுப் பூண்டாள் முரட்டாடை.
கண்ணீர் பெருகிநின்றாள் கந்த பரிமளந்தான்
உன்னுமந்த வீடெங்கும் ஓங்கியே வீசினது.
பரிசேயன் கோபங்கொண்டு பாவியவ ளென்றறிந்தும்
விரைவாக வீட்டைவிட் டோட்டாமல் நசரேயன்
எவ்வாறிருந்தனரென் றெண்ணினான் சீமோனென்னும்
அந்தப் பரிசேயன் அஃதறிந்த ஆண்டவரும்
சிந்தையுற்ற சீமோனுக் குரைத்தார் தனியர்களின்
உவமைதனைப் பின்னர் உத்தமரும் சொல்வாராம்
நானுந்தன் வீட்டுக்கு நம்பிவந்தேன் நீயதனைத்
தானுமுண ராமலே தக்கமரியா தையொன்றும்
செய்யவில்லை இன்னவளென் சேவடியைக் கண்ணீரால்
பையக் கழுவித்தன் கூந்தலினா லப்பாவை
துடைத்து முத்தமிட்டாள் சுகந்தமிகு தைலத்தால்
அடியிணைகள் பூசி யழுகின்றாள் அன்னவளின்
நேசத்தைக் கண்டாயோ நேசமிகுந் தவர்க்கே
பாசங்கள் நீங்கமிகு பாவமன் னிக்கப்படும்
என்று மதலேனை ஏகன் விளித்துரைப்பார்
உன்றன் பவமனைத்தும் மன்னிப் படைந்தனவுன்
விசுவாசம் உன்னை இரட்சித் ததுசொன்னேன்
இசைந்தசமா தானத்தோ டேகுவா யென்றனுப்ப
மரியமத லேனாளும் மன்னிப் படைந்ததுடன்
பிரியமனஸ் தாபத்தால் பீனமுற்றாள் அம்மானை.
சேசுபரன் அற்புதங்கள் தேகமொடு நில்லாமல்
மாசற்ற வாத்துமங்கள் மாசகன்றாரோக்கியமும்
தந்தனவிச் சம்பவத்தால் தற்பரனின் வல்லமையும்
அந்தமோ டறிந்திடுவீர் ஆதரையில் அம்மானை.
அந்நாள் முதற்கொண்டு மாதவளும் ஆண்டவரோ

டெந்நாளும் போயவருக் கேற்ற பணிவிடைகள்
செய்து மனமகிழ்ந்தாள் சேயிழையும் அம்மானை
எய்தினாள் பல்வரங்கள் ஏந்திழையும் அம்மானை.
போதகத்தின் போது தடைஏதும் வரக்கூடாதென்
றாண்டவரும் ஓர்தினத்தில் அன்னையருஞ் சோதரரும்
ஈண்டுமைக் காணவந்தார் என்றொருவன் சொன்னதற்கு
தாயார் சகோதரரும் யாரென்று தாம்வினவி
நேயமுள்ள சீஷர்களை நின்மலனுங் காட்டியவர்
தாமேயென் தாயும் சகோதரரும் ஏனெனிலோ
சாமியென் பிதாவுடைய சர்வசித்தந் தன்னையிவண்
நிறைவேற்று கின்றவர்கள் நீணிலத்தில் எந்தன்
உறவான சோதரரும் உற்றவன்னை யாகின்றார்
என்றுரைத்தார் அன்புடைய ஏகனுந்தான் அம்மானை
அன்றுமுதல் ஆண்டவரின் சோதரர்நாம் அம்மானை.

### சத்போதகம்,

நாதன்செய் அற்புதங்கள் நாடெல்லாம் போய்ப்பரவப்
போதகத்தை கேட்டுப் புனிதரா கும்பொருட்டு
மாந்தர் பெருங்கூட்டம் வந்துகொண்டே யிருந்ததுகாண்
சேர்ந்துவருங் கூட்டத்தைச் சேசுபிரான் ஆசிதந்து
உபதேசஞ் செய்தார் உவந்தவரை யாதரித்தார்
விபரமாய் வேண்டியதை விமலன் எடுத்துரைத்தார்
அதிகாரத் தோடவரும் ஆர்வமுடன் பேசினராம்
சதிகாரர் சூழ்ச்சிக்கஞ் சாமல்பரன் பேசினராம்
மெய்யான சத்தியங்கள் மேலவரும் பேசினராம்
பொய்யான போதகரைக் கண்டித்துப் பேசினராம்.
ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்தாரே.
இனமாக ஆதரித்தார் எம்பிரான் அம்மானை.
உவமைகளைக் கூறி உத்தமரும் போதித்தார்
நலங்கள் செய்தவரும் நற்போதகஞ் செய்தார்
கதைகள் வழியாகக் கருத்தெடுத்து சொன்னதினால்
எதையும் எளிதினிலே கண்டறிந்தார் அம்மானை.
ஆகாயத்துப் பட்சிகளும் அணிலீலி புஷ்பங்களும்
ஏகன் பிரசங்கத்துக் கேற்றபொரு ளாயினவே

ஆத்துமத்தின் மேலான அந்தஸ்தை ஆண்டவரும்
நேர்த்தியாய் மருள்நீங்க நிமலன் எடுத்துரைத்தார்.
சராசரங்க ளத்தனையும் பராபரத்தின் வல்லமையால்
பாதுகாக்கப் பட்டுவரும் பக்குவத்தை யெடுத்தோதி
பூதலத்து மாந்தர் பொருளீட்டு மேக்கமுடன்
இருத்தற்கூ டாதென்று எம்பெருமான் சொன்னாரே.
வருத்தப் படுவோர்க்கு வாகான வார்த்தை சொன்னார்
போதகத்தின் போதெவரும் புண்ணியரை மறுத்துரைக்க
நாதன் மொழிக்கெதிராய் நவிலத் துணியவில்லை.
தந்தைகள் பிள்ளைகளைத் தாரணியி லேநடத்தும்
அந்தவிதமாகவே அனைவர்க்குந் தேவபரன்
வேண்டுவன வெல்லாம் விரும்பி யளிக்கின்றார்
என்னும் உண்மையையும் எறிவலையின் மீனங்களை
முன்னவ ருதாரணமாய் முடிவில் நல்லவரும்
தீயவரும் வெவ்வேறாய்த் தேவனால் பிரிக்கப்பட்டுத்
தூயோர்கள் மோட்சமுறத் துன்னுமந்தப் பாவிகளோ
நரகத்தில் வீழ்வரென்னும் நந்தாத உண்மையையும்
தரையோர்க் கெடுத்துரைக்க இறையவனைச் சுற்றிநின்ற
செப்படவர் தாய்கேட்டுச் செம்மையாய்த் தெரிந்துகொண்டார்.
சிறியவோர் நாணயத்தைப் போக்கடித்த சேயிழைதான்
அறியவே தான்தேடும் அரிய உவமைதன்னை
கூலிக்கு வேலைசெய்த குடியானோர் கூலிபெற்ற
மேலான உவமை பலவிடங்களில் வீழ்ந்தவிதை
உவமை பலன்கொடுக்கா அத்தி மரத்துவமை
பவமாருந் தனவந்தன் டன்னுலா சரினுவமை
தானியங்களைக் குவிக்கத் தக்க களஞ்சியங்கள்
பீனமுடன் சட்டனினை பெரியதன வானுவமை
ஆகிய பல்வேறு உவமைகளால் ஆண்டவரும்
ஜனங்களுக்குப் போதித்தார் சற்குருவாம் சேசுபரன்.
நினையாத நேரத்தில் மரணந்தான் வருமென்றும்
உலக மனைத்தையும் ஓர்மனிதன் ஆதீனம்
விலகாமல் செய்தாலும் மேலான ஆத்துமத்தை
நஷ்டமாக்கிக் கொண்டால் நமக்குலாப மென்னவென்றும்
இஷ்டமுடன் எஜமானர் எப்பொழுது வந்தாலும்
காத்திருந்துதான் கதவைக் கருத்துடன் திறந்துவிடும்

ஏற்றபணி யாளரைப்போ லிருக்கவேண்டும் என்றும்
ஆண்டவரும் போதித்தார் அன்னவர்மேற் குற்றதனைக்
காண்பான் அவண்வந்தார் கறைநெஞ்சப் பரிசேயர்
அவரைப் பிடிக்கவந்த ஆட்களுந்தான் போதகத்தை
தவயோகி யார்மொழியைத் தரணியிற் கேட்டார்கள்
ஆச்சரிய முற்றவர்கள் ஆண்டவரைத் தீண்டாமல்
கூச்சமுடன் போயினரே கூறும் பகைவருந்தாம்.
காரணங் கேட்கையிலே காசினியி லேயவர்போல்
நீர்மொழி பேசினதைத் திட்டமுடன் கண்டதில்லை
என்றுவிடை பகர்ந்தார் ஏவலரும் அம்மானை
அன்று நடந்ததுவே இன்றமுண்டாம் அம்மானை.
ஆண்டவரை யண்டிவந்த உளவிற்பிணி யாளர்தம்மைத்
தீண்டி நலம்புரிந்தார் சேசுபரன் அம்மானை
உண்பதற்கும் நேரமின்றி உத்தமருங் கூட்டமதை
அன்புடனே யாதரித்தார் பாரினிலே அம்மானை
தூர்ச்சந்தம் வீசும் தொலையாப் பிணியாளர்
வர்க்கத்தைத்தாங் கண்டு வாட்டமின்றி யேபொறுமை
காட்டிக் குணந்தந்தார் கத்தனுந்தான் அம்மானை
வாட்டமின்றியே யிருந்தார் வானபரன் அம்மானை.

## காற்றையுங் கடலையும் அடக்குதல்.

அலுத்துக் களைத்திருந்த ஆண்டவரும் ஓர்தினத்தில்
பலத்த ஜனக்கூட்டம் பாரில்விடா தென்றெண்ணி
சீடர்களைப் பார்த்தும் சேசுபரன் ஏதுசொல்வார்
ஆடுதிரை ஏரியினை நாங்கடந்து போவோமென்றார்.
அவரின் களைப்பறிந்த ஆண்டவரின் சீஷர்களும்
தவநாதர் களைப்பாறத் தக்கவழி யீதெனவே
நாதன் பொருளறிந்து நற்துணைராஞ் சீஷர்சிலர்
ஓதக் கரைக்கவரை உண்மையுடன் கூட்டிச் சென்றார்.
மற்றவர்கள் பின்னால் வரும்ஜனத்தைத் தடுத்துநிற்க
ஐயன் படகேற அங்கிருந்த சீஷரெல்லாம்
பையவே ஏறிப் படகுதள்ளி விட்டார்கள்.
சேசுபரன் பின்புறத்தில் சென்னிசாய்த் தந்தமுடன்
நேசமுறும் நித்திரைசெய் சிங்காரத் தைக்கண்டார்.

சீடர்கள் யாவருமே சேசுவின் திவ்யமுகப்
பீடதனைக் கண்டு பெரிதுமா னந்தங்கொண்
டவர்சொன்ன போதகத்தின் அர்த்தத்தைப் பற்றியே
உவரியின்மேல் பேசி உளம்வியந்து போயினராம்.
பால்போல் நிலவெரிக்கப் பாயகடல் தானமைந்து
மேலாடி யசைந்திடவே மேலவரு மேறியுற்ற
தோணி நடுக்கடலில் தொலையின்றிப் போகையிலே
காணுஞ் சிலசீஷர் கண்ணுறக்க முற்றனர்காண்.
அப்போ தசைவற்ற ஆகாயந் தன்னிலொரு
செப்பரிய பெருங்காற்றுச் சீறி யடித்திடவே
அலைகள் மலைபோல அங்கெழுந்து தோணியினை
மலைநடுவிற் பிரசண்ட மாருதந்தான் வீசியதை
மோதி யலைக்கழிக்க முயன்றதுகாண் அம்மானை.
பீதிமிகக் கொண்டார்கள் பேதைகளாஞ் சீஷர்களும்
படகு கவிழ்ந்துவிடும் பாணிக் கிரையாகி
விடுதல் நிசமென்று வெருவாய்ப் பயந்தார்கள்.
தண்ணீர் படகினிலே பாய்ந்து நிறைந்ததினால்
எண்ணு விபத்தினுக்கே எல்லோரு முள்ளானார்.
ஆண்டவரோ என்றால் நித்திரையி லாழ்ந்திருந்தார்.
ஆண்டவரை யண்டி யெழுப்பத் துணியாமல்
பேதையந்தச் சீஷர் பெரிதுங் கலங்கழுற்றார்.
மோதி யெழுந்துவரும் மூரியலைக் கண்டஞ்சி
நடுநடுங்கி யன்னவரும் நாயகரைத் தாமணுகி
படுகடலில் நின்று பரிதவிக்குஞ் சீஷர்களும்
சாமியிதோ சாகின்றோம் சார்ந்தெம்மைக் காப்பாற்றும்
நேமியிலே சாகின்றோம் நேர்ந்தெம்மைக் காப்பாற்றும்
என்றலறிக் கூவினதை யேசுனுந்தான் கண்விழித்து
நின்றவரி னச்சத்தை நேயபரன் பார்த்துரைப்பார்.
அற்பவிசு வாசிகளே அஞ்சுவானே னென்றுசொல்லி
தற்பரனும் தானெழுந்து தயவுமிகக் கூர்ந்துடனே
காற்றைக் கனைகடலைக் கத்த னதட்டிடவே
சீற்றமின்றி யாவுமே சீக்கிரத்தில் தாமடங்க
எங்கும் அமைதிகுடி கொண்டதையான் என்னென்பேன்
பொங்கும் அலைகடலின் கொந்தளிப்புப் போயொழிய
புயற்காற் றடங்கிற்றப் புண்ணியரின் வல்லமையால்.

பயந்திருந்த மாந்தர் படுதிகிலோ டாண்டவரின்
பாதத்தில் வீழ்ந்துநன் றி பன்னாமல் சீஷர்களும்
மோதிவரும் காற்றினையும் மூரி கடலினையும்
அதிகாரத் தோடெழுந்தே ஐயன் அதட்டுகின்றார்
அதிரவமா யாவும் அடங்கியமை கின்றனவே
இவர்எப்பேர்ப் பட்டவரா யிருத்தல்வேண்டு மென்றார்கள்
உவரியில் மீன்பிடிக்க உற்றபிற செம்படவர்
இந்த அதிசயத்தை எதிரில்கண் டஞ்சியே
விந்தை மிகக்கொண்டு வெய்துயிர்த்தார் அம்மானை.
இவ்வா றவர்களுடன் இருந்துகடல் காற்றினை
செவ்வாய் மொழியாலும் செம்மலவர் தேவனென்றும்
மெய்யாங் கடவுளென்றும் மேசையா தானென்றும்
உய்யும்வழி காட்டவந்த உத்தமரென் றேயன்னார்
அறிந்தாரோ என்னவோ ஆதரையில் அம்மானை
பரிந்துதவு மையன் பராபரன்காண் அம்மானை.

## ஜாயீர் மகள் உயிர்த்தல்.

ஏரியைக் கடந்தவர்கள் ஏராசேனியர் தேசத்தைச்
சேருகையில் காலைநேர மாயிருக்கச் சீர்குலைந்த
ஓர்மனிதன் தென்பட்டான் உய்யும்வகை யோராமல்
கோர உருவினனாய்க் கொடியோனாய்க் கல்லறைகள்
இருந்த விடந்தனிலே எந்நாளு மேவசித்து
திருந்த வகையின்றித் திரளான பேய்களால்
பிடிக்கப் பட்டிருந்தான் பேதையவன் அம்மானை.
ஆண்டவர் அப்பக்கம் வந்ததுகண் டம்மனிதன்
ஆண்டெய்தியவர் பாதம் வீழ்ந்துரைப்பான் அம்மானை
உன்னதசர் வேசுரனின் குமாரனே உங்களுக்கும்
என்றனக்கும் என்னஎனக் கின்னலொன்றும் செய்யாதீர்
மன்றாடு கின்றனன்யான் என்றுரைக்க ஆண்டவரும்
என்னவுன்பே ரென்றார் படையென்று விடைபகர்ந்தான்
அன்னவனைப் பலபேய்கள் ஆண்டதுவே அதன்பொருளாம்.
பேய்களெல்லாம் சேர்ந்து பெருமானை மன்றாட
மேய்ந்துகொண் டங்கிருந்த பன்றிகள்மேல் போகும்படி
சேசுபரன் ஏவினார் செப்புமுறைப் படியே

சீடர்கள் யாவருமே சேசுவின் திவ்யமுகப்
பீடதனைக் கண்டு பெரிதுமா னந்தங்கொண்
டவர்சொன்ன போதகத்தின் அர்த்தத்தைப் பற்றியே
உவரியின்மேல் பேசி உளம்வியந்து போயினராம்.
பால்போல் நிலவெரிக்கப் பாயகடல் தானமைந்து
மேலாடி யசைந்திடவே மேலவரு மேறியுற்ற
தோணி நடுக்கடலில் தொல்லையின்றிப் போகையிலே
காணுஞ் சிலசீஷர் கண்ணுறக்க முற்றனர்காண்.
அப்போ தசைவற்ற ஆகாயந் தன்னிலொரு
செப்பரிய பெருங்காற்றுச் சீறி யடித்திடவே
ஆலைகள் மலைபோல அங்கெழுந்து தோணியினை
மலைநடுவிற் பிரசண்ட மாருதந்தான் வீசியதை
மோதி யலைக்கழிக்க முயன்றதுகாண் அம்மானை.
பீதிமிகக் கொண்டார்கள் பேதைகளாஞ் சீஷர்களும்
படகு கவிழ்ந்துவிடும் பாணிக் கிரையாகி
விடுதல் நிசமென்று வெருவாய்ப் பயந்தார்கள்.
தண்ணீர் படகினிலே பாய்ந்து நிறைந்ததினால்
எண்ணு விபத்தினுக்கே எல்லோரு முள்ளானார்.
ஆண்டவரோ என்றால் நித்திரையி லாழ்ந்திருந்தார்.
ஆண்டவரை யண்டி யெழுப்பத் துணியாமல்
பேதையர்தச் சீஷர் பெரிதுங் கலங்கமுற்றார்.
மோதி யெழுந்துவரும் மூரியலைக் கண்டஞ்சி
நடுநடுங்கி யன்னவரும் நாயகரைத் தாமணுகி
படுகடலில் நின்று பரிதவிக்கும் சீஷர்களும்
சாமியிதோ சாகின்றோம் சார்ந்தெம்மைக் காப்பாற்றும்
நேமியிலே சாகின்றோம் நேர்ந்தெம்மைக் காப்பாற்றும்
என்றலறிக் கூவினதை யேகனுந்தான் கண்விழித்து
நின்றவரி னச்சத்தை நேயபரன் பார்த்துரைப்பார்.
அற்பவிசு வாசிகளே அஞ்சுவானே னென்றுசொல்லி
தற்பரனும் தானெழுந்து தயவுமிகக் கூர்ந்துடனே
காற்றைக் கனைகடலைக் கத்த னதட்டிடவே
சீற்றமின்றி யாவுமே சீக்கிரத்தில் தாமடங்க
எங்கும் அமைதிகுடி கொண்டதையான் என்னென்பேன்
பொங்கும் அலைகடலின் கொந்தளிப்புப் போயொழிய
புயற்காற் றடங்கிற்றப் புண்ணியரின் வல்லமையால்.

பயந்திருந்த மாந்தர் படுதிகிலோ டாண்டவரின்
பாதத்தில் வீழ்ந்துநன்றி பண்ணாமல் சீஷர்களும்
மோதிவரும் காற்றினையும் மூரி கடலினையும்
அதிகாரத் தோடெழுந்தே ஐயன் அதட்டுகின்றார்
அதிரவமா யாவும் அடங்கியமை கின்றனவே
இவர்எப்பேர்ப் பட்டவரா யிருத்தல்வேண்டு மென்றார்கள்
உவரியில் மீன்பிடிக்க உற்றபிற செம்படவர்
இந்த அதிசயத்தை எதிரில்கண் டஞ்சியே
விந்தை மிகக்கொண்டு வெய்துயிர்த்தார் அம்மானை.
இவ்வா றவர்களுடன் இருந்துகடல் காற்றினை
செவ்வாய் மொழியாளும் செம்மலவர் தேவனென்றும்
மெய்யாங் கடவுளென்றும் மேசையா தானென்றும்
உய்யும்வழி காட்டவந்த உத்தமரென் றேயன்னோர்
அறிந்தாரோ என்னவோ ஆதரையில் அம்மானை
பரிந்துதவு மையன் பராபரன்காண் அம்மானை.

## ஜாயீர் மகள் உயிர்த்தல்.

ஏரியைக் கடந்தவர்கள் கராசேனியர் தேசத்தைச்
சேருகையில் காலைநேர மாயிருக்கச் சீர்குலைந்த
ஓர்மனிதன் தென்பட்டான் உய்யும்வகை யோராமல்
கோர உருவினனாய்க் கொடியோனாய்க் கல்லறைகள்
இருந்த விடந்தனிலே எந்நாளு மேவசித்து
திருந்த வகையின்றித் திரளான பேய்களால்
பிடிக்கப் பட்டிருந்தான் பேதையவன் அம்மானை.
ஆண்டவர் அப்பக்கம் வந்ததுகண் டம்மனிதன்
ஆண்டெய்தியவர் பாதம் வீழ்ந்துரைப்பான் அம்மானை
உன்னதசர் வேசுரனின் குமாரனே உங்களுக்கும்
என்றனக்கும் என்னஎனக் கின்னலொன்றும் செய்யாதீர்
மன்றாடு கின்றனன்யான் என்றுரைக்க ஆண்டவரும்
என்னவுன்பே ரென்றார் படையென்று விடைபகர்ந்தான்
அன்னவனைப் பலபேய்கள் ஆண்டதுவே அதன்பொருளாம்.
பேய்களெல்லாம் சேர்ந்து பெருமானை மன்றாட
மேய்ந்துகொண் டங்கிருந்த பன்றிகள்மேல் போகும்படி
சேசுபரன் ஏவினார் செப்புமுறைப் படியே

நீசஅலகைகளும் சேர்ந்தபன்றிக் கூட்டத்தில்
புகுந்தன பன்றிகளும் பொக்கனவே கடற்பாய்ந்து
மிகுந்தண்ணீர் வீழ்ந்து விரைவினிலே மாண்டனவாம்
அந்தமனிதனுந்தான் அப்போதே சுகமடைந்து
சந்தோஷமா யிருந்தான் தற்பரம னருளாலே.
அதைக்கண்ட ஜனங்கள் அனைவோரு மச்சமுற்றார்.
உதவிபெற்ற அம்மனிதன் ஊரெங்கும் சாற்றினனும்.
பின்னர்ப் பரமனுந்தான் பினமுடன் அவ்வேரி
துன்னிய மேற்கரைகுக் துணைவருடன் போகவே
வழக்கம்போல் கூட்டமாய் வந்து ஜனம் அவரை
அழைத்துவர வேற்றனரே அப்போது சேசுபிரான்
அவர்கள்நடு வேயிருந்தார் ஆர்வமுடன் வேண்டிவன
உவந்தளித்தா ரக்காலை உண்டான பரபரப்பைக்
கண்டார் வழிவிலகக் கர்த்தனையே நாடியொரு
அண்டாத யூதன்வரக் கண்டாராம் எம்பெருமான்.
வந்தவன்பேர் ஜாயீர் வயதுபன்னிரண்டாகும்
சொந்தமகள் அப்போது சொஸ்தமுற வகையின்றி
சாகக் கிடந்தாளாம் சார்ந்தவனும் தன்னுள்ளம்
நோக அவர்பாதம் வீழ்ந்து நுவலுவனும்.
ஆண்டவரே என்மகளும் மாண்டுபோந் தருணத்தில்
இருக்கின்றாள் உம்கரத்தை இன்னவள்மேல் வைத்திட்டால்
வருத்தமிக நீங்கி வல்லுயிராய் வாழ்ந்திடுவாள்
என்றதும எம்பெருமான் சீஷரோ டவன்பிறகே
சென்றனர் ஜனக்கூட்டம் சேசுவுடன் அற்புதத்தைக்
காண்பான் தொடர்ந்தனராம் கத்தனைச்சூழ்ந் தம்மானே.
மாண்புடைய தேவபரன் மங்கையில்லம் நாடிவர
பணியா ளெதிரோடி யணிமகளும் மாண்டவளே
எசமானைத் தொந்திரவு செய்யாதீர் என்றனே.
நசரேசு நாயகரும் நாட்டமுடன் ஏது சொல்வார்
அஞ்சாமல் நீயும்விசு வாசமா யிருவென்றார்
தஞ்ச மெனவந்த தாசனையும் காக்கவென்று
வீட்டுக்குள் போயினராம் வேதமுறை எம்பெருமான்
பேரட்டியுட னோலமிட்டுப் பொங்கியழுஞ் சத்தமங்கு
நிறைந்திருக்கக் கண்டார் நேசமுள்ள சேசுபிரான்.
அறைந்தழு வோரை யவர்விளித்து மேதுசொல்வார்

அந்தப்பெண் சாகவில்லை அழவேண்டாம் நித்திரையில்
பந்தித் திருக்கின்றாள் பாவையவள் என்றாரே.
அம்மொழிகேட் டங்கிருந்த மாந்தர் நகைத்தார்கள்
நம்மங்கை மாண்டதுநிச் சயமென்று நம்பினராம்
ஆயினு மாண்டவர்தாம் இராயப்பர் அருளப்பர்
தாயாதி யாகப்பர் தாய்தந்தை யாரெனரைத்
தவிர்த்துமற்றும் யாவரையுந் தங்காம லேபகற்றி
சவமாய்க் கிடக்கின்ற தையலரைத் தாமணுகி
சேர்த்திருந்த கரமொன்றைச் சேசுபிரான் பற்றியொரு
வார்த்தைசொன்னார் கேளுங்கள் வல்லபரன் அம்மானை.
சிறுமங்கை யேநீ எழுந்திருப்பாய் என்றவுடன்
சிறுமங்கை நேத்திரங்கள் திறந்தவரை நோக்கியுடன்
புன்னகையுங் கொண்டாள் புரிந்தாள் நமஸ்காரம்
பின்னர் எழுந்துநின்று பெற்றோர் எதிர்நடந்தாள்
ஒன்றுமில்லா தாள்போல ஒய்யாரமாய் நடந்தாள்.
அன்றந்த அற்புதத்தைக் கண்டபெற்றோ ரானந்த
பரவசத்தி லாழ்ந்துவாய் திறவாமல் பார்த்திருந்தார்.
பரஞ்சேசு நாதனுந்தான் பாவையருக் காகாரம்
கொடுக்கும் படிமொழிந்து கூறுமந்த மூவரையும்
அடுத்தசந் தோஷத்தில் ஆழ்ந்திருக்க விட்டுபரன்
சீடர்களைக் கூட்டி வெளிசென்றார் ஆண்டவரும்.
நாடெங்கும் நன்மைபல நாதன் புரிந்தாரே.
இந்தப் புதுமைகளை எல்லாங்கண் கூடாக
விந்தையுடன் பார்த்திருந்த வேதனினப் போஸ்தலரும்
விசுவாசந் தன்னில் மிகவா யுறுதிபெற்று
விசுவாசத்தோடு வியன்பக்தி நம்பிக்கை
ஓங்கி வளர்ந்ததுடன் உண்மையுட னாண்டவரை
நீங்கா திருந்தவரை நேசிக்க லாயினராம்.
வாக்குவல்ல பங்கொண்டு வன்மையுடன் நாயகரும்
நீக்கமற அவர்களுடன் நேசமுடன் சீவித்தார்.
பயணத்தின் போதும் பசியால் வருந்தும்போதும்
தயவாய் அவர்களுடன் தற்பரனும் இன்னல்பல
அவர்களோ டொருவராய் அனுபவித்து வந்தாரே.
அவமிருந்த தாழ்ச்சியும் சொல்லரிய பேரன்பும்
காட்டிப் பகைவரிடை காக்கவல்லார் எம்பெருமான்

ணாட்டமுடன் குற்றங்குறை நாதன் பொறுத்தவர்க்கு
இம்சையொன்றும் நேராமல் இவ்வுலகில் காத்தவர்கள்
தம்சகத்தில் வேண்டுவன தந்துதவி செய்பவராம்
இத்தகைய வல்லமையும் இந்தக் குணப்பெருக்கும்
நித்தம்நிறை நாயகர்க்கே தத்தந்தமைச் செய்தார்கள்.
அந்தப்பன் னிருபேரும் ஆசைநிறை யாண்டவர்க்கே
சொந்தமாய்க் கையளித்தார் தொல்லுலகில் அம்மானை.
நாதன் அவர்களையும் நன்றாகப் போதித்து
மேதகவே தாந்திருத்தி மேன்மையுறச் செய்தாரே.
கண்ணேபோல் அன்னோரைக் காத்துவந்தார் அம்மானை.
தண்ணார் கடல்வாழும் செம்படவர் தாமவரை
மிகவாய் நேசித்தார் மீனவலைஞர் அப்பரிவை
இகமீ தடைந்ததையான் என்னென்பேன் அம்மானை.
ஒருநாள் ஆண்டவரும் உன்னதசர் வேசுரனின்
திருவரசைப் போதிக்கச் சீஷர்களைத் தாமனுப்பப்
போவதாய்ச் சொன்னபோது புல்லறி வாளரவர்
மேவிக் கிலேசமின்றி மிக்கமனத் திடனோடு
இருந்தனராம் ஏனெனிலோ ஏகனுதவி யாலெந்த
வருத்தமிடை யூறுகள் வந்தாலும் மேற்கொள்ளக்
கூடுமென அன்னவருங் கோதின்றி நன்கறிவர்.
வீடுடைய மோட்சமாம் பேருலகந் தானெருங்கி
இருக்குமந்த நற்செய்தி எல்லவர்க்கும் போதிக்கும்
வருத்தமிகும் வேலையை வையகத்தில் செய்வதற்கு
அத்தனளி வல்லமை யன்றிமற் றொன்றுமே
இத்தரையில் இல்லா திருந்துமவர் அஞ்சவில்லை
ஆண்டவரின் காலத்தே அன்னவரும் போதித்து
காண்டரிய அற்புதங்கள் காசினியிலே செய்து
திரும்பிவந்தார் ஐயனிடம் சீர்வரங்கள் பெற்றார்கள்
அரும்பாடுக் கேயுரியர் ஆயினர்காண் அம்மானை.

## ஸ்நாபக அருளப்பர் மரணம்.

இக்காலத்திலேதான் ஏகன்நெறி சேவ்வை செய்த
பக்தவ அருளப்பர் மேலான ஜீவியமும்

மூடிவெய்தி மேலுலகில் முத்திபெறுங் காலமுமே
கடிதினிலே வந்தவிதம் காசினியில் யானுரைப்பேன்.
வேந்தன் சகோதரனின் வேண்டுமனையா ளொருத்தி
ஏந்திழை யெரோதியாளை இச்சித்துக் கல்யாணம்
செய்துகொண்டா னதலினால் செய்த தனீதியென்று
மெய்தவராம் அருளப்பர் மிக்கவே தைரியமாய்ங்
ஒன்றுக்கு மஞ்சாமல் உள்ளபடி சொல்லியவர்
மன்றல்தனைக் கண்டித்தார் மாதவரும் அம்மானை.
அதற்காகக் கோபங்கொண் டந்தக் கணிகையருங்
இதமாக வேந்தனிடம் ஏற்றமுறைப் பாடுசெய்யக்
கேரஸ்எனுங் கோட்டையினில் கீர்த்திபெற்ற மாதவரை
காராக் கிருகத்தில் காவல்வைத்தான் பார்த்திபனும்.
அங்கேயே பன்னிரண்டு மாதங்கள் அருளப்பர்
தங்கிச் சிறைவாசந் தாரணியிற் செய்தாரே
காட்டிற் பறவைகள்போல் காலத்தைப் போக்கினவர்
கூட்டி லடைபட்டுக் கொண்ட கருத்தான
ஆண்டவரின் பாதையைச் செவ்வைசெய் யரும்வேலை
ஈண்டுநிறை வேற்ற இயலாமல் காவலிலே
இருந்ததரு ளப்பருக்கு எவ்வளவோ கஷ்டமாய்
இருந்திருக்கு மென்றிங் கெடுத்தி யம்ப வேண்டுமோ ?
எம்பெருமான் அன்னவரை எட்டியும் பார்க்கவில்லை
தம்மடியா ரினல்தீர்க்கத் தாமொன்றும் செய்யவில்லை.
அப்படி யிருந்தும் அருளப்பர் அச்சிறையில்
தப்பிக் குறையொன்றுஞ் செப்பினவ ரில்லையாம்
பொறுமை குறைந்திலது பொன்னும் விசுவாசம்
நிறைவா யிருந்ததன்றி நினைவிலுங் குன்றவில்லை.
தேவத் திருவுளத்தை ஆவலுடன் நிறைவேற்ற
காவலை விட்டுவெளி மேவமிக ஆசித்தார்.
சிறைவாசத் தின்போதும் செவ்வைசெய்யும் வேலையினை
மறவாமற் செய்துவந்தார் மாதவரும் அம்மானை.
தனைக்காண வந்தவரை தற்பரனுஞ் சேசுவிடம்
அனைவோர் எதிர்பார்க்கும் அத்தனீர் தாமோவெனுங்
கேள்வியுட னேயனுப்பிக் கிட்டியே வந்திருக்கும்
நாள்சாவைத் தாமறிந்து நாதனடி சேர்ந்துய்யக்
காத்திருந்தார் மாதவரும் காமக் கணிகையராம்

லையடிகள் நூல்
MARAIMALAI ADIG

எரோதியாள் என்பவளும் எப்படியும் மாதவரைக்
குரோதமாய்க் கொல்வதெனெ வகைதேடிக் கொண்டிருந்தாள்.
அருளப்பர் சீஷர்களும் ஆக்ஞைப்படி யாண்டவரை
மருள்தீர அண்டிப்போய் மருள்நீங்கப் பெற்றதுடன்
சேசுபரன் சீஷர்களில் சீஷராய்ச் சேர்ந்தவரை
மாசகலப் போற்றிவிசு வாசித்தார் அம்மானே.
பாவக் கணிகையராம் பாதகியெ ரோதியாள்
மேவி யருளப்பர் மேதினியி லேயிருத்தல்
தனக்குப் பெருங்கஷ்டஞ் சாரணியி லென்றெண்ணி
மனக்கவலை யோடந்த மாதுதான் காத்திருந்தாள்.
அரசன் பிறந்ததினம் அந்நாளில் வந்ததுகாண்
பரசும் பெருநாளைப் பாங்காக உற்சவமாய்க்
கொண்டாட ஏற்பாடு கோவேந்தன் செய்தனனும்.
கண்டோர் அதிசயிக்கக் காவ லாண்மனையும்
நன்று யலங்காரம் நண்ணியவன் செய்வித்து
அன்றிரவு நாட்டின் பிரபுக்கள் யாவருக்கும்
விருந்தளித்தான் வேந்தன் வினோதமா யச்சமயம்
அருந்தி மதுவுண்டே அனைவோரும் வீற்றிருந்தார்
அப்போதெ ரோதியாள் ஆசைமகள் அவ்விடத்தில்
செப்புஞ் சலோமியெனும் சேயவளு மங்குவந்து
சிங்கார மாகவந்த சிற்றிடையாள் ஆடினள்.
மங்கை நடனத்தை மன்னவனுந் தான்கண்டு
குடிமயக்கந் தன்னில் கோவேந்தன் உள்ளுவந்து
பிடியிடையைப் பார்த்துப் பிரியமுள்ள பெண்மணியே
நீயென்ன கேட்டாலும் நிச்சயமாய் நான்தருவேன்
பாய இராச்சியத்தில் பாதிநீ கேட்டாலும்
அளித்திடுவேன் என்றான் அரசனந்த வேளையினில்
களித்திருந்த வேந்தன்மொழி கன்னியவள் கேட்டோடி
அன்னையரைத் தானணுகி என்னகேட்பதென்றாளே
தாண்டிற்காரனுக்கு மீதப்பின்மேல் கண்ணென்பர்
ஆண்டிருந்த எரோதியாள் அம்மா அருளப்பர்
சிரத்தைக்கேள் என்றாளாம் சிற்றின்பத் தாழ்ந்திருந்த
பரத்தையந்தப் பாதகியும் பால்மனை மாறாத
பாலகியும் சொன்னபடி பார்வேந்தன் தனையண்டி
காலவிழி மங்கை கூறுவது மின்னதென்று

சுணகனத்தை யோராமல் கன்னியவள் ஏது சொல்வாள்.
அனுதாரவாய் நிற்கும் அருளப்பர் தன்சிரத்தைத்
தட்டொன்றில் வைத்துத் தரவேண்டும் என்றுரைத்தாள்.
கட்டுரையைக் கேட்டங் கிருந்த கனவான்கள்
திடுக்கிட்டுப் போயினரே தேர்வேந்தன் கேட்டுமிக
நடுக்குற்று ஞானும் நாவினால் சொன்னதற்கு
மாறாய் நடப்பதுதான் மன்னர்க்கழ கல்லவென்று
நேரே அரண்மனையின் கீழே நிலவறையில்
அடைபட் டிருந்த அருளப்ப மாதவரை
தடைசொல்லிக் கண்டித்த தவமுனியை மாசற்ற
புண்ணியவான் என்று புரவலன் நன்கறிந்தும்
பண்ணிய வாக்குறுதி பார்தவற அஞ்சியவன்
உலகப் பழிக்கஞ்சி உற்றதொரு சேவகனை
அலைக் கிடந்தந்த அம்மன்னன் தானழைத்து
மங்கை விருப்பியதை மாறுமற் கொண்டுவர
சங்கையில்லா உத்திரவைச் சாற்றினன் தார்வேந்தன்.
காவல் புரிந்துநின்ற சேவகரி லேயொருவன்
மண்டபத்தை விட்டகன்று மாதவரின் வாசத்தை
அண்டிப்போ யோர்நொடியில் அன்பரரு ளப்பர்சிரங்
கொய்து கொணர்ந்தான் குருதியுடன் தட்டினிலே.
மைவிழியாள் மங்கையதை வாங்கித்தன் மாதாவின்
கரமளித்தாள் காதகி யெரோதியாள் வாங்கியவள்
குறையகன்ற தென்று குதூகலமாய்த் தானிருந்தாள்.
அப்போ தருளப்பர் ஆகமதை சீஷர்களும்
தப்பாமற் கொண்டுபோய் தக்கடக்கஞ் செய்தபின்
சேசுபிரான் தன்னிடத்தில் சென்று நிகழ்ந்தவற்றை
நேசமுடன் சொன்னார்கள் நீணிலத்தில் அம்மானை.
பாதக னெரோதன் படுகொலை தானெப்போதும்
தீதுருவாய்க் கண்ணெதிரில் தீராமல் நின்றவனை
வாதிக்க உள்ளத்தை வாட்டும் பெருங்கவலை
நீதிக்கவன் பயந்து நீணிலத்திலே யிருந்தான்.
மனதில் சமாதானம் மருவாத மானிடர்தாம்
இனமா யிருந்தென்ன பேரயென்ன அம்மானை.
ஆண்டவருங் கேட்டு விசனமுற்றார் அம்மானை.
மாண்ட அருளப்பர் மாட்சிமையில் வீற்றிருந்தார்

நாதன் அலுவலுந்தான் நாடெங்கும் நிறைவேற
போதகஞ் செய்துவந்தார் புண்யபரன் அம்மானை.

## அப்பம் பலுகியதும் கடல்மேல் நடந்ததும்.

பரமன் மொழிக்கிணங்கப் பன்னீ ரப்போஸ்தலரும்
சிரமத்தைப் பாராமல் சென்றுபல ஊர்களிலே
போதித்துச் செய்தவற்றைப் புண்ணியர்க்குச் சொல்லிடவே
நாதன் அவர்களைப்பை நன்கறிந்து மேதுசொல்வார்
என்னரிய சீஷர்களே ஏகாந்த மானவிடந்
துன்னியிளைப் பாறுமென்றார் சோதிபரன் அன்புடனே.
இந்தநல்ல ஏற்பாட்டை ஏற்றனரப் போஸ்தலரும்
சந்த வறுந்தரத்தைச் சார்ந்தேக எண்ணியவர்
ஏரியினைத் தான்கடந்தால் ஏகனுட னேயிருந்து
பாரி லவர்மனதில் பட்டவைகள் சொல்லவென்று
விரைந்தோடி எல்லோரும் மீன்பிடிக்கும் படகேறி
கரைநோக்கிப் போனார்கள் கத்தனுடன் அம்மானை.
சேசுபிரான் வீற்றிருந்து சீஷ ருரைகேட்டு
மாசில்லா மாபரனும் மாண்புடனே மதிகூறிப்
போகையிலே மாந்தர் புரவலனைக் கூட்டமாய்
ஏகன்றனைநாடி எதிர்கரைக்குச் சுற்றிவரும்
சிங்காரக் காட்சியினைச் சீஷர்களுங் காட்டினராம்.
பொங்கு மலைபோலப் போதகரை நாடிவந்து
ஜனங்கள் கணம்விடாமல் தற்பரனைத் தொந்தரைகள்
தினமுஞ் செய்கின்றார் தெரியாம லென்றுசீஷர்
முணுமுணுத்தா ரானாலும் முன்னவனின் பேருதவி
பிணியாள ராதியர்க்கு வேண்டுமெனப் பேதையவர்
எம்பெருமான் றன்பொறுமை ஏற்றவுபர் அன்பினையும்
நம்பி வருவோரை நாடிக்களை பாராமல்
செய்யு முதவியினைச் சீடர்கள் கண்டுவெட்கி
மெய்யனைக் கொண்டுபோய் மேற்கரையில் சேர்த்தனராம்.
அங்கே மலையோரம் ஆன தனியிடத்தில்
தங்கிப் பரன்மொழியைத் தாங்கேட்டிருந்தார்கள்.
ஆனால் வெகுநேரம் அங்குதனி யாயிருக்கக்
கானகத்தில் கூடவில்லை கத்தனுக்குஞ் சீஷருக்கும்

மூன்னே கரையோர மொய்த்து வரும்ஜனங்கள்
அன்னவருந் தங்குமிடம் ஆய்ந்தறிந்து வந்தனரே.
காதனுர் வீற்றிருந்த நல்லிடத்தி னின்றவரை
ஆதரவோ டந்த அணிமருவு மானிடரை
இரக்கத் துடனேக்கி ஏகனவர் ஏதுசெய்தார்
புரக்கவந்த தேவபரன் போகின்று ரெதிர்கொண்டு
ஆயனில்லா ஆடுகள்போல் அங்குவந்த மானிடரை
நேயமுடன் கூட்டிவந்து நீணிலத்தில் போதித்தார்
நாளெல்லாம் போதித்தார் நல்லகுணந் தந்தருளி
மாளாத துன்பமெல்லாம் மாற்றி நவம்புரிந்தார்.
அன்றெல்லாஞ் சூழ்ந்துநின்ற அந்த ஜனமகிழ்ந்து
என்றுமில்லாச் சந்தோஷ மேற்றுநன்றி கூறினராம்,
எங்கு மவர்புகழை எல்லாரும் பேசியவண்
தங்கி யிருந்தனர்காண் தாரணியி லம்மானே.
அந்திப் பொழுதாக அம்மனிதர் இல்லங்கள்
சிந்தித்துப் போகச் சிறிதேனும் நேரமில்லை
என்று நினைத்தனரே ஏகனைப் போல்தலரும்
அன்றிரவை யக்கூட்டம் அந்த வெளியிடத்தில்
எப்படிப் போக்குவதென் றேங்கிக் கவலையுற்றார்
தப்பாமல் உண்பதற்குத் தான்வேண்டு மாகாரம்
என் செய்வ தென்றெண்ணி யேங்கி யிருக்கையிலே
மன்பதையின் கூட்ட மனக்கவலை யொன்றுமின்றி
சந்தோஷமாகவே தற்பரனைப் பார்த்திருந்தார்.
சிந்தனைக் குள்ளான சீடர்களும் சேசுவினை
அண்டி மொழிவார்கள் ஆண்டவரே கானகத்தில்
கொண்ட பெருங்கூட்டங் குறையின்றி இல்லங்கள்
போய்ச்சேர வேண்டும் பொழுதாகி விட்டதுகாண்
நேயமுடன் அன்னவரை நீரனுப்ப வேண்டுகிறோம்
எங்கேனுஞ் சென்றவரும் இராக்காலத் தைப்போக்கி
அங்கத்துக் கேற்றநல்ல ஆகாரந் தேடிடுவார்
என்று மொழிந்திடவே ஏகபர னேதுசொல்வார்
இன்றவர்க ளெங்குமே போகவேண் டியதில்லை
நீங்களே யாவர்க்கும் நேயமுட னுகாரம்
ஈங்களிப்பீர் என்றுரே எம்பெருமான் அம்மானே.
வாயால் எளிதாக வல்லபரன் சொல்லிவிட்டார்

ஆயிரக் கணக்கான மானிடர்க்கு மாகாரம்
எங்கே கிடைக்குமெனச் சங்கையுடன் சீஷர்களும்
இருநூறு பணத்துக்கு உறுமப்பம் வாங்கிவந்து
பரிமாறு கின்றதுவோ என்றார்கள் பார்த்திபனும்
உங்களிடம் உள்ளதென்ன உரைத்திடுவீர் என்றதுமே
எங்களிடம் ஐந்தப்பம் இருமச்ச முண்டென்றார்.
உடனே அவைகளையும் உத்தமருந் தம்முன்னர்
கொடுவந்து வைத்திடவே கோதிலருங் கற்பித்தார்.
அப்படியே கொண்டு வைக்க அம்பரனும் யாவரையும்
தப்பாமற் புற்றரையில் உட்காரச் சொல்லியவர்
மகத்தான அற்புதத்தை மாபரனுஞ் செய்தாரே.
அகத்தச்ச முண்டாக ஆயிரவர் பார்த்திருக்க
அப்போஸ் தலர்பக்கல் அச்சமுட னின்றிருக்க
முப்போது மேயிருக்கு முப்பரனார் அப்பத்தை
மச்சங் கரமெடுத்து வானத்தை நோக்கியவர்
அர்ச்சித் தவர்கை அளித்தெல்லா மானிடர்க்கும்
பரிமாறச்சொன்னாரே பன்னரிய வல்லபிரான்.
வரிசை வரிசையாய் வனாந்தரத்தி லேயமர்ந்த
அத்தனைப் பேர்களுக்கும் ஆர்வமுடனே யளிக்க
அத்தனைப் போற்றியவர் ஆசைதீர உண்டாரே.
நாத னமர்ந்திருந்த நன்மேட் டிருந்தபடி
ஆதரமோ டன்னவரைப் பார்த்திருந்தார் அம்மானே.
புசித்து முடிந்தவுடன் பொக்கெனவே சீஷர்களைப்
புசித்துமிச்ச மானவற்றைப் பொருக்கிவைக்க வேண்டுமென்றும்
அழியலா காதென்றும் ஆண்டவருஞ் சொன்னாரே.
கழிந்தவற்றைப் பன்னிரண்டு கூடைகளிற் சேர்த்தாராம்.
ஐந்தப்ப மிருமீன்கொண் டையா யிரம்பேர்க்கு
விந்தையாய் ஊணளித்த வேதனவர் சீடருடன்
அன்னம் புசித்திருக்க அந்தஜனக் கும்பலிருந்
துன்னரிய பேரொலியொன் றோங்கி எழுந்ததுகாண்
இவரே கிறீஸ்தென்பார் இஸ்ராயேல் மன்னவரும்
இவர்தாமே ஓசன்ன என்றார்ப் பரித்தனரே.
அப்போஸ்தலர் கேட்டார் ஆனந்தங் கொண்டார்கள்
அப்போது சீஷர்களை ஆண்டவரும் வீடுகட்குப்
போகும்படி சொன்னார் போதகருங் கூட்டத்தை

போகும்படி யனுப்பிப் புண்ணியரும் பின்னாலே
வருவதாய்ச் சொல்ல வருத்தத்துடன் சீஷர்
மருவிப் படகேறி மாதவரை விட்டேக
ஜனங்களுஞ் சூழ்ந்துகொண்டு சந்தடிசெய் தாண்டவனை
இனமாகத் தங்களுக் கிராஜாவா யிருக்கவென்றே
ஆரவாரஞ் செய்தார்கள் ஆண்டவரு மன்னவரைப்
பேரன்போ டங்கமர்த்திப் பேசியவர் கற்பித்த
நீதிகளை நன்றாய் நினைத்திடுமா றேபனுப்ப
ஆதிமறை நாயகனுங் கன்னார் எதிர்த்துரையா
தில்லங்கள் போகிறதை ஏசுபரன் நோக்கிநின்றார்
வல்லரச ராம்பரனும் மாந்தர்களைப் பார்த்துநின்றார்
பின்னர் மலையோரம் பீனமுட னேஜெபிக்க
நன்னர் மறுதினத்தில் நாதன் செயப்போகும்
மகத்தான வாக்குறுதி மண்ணில் நிலைக்கவென்று
அகத்தாரும் ஆண்டவரும் ஆனஜெபஞ் செய்வதற்கு
ஏகாந்தம் நாடி யிருக்குமந்த வேளையிலே
ஆகாயந் தான்குமுறி ஆற்றலுடன் காற்றடிக்க
காற்றும் பலமாய்க் கடும்புயலாய்த் தான்மாற
சாற்றுங்கடல் மீண்டுஞ் சாடிமிகக் கொந்தளிக்க
இராயப்பர் ஏறுபட கிங்குமங்கு மல்லலுற்று
பாயக் கடல்தனிலே பரிதவித்து நின்றதுகாண்.
அப்போ திருட்டிடவும் ஆண்டவரு மில்லையென்று
செப்பினார் அருளப்பர் செய்யசுவி சேஷமதில்.
சீடர் பயங்கொண்டு சீறிவரு மலைக்கஞ்சி
வாடியிருக்கையிலே வல்லபரன் கடன்மீது
நடந்து வருகின்ற நல்லுருவங் கண்டார்கள்.
தொடர்ந்து வருமுருவம் தோன்றுமொரு பூதமென
அஞ்சி நடுங்கினதோ டார்ப்பரித்துக் கூச்சலிட்டார்.
அஞ்சாதீர் நான்தான் எனவுரைத்தார் ஆண்டவரும்
பேசி யவர்களது பீதியைப் போக்கிடவே
நேசபர னென்றறிந்து நீடுவகை கொண்டார்கள்
அப்போ திராயப்பர் ஆண்டவரே நீரென்றால்
தப்பாமல் நானடக்கக் கட்டளையுந் தாருமென்றார்
வாவென்றா ராண்டவரும் வாகுடனி ராயப்பர்
தாவி நடந்தாரே தண்ணீர்மேல் அச்சமின்றி

ஆனால் இறுதியிலே ஆண்டவரை யண்டுகையில்
போனலை யொன்றெழும்பி யொங்கிவிழத் தாட்டவர
சீடர்மிகப் பயந்து சேசுவினைக் காணாமல்
ஆடுதிறை நின்றென்னை ஆண்டவரே காப்பாற்றும்
என்றலறிக் கூவி யிருகரங்கள் நீட்டியங்கு
நின்றவரைப் பார்த்து நேயபரன் ஏதுசொல்வார்
அற்பவிசு வாசிநீ அஞ்சினையேன் என்றுகரம்
நிற்பாரும் தான்பிடித்துத் தோணி யருகணைந்து
ஏறப் புயலடங்கி எப்போதும் போலாக
மாருத சீஷர்களும் மாபரனின் தாள்பணிந்து
மெய்யாகவே நீரும் மெய்யங் கடவுள்மகன்
ஐயமில்லை யென்றவரை யாராதித்தார்க ளம்மா.
தோணியுந்தான் நாடுமிடம் தூரமின்றிப் போய்ச்சேரக்
காணுமுயர் அற்புதத்தைக் கண்டார்கள் அம்மானை.

## திவ்யநற்கருணையைப் பற்றிய வாக்குத் தத்தம்.

நசரேத்தூர் சேசுசப்பர் நாவூர் வந்தடைந்தார்
இசராயேல் மாந்தர்பலர் எம்பெருமான் காணவென்று
வந்துபெருங் கூட்டமதாய் வல்லவனைக் காணவென்று
சூழ்ந்தி யிருக்கிறதை முன்னவருங் கண்டவரை
விலக்கியொரு நல்லபோர் வீரன் ஜெபாலயத்தைத்
துலக்கத் துரிதமாய்த் தூயபரன் சென்றாரே.
ஜாயீரெனும் பக்தன் சாமிவர வேற்றுநின்றான்
ஆயவர் மானிடருக் கன்றோர் மகத்தான
சத்தியத்தை ஓதிடவே சித்த முவந்தனராம்
நித்தியத்துக் கேற்றநெறி காட்டுஞ் சத்தியங்காண்
அப்பரமன் நேச அறிகுறியாஞ் சத்தியங்காண்
அப்புவியோர்க் கேற்ற அருந்துணையாஞ் சத்தியங்காண்
எங்குங் கிடைக்காத எழில்நிறைந்த சத்தியங்காண்
மங்கா மறைக்குரிய மாண்புநிறை சத்தியங்காண்
அழியாப் புகழ்படைத்த அற்புதஞ்சேர் சத்தியங்காண்
பொழிலோர் வினைதீர்த்த பொன்னான சத்தியங்காண்
தேவதிரு நற்கருணை யப்பமதில் தேவபரன்
மேவி யிருக்கின்ற மேலான சத்தியங்காண்.

ஆண்டவர் செய்த அதிசய மனைத்துமுடைய
மாண்புநிறை சங்கிரகம் என்பார் மாசபையோர்.
நாத னமர்ந்திருந்த நல்லஜெப ஆலயத்தில்
வேதன் மொழிகேட்க வீற்றிருந்தார் பலமாந்தர்
அப்போது சேசுபிரான் அன்புடனே ஏதுசொல்வார்
அற்புதங்கள் கண்டீர்கள் அப்பங்கள் உண்டீர்கள்
அழிகின்ற அப்பத்துக் காகவல்ல நித்தியமும்
அழியாமல் நிற்கின்ற அப்பத்துக் காய்நீங்கள்
பிரயாசைப் பட்டிடுவீர் பேசு மனுமகனும்
தரையிலதைத் தந்திடுவார் என்றுரைத்தார் தற்பரனார்.
அதைக்கேட் டொரு சிலர்தாம் ஆண்டவரைப் பார்த்துரைப்பார்.
நிதமும்மை விசுவசிக்க நீர்செய்யு மற்புதமென் ?
எங்கள் பிதாக்கள் எழில்மன்னா உண்கலையோ ?
உங்கள் புதுமையொரு நூதனமோ என்றார்கள்.
சேசுபிரா னப்போது சேணுலகத் தப்பமல்ல
மோசே யுமக்களித்தார் மோட்சபிதா தந்தருளும்
மெய்யான அப்பமொன்றே மேதினியோ ரெக்காலும்
உய்யவரும் அப்பமென்றார் உண்மையுள்ள எம்பெருமான்
உடனே ஜனங்களெல்லாம் உத்தமரே எங்களுக்குத்
திடமான அப்பத்தைச் சேயருக்குத் தந்தருளும்
என்றார்கள் என்றவுடன் ஏகனுந்தா னேதுசொல்வார்
நன்றாக ஜீவியத்தின் நல்லப்பம் நானேஎன்
இடத்தில் வருகிறவன் என்றும் பசியடையான்
திடமாய் விசுவசிப்போன் தீராத தாகமுறான்
எனமொழிய அம்மாந்தர் இவன்சூசை புத்திரனே
தனைவானின் றுற்றதாய்ச் சாற்றுவது மெப்படியோ
என்று முறுமுறுத்தார் யேசுபிரான் அதையறிந்து
நின்றவரை நோக்கிமிக நேர்மையுடன் சொல்லுவராம்
முறுமுறுக்க வேண்டாம் மொழிஜீவிய அப்பம்நான்
விருப்பமுடன் புசிப்போன் வியாமலே பிழைப்பான்
நானளிக்கு மப்பம் நாடகத்தோர் ஜீவிக்க
நானளிக்கு மென்மாம்சம் என்றுரைத்தார் நாதனவர்.
மாந்த ரதைக்கேட்டு மனத்திருப்தி கொள்ளாமல்
சாந்த குணப்பரனைச் சர்வாதி கத்தனையே
நிந்தித்துப் பேசி நிராகரிக்க லானார்கள்

அந்தப்படி யின்றும் அப்பத்தில் சேசுவுந்தான்
பந்தித் திருப்பதேவன் பார்கடவா தென்பார்கள்
சீடர்களில் பல்லோர் இதுகடின வாக்கென்று
கூடவே போகாமல் கோவிலகி நின்றார்கள்.
ஆனால் அவர்மொழிந்த அப்பம் உவமையல்ல
நானு விதமான நல்லுவமை சொல்லுகையில்
அப்போஸ்தலர்க் கவற்றை ஐயன் வியாக்கியானம்
செப்பினராம் அஃதேபோல் சேசுபிரான் அன்றுரைத்த
வாக்கை விளக்கவில்லை வல்லபரான் தன்குறுதி
யாக்கையைத் தந்தருளி யாவரையும் ரட்சித்தார்
குன்றுதிது சத்தியம் குறைசொல்ல ஞாயமில்லை
நன்றாக எல்லோரும் நம்பிவிசு வாசிப்பீர்.
சீடர்பலர் போக சேசுபிரான் தான்பார்த்து
கூடநின்ற பன்னிருவர் கூறுமற்ற ஆட்களைப்போல்
போகமன தோவென்று பொற்பரனு மேகேட்க
வேகமுள்ள ராயப்பர் வேதன் றனைப்பார்த்து
உங்களிடம் நித்தியத்தின் உண்மை மொழியிருக்க
எங்கேயா ரிடம்போவோம் தேவசுதன் என்றும்மை
அறிந்தும் விசுவசித்தும் ஆதரையி லிருக்கின்றோம்
கிறீஸ்துநாதர் நீர்தாமே என்றுறுதி கூறினராம்.
இந்த விசுவாசம் இன்னவரில் யூதாசன்
பந்தமனதி லில்லை பாரரசை நாடியவன்
சேசு மறுத்ததற்குச் சீற்றமுடன் றானிருந்தான்
மாசற்ற நெஞ்சனுய் மாதவரின் போதகத்தின்
மேலெறிச்சல் கொண்டிருந்தான் மேதினியி லெம்பெருமான்
நன்றிகெட்ட செய்கைக்காய் நாதன் வருந்தினராம்.
அன்றுநிகழ் சம்பவமீ தாகுமென தன்பர்களே
தேவநற் கருணையிலே சேசுபரன் வாழுமுயிர்
மேவுமொரு சத்தியத்தை விசுவசிப்பீர் அம்மானை
தேவ சினேகத்தின் திருவுருவாம் நற்கருணை
ஆவல்கொண்டு போற்றிடுவீர் ஆதரையி லம்மானை.

## கனனியமாதின் விசுவாசம்.

ஆண்டவரின் நாட்குறுக அண்டாத யூதர்பலர்
ஈண்டுலக ராச்சியத்தை ஏசுபிரா னேற்றிலமென்

றேமாற்ற முற்றதினால் எம்பெருமானைப் பகைத்த
பூமாதின் புத்திரராம் பரிசேயர் சதுசேயர்
ஆசா ரியர்முதலாம் ஆணவங்கொள் தலைவர்களும்
மேசையா மீதுபல குற்றங்கள் கூறிநிந்தை
சொல்லித் திரிந்தார்கள் சூதுடைய பரிசேயர்
கல்லிலே நாருரிக்குங் கள்வர் பரிசேயர்
ஆண்டவர்மேல் மிக்கபகை பூண்டவர்கள் அம்மானை.
அன்னவர்க்கென் றோருவமை பன்னலுற்றார் அம்பரனும்.
செபஞ்செய்ய ஆலயந்தான் சென்ற பரிசேயன்
அபயமென் றங்குவந்த ஆயக்கா ரன்சரிதை
உவமையாய்ச் சொல்லி உலகத்தில் தன்னையே
எவனுயர்த்து கின்றானோ அவனே தாழ்த் தப்படுவான்
தன்னையே தாழ்த்துவோன் முன்னுயர்த்தப் படுவானே
என்றதனும் பரிசேயர் எரிச்சல்மிகக் கொண்டாரே.
அன்றே ஒழிக்கவென ஆலோ சனைசெய்தார்.
அதனை யறிந்தபரன் அன்னவர்க்குக் காட்டாமல்
நிதமுந் தமதலுவல் நீணிலத்தில் செய்துவந்தார்.
காலம் வருமளவும் காதகர்போ லாங்கொன்றும்
சீலருக்குச் செய்ய முடியாதென் றவர்அறிவார்.
ஒருநாள் ஜனங்கட் குபதேசஞ் செய்கையிலே
சருவேசன் ராச்சியத்தில் சாருங் கடையிடத்தில்
இருப்பார் முதலிடத்தும் முதலில் இருப்பவர்கள்
மருவிக் கடையிடத்து மாயிருக்க வேண்டுமென்றார்.
அச்சொல் பரிசேயர்க் கணுவளவும் பிடிக்கவில்லை.
நிச்சயமா யாண்டவர்க்கு நேருமின்ன லென்றசிலர்
ஏரோத னுமைக்கொல்ல விரோதமா யிருக்கின்றான்
என்றுரைக்கப் போதகரும் இன்றைக்கு நாளைக்கும்
பேய்களை யோட்டிப் பிணியாளர் குணந்தந்து
ஆமூன் றாநாளில் அயர்சமாதி யடைகின்றேன்
என்றந்த நரியினிடஞ் சென்றுரையும் என்றாராம்.
அப்படியே மற்றொருநாள் ஆண்டவரு மென்னுயிரை
இப்புவியில் யாரும் எடுக்கின்ற தில்லையதை
நானே கொடுக்கின்றேன் நானுமதை மீண்டெடுக்கத்
தானே எனக்காற்றல் தாரணியில் உண்டென்றார்.
இவ்வாறு தேவபரன் எங்குமுப தேசஞ்செய்

தெவ்வ மகற்றி எழில்பெனிசி யாவென்னும்
அஞ்ஞான காட்டினுக்கே ஆண்டவரும் போயினரே.
மெய்ஞ்ஞானம் போதிக்கும் மேலவரின் கீர்த்தியங்கும்
மேவி யிருந்ததினால் மெத்தமனை வேதனைகொள்
ஆவலுடனங்கு வந்தாள் அஞ்ஞான மாதொருத்தி.
அன்னாள் மகளசுத்த ஆவியினா லேமிகவும்
இன்னலனுபவித்த வந்திழையின் தாயுமந்த
நசரேத்தூர் சேசு நவம்பலவும் செய்கிறதால்
நிசமாகத் தன்மகள்மேல் நீளிரக்கங் கொள்வரென
நம்பியவள் மாதவரை நாடிவந்து மேதுசொல்வாள்
எம்பிரிய ஆண்டவரே எந்தல்தவீ தன்குமாரா
என்மே லிரக்கமா யிருமெந்தன் ஏகமகள்
வன்பேயால் உக்கிரமாய் வாதிக்கப் படுகின்றாள்
என்றுகூவிக் கொண்டுபின்னா லேந்திழையும் போயினளே.
அன்றப்போ தெம்பெருமான் ஒன்றுமே சொல்லவில்லை.
அப்போஸ் தலரெல்லாம் ஆச்சரியந் தான்கொண்டார்.
எப்போதும் துன்பத்தைத் தப்பாமல் தீர்த்துவைக்கும்
ஆண்டவரும் அச்சமயம் ஆருத் துயருடனே
வேண்டிவரும் மாதை விரும்பியே னோக்கவில்லை ?
இந்தப்பெண் நம்பிறகே தொந்தமாய்க் கூப்பிட்டுக் -
கொண்டு வருகின்றாள் கோதையை யனுப்பிவிடும்
என்றுரைத்தார் தொந்தரைக்காற் றாதவந்த சீஷர்களும்.
மாதவனோ மற்றவர்கள் சொல்வதொன்றுங் கேளாமல்
வேதன் பிறகோடி வேண்டுகிறாள் தன்மகட்காய்
பேயைத் துரத்தப் பெரிதிரக்கம் வையுமென்றாள்.
ஆயனது கேட்டுமிச ராயல்கோத்தி ரத்தினின்றும்
சிதறுண்ட ஆடுகளுக் காயனுப்பப் பட்டதன்றி
உதப்புவியில் வேறில்லை யென்றுரைத்தார் உத்தமரும்.
அந்தமொழி கேட்டணங்கு மன்னவரி லேமாற்றம்
சிந்தைமிக வடைந்தாள் செப்புமவ ரன்பிதுவோ?
தாயன்றி வேறொருத்தி யாயிருந்தா லன்னவளும்
போயிருப்பாள் உள்ளுடைந்து பொங்கும் வருத்தமுடன்.
ஆனாலப் பெண்மணியும் அவ்வாறு செய்யாமல்
தானாக வேமனதைத் தையல்திட மாக்கியவர்
பாதத்தில் வீழ்ந்தழுது மேதகு நம்பிக்கையுடன்

அடியாளுக் கேயுதவி ஆண்டவரே செய்தருளும்
படியாக வேண்டுகிறேன் பாவிநான் என்றாளே.
அதற்குமா றுத்தரமா யாண்டவரு மேதுசொல்வார்
எதற்காகப் பிள்ளைகளின் அப்பத்தை யேபெடுத்து
நாய்களுக்குப் போடுவது நல்லதல்ல வென்றுரைத்தார்.
தாய்தன்னை நாயென்று தற்பரன் சொன்னாரென்று
போய்விட் டாளோமாது பொக்கெனவே கோபமுடன்.
தாழ்ச்சி மனவுறுதி தக்கவித மாயுடையாள்
வாழ்க்கை நலமுறுதல் வல்லவனால் ஆகுமென
நம்பி யவர்மொழியால் நாதனைத்தன் வசமாக்க
எம்பிரிய ஆண்டவரே என்மொழியைக் கேட்டருளும்
பிள்ளைகள் புசிக்கின்ற பேரப்பத் துண்டுகள்தாம்
உள்ளமேசை நின்றுவிழ உற்றநாய்க் குட்டிகளும்
அவைகளைத்தின் கின்றனவே என்றுரைக்க வாரணங்கும்.
அவள்விசுவா சந்தன்னை ஆண்டவரும் மெச்சியே
பெண்ணே உனது விசுவாசம் பெரிதாகும்
மண்ணேயுன் னாசைபடி மகிழ்வாகக் கடவதுவே
என்றுதிரு வாய்மலர்ந்தே ஏகனருள்புரிந்தார்.
நன்றாக அக்கணமே நங்கையவள் புத்திரியும்
பேயகல நற்சுகமாய்ப் பேசி மகிழ்ந்திருந்தாள்.
தாயின் விசுவாசம் தாரணியிற் கண்டீரே
விசுவாசந் தானம்மை மேதினியில் ரட்சிக்கும்
நிசமான சாதனமாம் நேயதம்பி தங்கையரே.
அற்பவிசு வாசத்துக் காய்த்தமது சீஷர்களை
தப்பாமல் கண்டித்த தற்பரன் கானிப்பெண்
பாவை விசுவாசத்தைப் பார்த்து மகிழ்ந்ததன்றி
மேவியவர் சொன்னதையே மிக்க உறுதியுடன்
பிரயோகஞ் செய்ததற்குப் பெரிதுவந் திருக்கவேண்டும்.
ஆரணங்கின் வேண்டுதலும் ஆதரையிலே பலித்த
சீரான அற்புதத்தைத் திட்டமுடன் கண்டீரே.
களைப்போடு தாமதமாங் கஷ்டங்கள் பாராமல்
அளப்பரிய தாழ்ச்சி யரும்பொறுமையாய்க் காத்திருந்த
மேலான செய்கையினால் மேவும்பலனிதுவே
மாலாரு மெம்பெருமான் மாட்சிமையீ தம்மானை.

## இராயப்பர் திருச்சபையின் தலைவராதல்.

ஆண்டவரும் பாடுபட ஐயிரண்டு மாதங்கள்
வேண்டியிருந்தனவாம் வேதனுடைப் போஸ்தலரும்
சேர்ந்து மூவாண்டுகளில் சேசுபிரான் யாரெனவே
ஓர்ந்தார்க ளில்லையம்மா உண்மை நிலையறியார்.
போதகங்கள் கேட்டுப் புதுமைகளைக் கண்டார்கள்
ஆதரையின் மீட்பரென அன்னார் அறிந்தார்கள்
மேசையா வென்றவரை ஆசையுடனேற்றாலும்
சருவாதி கர்த்தனுஞ் சாட்சாத் கடவுளென்றும்
திருவாந் திரித்துவஞ்சேர் தேவாதி தேவனென்றும்
இன்னு மறியா திருந்தாரப் போஸ்தலர்கள்.
பன்னு மவர்மகிமை பாராட்டி வந்ததன்றி
துக்கம் நிறைந்தவராய்த் தொல்லுலகி லேயிருப்பார்
மிக்கவரும் பாடுகளை மேவி யிருப்பரென
அன்னா ரறியவில்லை ஆகையினா லெம்பெருமான்
பன்னிரண்டப் போஸ்தலரைப் பக்குவமாய்ச் சோதித்து
ஆத்துமங்க ளீடேற ஆதரையெங் செய்வதென்று
நேத்தியநன் மார்க்கமதை நேர்மையுடன் போதிக்கும்
மெய்யாந் திருச்சபையை மேதினியில் ஸ்தாபிக்கத்
துய்யபரன் செய்தவிதஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்.
செசாரியா பிலிப்பியெனுஞ் சீர்நகரி லோர்தினத்தில்
நசரேசு நாதரதி காலையில் ஜெபித்தெழுந்து
பன்னிரண்டப் போஸ்தலரைப் பார்த்தென்னை யாரென்று
பன்னுகிறார் பார்மனிதர் என்று வினவினராம்.
சிலரோ அருளப்பரென்றும் சிலரோ எலி யாசென்றும்
சிலர் தீர்க்க தரிசியென்றுஞ் செப்புகிறார் என்றார்கள்.
நீங்களென்னை யாரென்று நினைக்கின்றீர் என்றவுடன்
ஆங்கிருந்த ராயப்பர் ஐயநீர் கிறீஸ்துபிரான்
சுயஞ்சீவி யாகுஞ்சரு வேசன் குமாரனென்றார்.
இதுவே கிறீஸ்தென்பார் ஏகபிதா வோடுசம
முதலுரிமை கொண்ட முதலோனென் றதுரைக்கே
அறிவிக்கு அன்புநிறை விசுவாசப் பிரகரணம்.
மறையோது மாபரனும் இராயப்ப ரைப்பார்த்து
யோனாவின் சுதனுஞ்சீ மோனேநீ பாக்கியவான்

ஏனென்றால் வானிருக்கும் என்பிதா உனக்கிந்த
உண்மை வெளியிட்டார் உனக்குநான் சொல்லுகிறேன்
திண்மருவு மிராயாய்நீ யிருக்கின்றாய்ச் சேர்ந்தன்மேல்
எந்தன் திருச்சபையைப் பந்தித்துக்கட்டுவனென்
நரக வாசல்களதை தானுமேற் கொள்ளாவே
இருதிறவு கோல்களையும் என்றுமுனக் கேகொடுப்பேன்
புவியில்நீ கட்டுவது பொன்னுலகில் கட்டப்படும்
புவியில்கட் டவிழ்ப்பதுதான் பொன்னுலக விழ்க்கப்படும்
என்றுரைத்தார் எம்பெருமான் அன்றுமுதல் ராயப்பர்
பரமன் பிரதிநிதி பாரகத்தி லாயினர்காண்.
வரம்பலவும் பெற்றோர் வல்ல திருச்சபையை
உறுதியா யொற்றுமையாய் உண்மையுடன் காப்பாற்றும்
பொறுப்பமைந்த வேலையினைப் பூவிலவர் கொண்டாரே.
அப்படியே ராயப்பர் ஆசனத்துக் கேவருவோர்
செப்பும் வரங்களுடன் சேரலுவல் கொண்டவராம்.
நாதன்தெய் வீகமதை நம்பியப் போஸ்தலர்கள்
ஓது மொழிகேட்டு விசுவசித்தா ருண்மையிது.
பாவத்துக் குத்தரிப்பு மேவலவ சியமென்றும்
பாடு மரணத்தால் பாருலகை ரட்சித்த
லோடுமூன் றுநாளில் உயிர்த்தெழுவார் தாமென்றும்
சேசுவு மப்போஸ்தலர்க்குச் செப்பிடவு மாரம்பித்தார்.
பாசமுறு மாந்தரவர் பயங்கொண்டார் நாயகனை,
நேசித்த ராயப்பர் நிந்தையவ மானத்தை
யோசித்துச் சகியாமல் உத்தமரைத் தனியாக
அழைத்துப்போ யாங்குக் கடிந்துகொள்ள வாரம்பித்தார்.
சாமி யுமக்கிஃது நேமியில் வராதிருக்கக்
கடவதுமக் கனுவரவு மாட்டாதென் றுரைசெய்தார்.
உடனே பரமனுந்தான் உற்றவரை நோக்கியே
அலகையே என்பின் அகன்றுபோ நீயெனக்கு
விலகா இடறலாக இருக்கி றாய்வேதனுக்குப்
பொருந்தி யதையல்ல பொருந்தாதவைகளையே
வருந்திமிகச் சிந்தித்து வையகத்தி லிருக்கின்றாய்
என்று கடிந்துகொண்டார் எம்பெருமான் அம்மானை.
நின்ற விராயப்பர் நிற்காம லச்சமுடன்
மற்றவர்கள் தம்மிடையே மௌனமா யேகினரே.

உற்றபரன் பாடுகளை மற்றவர்கள் தாந்தவிர்க்கத்
துணியலா காதென்பதாலே தூயபரன் எண்ணமென்க.
கணியாத நேரமில்லை கர்த்தருமப் பாடுகளை.
ஆண்டவரின் உள்ளத் தனைநிறைந்து நின்றனவே.
மீண்டும்பல முறைகள் மீண்டுமதைப் பேசலானார்.
மனுமகன் மனிதருக்குக் கையளிக்கப் படுவாரே
மனுமகன் மனிதரால் கொலைசெய்யப் படுவாரே
ஆயினு மூன்றுநாள் அவருயிர்ப்பார் என்றுசதா
நாயகனும் சொல்லிவந்தார் நாமதனால் உத்தானம்
வானுலகப் பேரின்பம் வையகத்தின் வாழ்க்கைவரும்
ஆனு நிலையாமை அதன்துன்ப துரிதங்கள்
என்னும்பல பாடுகளை ஏற்றனுப விக்கும்விதம்
இன்னனைய நீதிகளை அறிகின்றோ மிப்புவியில்.
சீடர்களோ அவர்சொன்ன பாடுகளை மனதேற்கக்
கூடா தவர்களாய்க் கூறியதின் பொருளென்னென்
றொருவர் ஒருவரையு சாவும் வழக்கமுண்டாம்.
குருவாகும் எம்பெருமான் குவலயத்தில் பாடுகளை
அனுபவித்த லேயன்றி அவர்சீஷர் எல்லோரும்
மனுமகனைப் போல அனுபவிக்க வேண்டுமெனப்
போதித்தார் அவர்பிறகே போகப் பிரியமுற்றோன்
கோதிலனாய்த் தன்சிலுவை தான்சுமந்து கொண்டவரைப்
பின்பற்று வானாக என்றார் பெருமானும்.
அன்புற்ற சீஷர்களும் துன்புற்று வாடினராம்.
பேதையவர் மீதிரங்கிப் பெம்மானும் அன்னவரைப்
போதவிசு வாசம் பொருந்தி யுறுதியாக
இருக்கும் பொருட்டொருநாள் ஏகன்தே வத்துவத்தை
நிரூபித்துக் காட்ட நேயமுடன் சித்தமானார்.

## சேசுநாதர் மறுரூப மாதல்

நாதன் திருச்சபைக்கு நற்றலைமை ஸ்தாபித்த
போதி லொருவாரம் போனபின் போர்மாலை
இராயப்பர் யாகப்பர் இளமையரு ளப்பரெனும்
பிரியமுள்ள சீஷருடன் பெம்மான் ஜெபஞ்செய்ய
ஏகாந்த மான இனியமலை யேறினரே.
ஆகாய மெங்கும் அமைதியாய்த் தானிருக்க

வானத்தில் தாரகைகள் வாகா யொளிர்ந்திலங்க
கானகத்தில் கண்கவருங் காட்சியிடை நின்றவரும்
இயற்கை விநோதத்தை இட்டமுட னோக்குவதே
இயற்கருணை வள்ளலார்க் கின்ப மளிப்பதுவாம்.
ஏறியநற் பர்வதத்தின் பேரோத போரென்பர்
ஏறியுச்சி சேர இருட்டாகி விட்டதுகாண்.
அங்குமுழங் காலிருந்தார் ஆண்டவர் ஜெபஞ்செய்ய.
கங்குலவ ரோடுசென்றார் கண்விழித்துப் பார்த்திருந்தார்
அன்றெல்லாம் வேலைசெய்த அலுப்பாலுங் களைப்பாலும்
நன்றினிய காற்றடிக்க நல்லுறக்கங் கொண்டாரே.
அப்போ திடீரெனவே செப்பரிய ஜோதிபொளி
கண்ணைப் பறிக்குமொளி கானில் நிறைந்திருக்கக்
கண்விழித்துப் பார்த்தார்கள் கர்த்தனது சீஷர்களும்.
வானகமும் பூவும் வரையிடமும் யாவையுமே
வானச்சுட ரொளியால் மாலைபொடு பிரகாசிக்கக்
கண்டு மலைத்தார்கள் கலக்கமிகக் கொண்டார்கள்.
அண்டு மணிபரனும் அங்கில்லை யெனக்கண்டு
திகைத்தார்கள் சுற்றுமுற்றும் பார்க்கையிலே தேவசுதன்
தகைசேர் ஒளிநடுவில் தற்பரனுங் காரணராய்
கதிர்விடுத்து நின்றார் கண்ஜோதி யின்மயமாய்.
கதிரவனின் ஜெகஜோதி கர்த்தன் முகம்வீச
காசினியி லெப்போதுங் காணக் கிடைக்கரிய
வீசுமொளி தூயவெழில் வெள்ளைத் துகிலணிந்தே
அகத்திருந்த தெய்வ மகத்துவஞ் சமீபத்தும்
முகத்துஞ் சுடர்விட்டு மூர்த்தியிடந் தான்விளங்க
ஆண்டவரு மாறி அருள் ஜோதியாயிருந்தார்.
ஆண்டவர்தஞ் சீஷர்களும் ஆச்சரியத் தால்நிறைந்து
மறுரூப மானவரின் மகிமைதனை ப்பார்த் திருந்தார்.
உறுரூபத் தைக்களைந்து முற்றார் திருவுருவை.
சேவையின் ரூபத்தை சேசுபரன் தான்களைந்து
தேவசுத னுக்குரிய திருஉருவை யுற்றவராய்
விளங்க மனுஷீகம்தன்மை வீசுகதிர் தீபமிட்ட
விளக்குக் கூட் டைப்போல மேன்மையுறத் தோன்றினதாம்.
மறுரூபத்தின் போதோ மறைத்த நிழல்நீங்க
திருவொளியின் ஜெகஜோதி தேஜோன்ம யானந்த

மாய்மனிதர் கண்ணுக் கழகாய்த் தெரிந்ததுகாண்.
மோயீசன் எலியாசன் மூத்தனெதிர் தோன்றியே
எருசலையில் நேர விருக்கு மரணத்தைக்
குறித்தவருஞ் சேசுவொடு கூடியுரை யாடினரே.
யூதருக்குக் கட்டளைகள் உதவுமோ யீசனுந்தான்
போதகர்க்குக் கைகட்டிப் புரிந்தார் பணிவிடைகள்.
விந்தையிலும் விந்தையிது வெம்பகைவர் கண்டிருந்தால்
சிந்தையினை என்னென்பார் இத்தரையில் அம்மானை !
உன்னதமாங் காட்சியினை ஓயாமல் பார்த்திருக்க
பன்னவைப் போலநம் பாடுகளின் சல்லாபம்
காதில்விழக் கேட்டார்கள் காட்சியினைக்கண்டுமிக
ஓதரிய வானந்த மூழ்ந்தார்கள் அவ்வேளை.
வந்தவிருமகாத்மாக்கள் வல்லவனின் விடைபெற்று
அந்தமுடன் போகும் அமயத்தில் இராயப்பர்
சுத்தபரன் றாட்பணிந்து சொல்லுமுறை கேட்டிடுவீர்.
சித்தமானா லுங்களுக்குஞ் சேர்ந்தவிருபேருக்கும்
மூன்றுகூடாரங்கள் முன்னவனே நாமடிப்போம்
ஆன்றோருமிங்கே அமர்ந்திருத்தல் நல்லதுவாம்
என்றாஞ் சொன்னதின்ன வென் றறியா ராயப்பர்.
அப்போ தணிநிறைந்த மேகமொன்று நிழலிட
தப்பாதத்தினின்றுந் தானோர் குரலொலியும்
உண்டாகி சப்தித்த கண்டதொனி கேட்டிடுவீர்.
எம்முடைய நேச குமாரனிவர் நாமிவர்மேல்
இம்மியுங் குறையாத ஏற்றபரி பூரணமாம்
பிரியங்கொண்டிருக்கின்றோம் பேசு மிவர்சொல்லும்
அரியமொழி கேட்டிடுங்கள் என்னுமொழி கேட்டதுவாம்.
அதுகேட்டு சீஷர்மிக அஞ்சி நடுங்கினராம்
மதிமயங்கிவீழ்ந்தார்கள் மாட்சிமையைக் காண்பதற்கு
ஏறெடுத்தும் பார்க்கவில்லை ஏழையந்தபேதையரும்.
மாறுபட்ட ரூபம்போய் மானிடரா யானபரன்
அன்னா ரருகடைந்தார் அன்புடனே தொட்டெழுப்ப
மின்னு ரொளிபோக மெய்யன்பர் மாத்திரமே
நிற்கக்கண் டார்சீஷர் நேர்மேக மில்லையங்கு
மிக்க விருள்கவிந்து மேதினியுந் தோன்றியது.
சேசுபிரான் நின்றருகில் செய்யவாறுதன் மொழிந்தார்

நேசமுடன் நால்வர்வரை நின்றிறங்கி வந்தபோது
மனுமக னுயிர்க்கும்வரை மலையிடத்தில் நீங்களுந்தான்
அனுபவித்த காட்சியினை யாருக்குஞ் சொல்லாதீர்
எனமொழிந்தா ரெம்பெருமான் இன்னுமந்த சீஷர்களும்
மனுமகனு யிர்த்தெழுதல் மர்மமறிந் தாரில்லை.
ஆயினுயர் காட்சி யவரகத்தில் நன்றாக
போய்ப்பதிய எப்போதும் பூவில்மறந் தாரில்லை.
மலையைவிட்டி றங்குகையில் மற்றையவப் போஸ்தலர்கள்
அலகை பிடித்தாடும் அதிபாலிய மாணவனை
கொண்டுவரக் கண்டாரே கோதிலா ரெம்பெருமானும்.
பேய்பிடித்த பையன் பிதாஅவரை யண்டிவந்து
மாயப்பி சாசதனால் மாதுயரம் எய்துமகன்
மேற்கிருபை வைத்திடவே வேண்டுமென்றும் சீஷர்தம்மால்
கூறும்பே யோட்டவே கூடவில்லை யாதலினால்
மன்றாடி யான்வந்தேன் மாதவனே என்றுரைத்தான்.
விசுவாச மில்லாத வீணரெனக் கடிந்து
விசுவாச முனக்குண்டேல் வேண்டுவன சித்திக்கும்
என்றவுடன் அன்னவனு மிட்டமுடன் விசுவாசிக்
கின்றே னெனவுரைக்க கிறிஸ்தேசு நாதருந்தான்
அலகையினை யேவி யகற்றினார் அக்கணமே.
அலைக்கழிக்கப் பட்டபையன் செத்தவன்போ லாயினனும்
ஐயன் அவன்கரத்தை யன்புடன் பிடித்தெழுப்பி
பையனை யனுப்பிவிட்டுப் பாங்குடனே சென்றாராம்.
வீட்டுக்குள் போகையிலே வியப்படைந்த சீஷர்களும்
நாட்டமாய் நாங்கள்செய் நன்முயற்சி வீணாகப்
போனதென்று சொல்லிடவே போதகரும் இத்தகைய
பேய்கள் ஜெபத்தாலும் உபவா சத்தாலும்
அன்றிவே றெவ்விதத்து மசையா தெனவுரைத்தார்
என்று மிதுவுண்மை என்றறிவீர் அம்மானை.

## பன்னிரு சீஷர்கள்.

கர்த்தருந்தான் சீஷருடன் கப்பர்நாவு மூருக்கு
உத்தமரும் போகையிலே உள்ளம் புழுங்கிசிலர்
பின்னாலே வந்தோர் பெரியவன்யார் தங்களுக்குள்

என்னும் விருவின்மேல் எய்தியதோர் சச்சரவும்.
ஆண்டவரும் ஊரையடைந் தங்கோர் அகமிருந்து
மாண்புடனப் போஸ்தலரை மாதவருங் கேட்டாராம்
நீங்கள் வழிதனிலே நினைத்தென்ன பேசிவந்தீர்
பாங்கா யுரைத்திடுவீர் என்றார் பரமனுந்தான்.
ஆனாலன் னோர்மௌன மாயிருந்தார் அப்போது
வானலோ கத்தினிலே வாழ்பெரியன் யாரென்று
மறுமொழியா யொருசீஷர் மாதவரைக் கேட்டாரே.
உறுபரனு மப்போ சிறுபிள்ளை யொன்றையரு
கழைத்தணைத்து மத்தியிலே ஆர்வமுட னேநிறுத்தி
மழலை மொழியுமிந்த மகவைப்போல் இல்லையெனில்
பரலோக நாட்டிற் பிரவேசஞ் செய்தலரி
தென்றார் அதுகேட்டுக் கொண்டார் பெரும்விந்தை.
பிள்ளைகளைப் பற்றிப் பெருமையாய்ப் பேசியவர்
கள்ளங் கபடில்லா நற்குணத்தோ ராயிருந்து
தாழ்மை மிகவுடையோ ராகவுமே தாரணியில்
வாழ்ந்திட வேணுமென வல்லவரு மிவ்வாறு
காட்டத் திருவுளந்தான் காசினியிற் கொண்டாரே.
நாட்டமுடன் மற்றொருநாள் நம்பிவரும் பிள்ளைகளை
என்னிடத்தி லேவிடுங்கள் ஏனெனிலோ பரலோகம்
அன்னவர்போன் றோர்க்குரிய தாமென்றார் அம்பரனும்.
இவ்வாறு சேசுபிரான் ஏழையப் போஸ்தலர்க்கு
செவ்விநிறை போதகங்கள் செய்தார் மதியடைய.
மன்னிப்புப் பன்முறைகள் மண்ணி லளிப்பதையும்
பொன்னுலகைத் தானடைய என்னசெய்வ தென்றுவந்த
வாலிபனைப் பார்த்து வானிலே பொக்கிஷத்தை
சாலவே சேர்க்கவொரு சாதனத்தைக் கற்பித்தார்.
தனவந்தன் சேணுலகைச் சார்வதிலும் ஒட்டகந்தான்
இனமாக ஊசிசெவி நுழைதல் எளிதென்று
நாதனார் சீஷர்களை நல்லவித மாகப்பல
போதகங்கள் செய்து பொருந்து சந்தேகமதைத்
தீர்த்துவைத்தார் மேலும் தேவலோ கத்தினிலே
சீர்த்தியுட னாசனங்கள் சீஷர்தமக் குண்டென்று
வாக்களித்தார் வல்லவரும் வையகத்தில் அம்மானை.
நீக்கமறு மாபரமன் நேசமுடன் அன்னவரை

அன்பாய் நடத்திவந்து அப்போஸ் தலர்க்குள்ளே
வன்பேய் வசப்பட்ட வஞ்சகனு யூதாசன்
சேசுபரன் போதகத்தைச் செவிமடுத்துக் கேளாமல்
மாசு நிறைந்த மனத்தனாய்ப் பொன்னாசை
மிக்கவனாய்ச் சிந்தையினில் மேவுந் துரோகமுடன்
தக்கவழி யேகாமல் தரணியி லிருந்துவந்தான்.
அதுகண்ட ஐயனுந்தான் அன்னவனை நேசித்து
நிதிகண்ட ஆசையினை நேர்மையுட னேயொழிக்க
வேண்டுமென எச்சரித்து வேற்றுமை யில்லாதவனை
ஆண்டவரும் மற்றவர்போல் அன்புட னடத்திவந்தார்.
ஆயினும் அக்கொடியோன் ஆற்றலரை நாடிப்போய்
தூயவரைக் காட்டித் துணிவுடன் கொடுப்பனென்று
ஐயனுந்தாம் நன்று யறிந்திருந்தா ரானதினால்
வைய மனம்வருந்தி நாயகனுந் தாமிருந்தார்.
ஒருநாள் அவர்ஜெபித்த ஓகரிய மாதிரியை
மருவா ததிசயித்து மாட்சிமையைப் பார்த்திருந்தார்.
அப்போ தொருசீஷர் தற்பரனைப் பார்த்துஜெபம்
செப்பும் விதமெமக்கு சீருரைக்க வேண்டுமென்றார்.
மாட்சியுடன் நாதன்பர மண்டலமா மந்திரத்தை
மோட்சகதிக் கானவிதம் மோனருப தேசித்தார்.
வானபிதா வில்லத்தைத் தானநன்று போனவர்கள்
மீண்டுமவர் ஆசையாய் விரிகாங்க ளிடையில்வர
வேண்டுமென ஊதாரிப் பிள்ளை வியனுவமை
நல்லாயன் சீருவமை நாதனார் சொன்னபின்பு
நல்லாயன் நானே எனதாடு கட்காக
என்னுயிரைக் கொடுக்கின்றேன் என்று ருபர்பானார்.
இன்னுயி ரைத்தந்தே இரட்சணியந் தரும்நேரம்
மண்ணிற் குறுகிவர மாசில்லா சேசுபிரான்
எண்ணி யதற்காக இத்தரையில் காத்திருந்தார்.

## மரியா மார்த்தா.

நசரேசு நாதர் நலங்கள் பலவியற்றி
இசையாக எங்கும் இருந்துவரும் நாளையிலே
பகைவர் பரிசேயர் பார்த்திபரை யேகொல்ல

மகிழ்ச்சி செய்தார்கள் மேவும் ஜனங்களுந்தான்
அவரை மிகவாக ஆசையுடன் நேசித்து
புவியீ திருத்தமையால் பொல்லாங் கவர்க்கிழைத்தால்
சும்மா விருப்பரோ சூழுமந்த மாந்தருந்தாம்?
இம்மா திரியான எண்ணங்கள் சத்துருக்கள்
உள்ளத்தில் மேவ ஒருவர் ஒருவருடன்
கள்ளத் தனமாகக் கலந்தாலோ சித்தார்கள்.
அன்னார் நினைவினைத்து மாண்டவருந் தானறிந்து
இன்னுயிரை யீயுநாள் அண்மி யிருப்பதற்காய்
சந்தோஷ மாயிருந்தார் சர்வாதி கர்த்தனுமே.
விந்தை பலபுரிந்த மேலவரை எப்போதும்
ஒன்னலருக் கஞ்சாமல் உள்ளுவந்து வரவேற்கும்
சின்ன குடும்பமொன்று ஜெருசலைக் கருகிருக்க
அதைநாடிச் சென்றார் ஆதரையி லன்பொடுமன்
பதைநாடி வந்த பராபரனும் எம்பெருமான்.
ஜெருசலேம் பட்டணத்துக் கருகிருக்கும் ஒலிவேத்து
மலையோர முள்ளவூர் பெத்தானியா மாதிருவர்
நிலையாக சோதரனோ டங்கிருந்த கேசிலம்
வசித்திருக்க அங்கையன் வந்துதங்கு தல்வழக்கம்.
பசியாற நாதனுக்குப் பற்சுவையன் னந்தந்து
போஷிப்பதில் நோக்கம் பொருந்தியவள் மார்த்தாளும்.
தோஷ மருவின்ற தோகைமரி யென்பாளோ
சேசுபிரான் வாய்மொழியைச் சீருடன் கேட்பதிலே
ஆசைமிக வுடையாள் அன்னவரின் சோதரனே
லாசர் எனுமனிதன் மாசில்லா உத்தமரும்
தங்களில்லாம் நாடித் தயவுடன் வந்தனபோல்
மங்கையவள் மார்த்தாளும் நாதனுக்கு வேண்டியதைச்
சித்தப் படுத்துவதில் சிந்தைமிகக் கொண்டிருந்தாள்.
பத்தியுடன் மரியாள் பாதத் தருகிருந்து
அத்தன்சொலும் வார்த்தைகளை ஆர்வமுடன் கேட்டிருந்தாள்.
மெத்தமன எரிச்சல் மேவுமந்த மார்த்தாளும்
ஆண்டவரே சோதரியும் அடியேனுக் குதவாமல்
ஈண்டிருக்கத் தனியாக ஏவல்புரி கின்றேனே
என்றுரைக்க நாதனுந்தான் என்னினிய மார்த்தாளே
இன்றுபல காரியங்கள் ஏற்றுக் கவலையுடன்

கலங்குகிறாய் மரியாளோ காசினியில் உத்தமமாம்
நலங்கொண்ட காரியத்தை நங்கைதெரிந்து கொண்டாள்
என்று மொழிகூறி ஏந்திழையை யன்பாக
இன்னிலத்தி லேதிருத்த ஏகபரன் உள்ளுவந்தார்.
இப்படி யிருக்கையிலே ஏகனுந்தா னில்லாத
தப்பான காலத்தில் தாசனும் லாசருமே
கடுநோயில் வீழ்ந்தான் கனபிரிய சோதரிகள்
உடனே நசரேசு நாயகனுக் கோராளை
விட்டார்கள் அப்போது விமலன் பெரியாவில்
இட்டமுடன் தானிருந்தார் ஏசுபரன் ஆனுந்தான்
உங்கள் சிநேகிதனும் உற்றான் கடுநோயென்
றங்கிருந்த நாதனுக் கறிவித்தா ரானாலும்
லாசர் அதற்குள்ளே பாசவுடல் விட்டொழிந்து
மரணித்தான் அப்போது மாதவர் வந்தாரில்லை.
மரியாளும் மார்த்தாளும் மனம்நொந் தழுதாலும்
நம்பிக்கையோ டிருந்து நாதன் வருகையினை
அம்பர்காத்தி ருந்தார்கள் அந்தவிரு மாதர்களும்.
வீட்டில் அழுதாலும் மேவும் பலமாந்தர்
கூட்டமும் வந்திருக்கக் கூடியெல் லோருமாய்
செத்தவனைக் கொண்டுபோய் சேமித்து வந்தார்கள்.
பத்திமிகு மாதருந்தான் துக்கங்கொண் டாடினராம்.
நம்பிக்கை வீணாக நட்பாளர் வந்தேனும்
தப்பிரிய மாதர்க்குத் தக்கவாறு தல்தந்து
போகவில்லை யென்று புகன்றார் பலரிகழ்ந்தார்.
அகத்தில் வெறுப்பின்றி அம்மாதர் நம்பிக்கை
யோடிருந்தா ரப்போதும் உண்மைநெறி காட்டுமையன்
தேடிவர வில்லையெனத் திகைத்தே வியப்படைந்தார்.
ஆனாலும் எம்பெருமான் அங்ஙனமேன் செய்தாரோ?
தினலாசர் நோயுற்றான் என்றவுடன் தேவமகன்
தாமிருந்த வீட்டினிலே தானிருநாள் தங்கினரே.
நாமறிதல் தேவசித்தம் நங்கையரே முடியாதாம்.
பின்னர்ப் பரஞ்சேசு பெம்மானுஞ் சீஷருக்கு
மன்னுயூதே யாவுக்கு மாண்புடனே போவமென்றார்.
அன்னவரும் ஆண்டவரே அவ்விடத்தில் யூதர்களும்
உம்மைக்கல் லாலெறிய ஓயாமல் தேடினரே

சமமைக்கு நீர்திரும்பல் சம்மதமோ வென்றார்கள்.
லாசருந் தூங்குகின்றான் நேசமுடனேயெழுப்பப்
போகின்றேன் என்றாரே பொற்பரனும் அம்மானை.
ஏகன்மொழி நித்திரை தான் என்றமியல் பானதென
அப்போஸ்தலர் நினைக்க ஆண்டவரும் சாவென்று
செப்பரிய அற்புதமும் செய்யவழி நடந்தார்.
சேசுபிரான் வந்தவுடன் செய்திதனைக் கேட்டறிந்து
நேசமுடன் மார்த்தாள் நிகழ்த்தும் விசுவாசவுரை
கேட்டு மகிழ்வடைந்து கேள்வருந்தா னேதுசொல்வார்
நாட்டமுடன் லாசருமே நானுமுயிர்ப் பானென்றார்.
இறுதிநாள் உத்தானம் இவனுயிர்ப் பானென்றெனக்கு
தெரியுமென்றாள் அந்தத் தெரிவைமார்த் தம்மாளும்.
உத்தானம்உயிர்நானே உற்றவிசு வாசியவன்
செத்தாலும் பிழைப்பானே செய்ய விசுவாசியுயி
ரோடிருக்கும் போதெவனும் உண்மைநித்தி யத்துக்கும்
சாடிறக்க மாட்டானீ நம்புகின்றா யோவென்றார்.
அப்போது மார்த்தம்மாள் ஆண்டவரே நீர்கிறீஸ்து
இப்பாருக் கேவந்த ஏகபரன் சேயென்று
நான்விசுவா சிக்கின்றேன் நாயகனே என்றுரைத்தாள்.
மான்விழியாள் மரியம்மாள் மாதவரைக் கண்டதுமே
மார்த்தாளைப் போலுரைத்தம் மாதவரைக் கூட்டியேகப்
பார்த்தார் பரமனுந்தான் பக்தனது கல்லறையை.
நான்குநா ளாயிற்று நாறுபிணம் அங்கடைத்து
மான்விழியாள் மார்த்தம்மாள் சொன்னவுரை யிதுவாகும்.
மாதே விசுவசித்தால் மாபரமன் மகிமையையிப்
போதேநீ கண்டிடுவா யென்று புகன்றேனே
என்ற மனுமகனார் எதிர்கல் லறைமூடி
யொன்றும் பெருங்கல்லை யோர்புறத்தில் தள்ளென்று
வானேக்கி மன்றாடி வாவென்று லாசரையே
ஆனபேர் சொல்லி யழைத்தாரா மெம்பெருமான்.
அக்கணமே செத்தவனும் அற்புதமா யங்குவர
மிக்க வதிசயித்தார் மேவிநின்ற மாந்தரெல்லாம்.
லாசர் உயிர்த்தெழுந்த பேசரிய அற்புதத்தை
பரிசேயர் கேட்டுப் பருவரலுங் கொண்டார்கள்.
சரியென்று பேசாமல் சஞ்சலமாய் நாமிருந்தால்

மோசம்வந்து நேருமென மூப்பன்கைப் பாசென்பான்
பாசம்விடாப் பாதகனும் பார்ஜனங்கள் சேதமின்றி
யுய்ய ஒருமனிதன் சாதனல மென்றுரைத்து
மெய்யன் றனைக்கொல்ல மிகுசூழ்ச்சி செய்திருந்தான்,
ஆகவே சேசுபிரான் அன்றுமுதல் யூதரிடை
போகாம லேயெப்பிரேம் என்னுமூர் போயிருந்தார்.

## ஜெருசலேம் பிரவேசம்.

மூவாமுதல்வ னெனும் முப்பரமன் சேயாகும்
பாவப் பிணிதீர்க்கப் பாருலகை நாடிவந்த
பரஞ்சேசு நாதரும் பாடுபடும் நாள்வரவே
வரங்கொண்ட சீஷரிடம் வாதைகளை முன்னுரைத்து
ஜெருசலேம் பட்டணந்தான் தீவிரமாய்ப் போகலுற்றார்.
அருநலங்கள் செய்திருந்த ஆண்டவருக் காபத்து
நேருமோ வென்று நினைத்திருந்தார் சீஷர்களும்
பாருலகை மீட்கும் பரமன்மொழி யோராமல்
நாங்கள் விரும்புவதை நாட்டமாய்த் தாருமென்றார்.
நீங்கள் விரும்புவதென் என்றுரைக்க நேசபரன்
உங்கள் மகிமையிலே ஒருவன் வலதிடத்தும்
பங்கா யிடதிடத்தும் பாங்கா யமர்ந்திடவே
செய்தருளும் என்றார்கள் செபலறியாப் பேதையரும்
எய்துங் கதியறியா ஏழைபக்த சீஷர்களும்.
கேட்கிறது மின்னதென்று கேள்வர்களே அறியீர்கள்
வேட்கை யொடென் பாத்திரத்தில் வேண்டுவன பானஞ்செய்
வீரோநீர் என்றுரைக்க எங்களால் கூடுமென்றார்
ஓராத உத்தமராய் உற்றவந்த சீஷர்களும்,
ஆனாலும் நீர்விரும்பும் ஆசனமளிப்பதுவோ
நானல்ல எந்தன்பிதா நாளுமதைச் செய்வாரே
என்றன்பர் தான்மொழிய எரிச்சல் மிகக்கொண்டு
நின்றவரைத் தாழ்ச்சியாய் நீணிலத்தில் ஜீவிக்கக்
கற்பித்துச் சச்சரவைக் கர்த்த னடக்கினராம்.
நற்புத்தி ஆவியினால் நாளடைவில் நேருமென
நாதனறிந்தவரை யாதரித்து வந்தாரே.
பாடுகளின் மாநகராம் பார்த்திபனும் போகையிலே
வீடுபெறும் சக்கேயு மேலிரக்கங் கொண்டவனைக்

கூப்பிட் டெரிக்கோவில் கூறுமவன் வீட்டினிலே
சாப்பிட்டார் ஆயக்கா ரன்வீட்டில் சாப்பிடுதல்
தாழ்வென் றெல்லோரும் முறுமுறுத்தார் சக்கேயு
வாழ்வெய்தி ரட்சண்யம் வாகாய் வரப்பெற்றான்.
மறுநாள் ஆண்டவரும் மாநகருக் கேகையிலே
உறுகண்ணி லாக்குருடன் பார்த்திமேயுஸ் உத்தமரே
தாவீதன் புத்திரனே பாவியென்மே லிரங்கென்றான்.
சேவித்த அந்தகற்குச் சேசுபிரான் பார்வைதந்து
பெத்தானியாவில் பெருமானுந் தங்கலானார்.
உத்தமரைத் தேடி யூதர் திரிந்தார்கள்.
பாஸ்கா திருநாளைப் பாணகரிற் கொண்டாட
ஆஸ்தான நாயகரும் அங்கடைவ ரென்றிருந்தார்
நாதனைக் கொல்வதற்கு நாடிநின்ற யூதர்களே
போதகர்பெத் தானியவில் போயிருக்குஞ் செய்தியினை
பார்த்த ஜனங்கள்வந்து பாதகர்க்குச் சொன்னார்கள்
மார்த்தாளின் சோதரனை மண்ணிற் கொலைசெய்யத்
தேடினார் அக்கொடிய தீயராம் பரிசேயர்.
நாடியவரு ளுயிர்த்த நற்புதுமை மாற்றலர்க்கு
சற்றும் பிடிக்கவில்லை சர்வாதி கர்த்தனையே
மற்றுமுள்ள பேர்களுக்கு மாய்மாலக் காரனென்றும்
பகல்வேஷக் காரனென்றும் பாவிகளோடுற வாடும்
அகம்பாவம் கொண்ட அதிக்கிரமனென்று மெங்கும்
நாதனுக்கு மாறாக நாடெங்கும் பேசிவந்தார்
யூதர்தலைவர்களும் உண்மையல்ல அம்மானை.
சனிக்கிழமை மாலை சாரும் பெருநோயன்
தனிகனும் சீமோனின் வீட்டில் தயாபரனும்
வீற்றிருந் தளித்த விருந்துண்டார் லாசருடன்
மாற்றலர்க் கஞ்சாமல் மாதவரும் அங்கிருந்தார்.
மார்த்தாள் பரிமாற மாபரனும் உண்டாரே
பார்த்தாள் மரியம்மாள் பாசமுடன் வாசனைகொள்
பரிமள தைலமதைப் பாங்குடனே கொண்டுவந்து
பரமன் திருச்சிரசில் பக்குவமாய்த் தேய்த்தாளே.
விலையுயர்ந்த தைலத்தை வீணாக்கி னாளென்று
நிலையில் நினைவுடையான் நீசன் அந்த யூதாசும்
மரியாளைக் கண்டித்தான் மற்றுமுள சீஷர்களும்.

எரியு மனத்தினராய் ஏந்திழையைக் கண்டித்தார்.
அதுகண்ட சேசுபரன் அவளையேன் தொந்தரைகள்
இதுகண்டு செய்கின்றீர் ஏந்திழையும் என்னடக்கம்
வருமென் றறிந்தவளாய் வையகத்தில் என்னுடைய
திருமேனி மேற்பூசத் தெரிவையும் முந்தி கொண்டாள்.
இச்சம் பவமென்றும் இப்பாரில் சுவிசேஷம்
உச்சரிக்கு மிடமெல்லாம் உன்னி யுரைத்திடுவார்
என்று மனுமகனும் இன்பமுடன் சொன்னாரே.
சீமோன் அகம்விட்டு செம்மல்மறு நாட்காலை
தாமடையும் பாடுகளைத் தாங்கியுறப் போகின்றார்.
அன்றாதி வாரம் அவனடைந்த சம்பவத்தை
நன்றாக நானுரைப்பேன் நங்கையரே கேட்டிடுவீர்.
தீர்க்க தரிசிகள்தாம் திவ்யகர்த்தர் தமைப்பற்றி
மார்க்கமாய்ச் சொல்லுமுறை மாநிலத்தில் நிறைவேற
ஆண்டவரும் பெத்பாஜ் எனுமூர் அணுகியதும்
வேண்டுமெனச் சொல்லி வெளியிடத்தில் கட்டிநிற்கும்
வேசரியைக் கொண்டு விரைவிலிங்கு வாருமென
சேசு பிரானிரண்டு சீஷர்களை யங்கனுப்ப
அப்படியே குட்டியொன்றை யவிழ்க்க உரியோரும்
இப்பிராணி யேனவிழ்க்கின் றீரென்க சீஷர்களும்
ஆண்டவர்க்குத் தேவையென்றா ரன்னா ரனுமதிக்க
வேண்டிவிதங் கொண்டுவந்தார் வேசரியின் குட்டியினை.
பூவுலகை மீட்கவந்த பொற்பரனும் வேசரிமேல்
மேவி யமர்ந்துநகர் மேலவரும் போகின்றார்.
மேசையா வேந்தர் மிகுஜனங்கள் புடைசூழ
ஆசையாய்த் தலைநகருக் காண்டவரு மூர்வலமாய்ப்
போகின்றார் வேசரியின் குட்டியின்மேல் போதகரும்.
ஆகமத்திற் கூறும் அணிமொழிகள் மெய்யாக
மாந்தர் அவர்க்கெதிரில் மரத்தின் கிளைகளிட்டு
வேந்தர்க் கெதிரினிலே விரித்தார்கள் வஸ்திரத்தை.
இவ்வாறு போகையிலே இன்னு மொருகூட்டம்
பௌவம்போல் எதிராகப் பார்த்திபரை தாமழைக்க
வந்தார்கள் அப்போது வல்லபனார் சீஷர்களும்
சிந்தை மிகமகிழ்ந்து சேசுவினை வாழ்த்தியே
தேவனது நாமத்தால் வருகிறவர் ஆசீரை

மேவிடுக தாவீதன் புத்திரர்க்கு ஓசன்னா
என்று புகழ்ந்தார்கள் ஏர்மிகுத்த சீஷர்களும்
கரத்திலே குருத்தோலைக் கண்ணியமா யேந்தியவர்
பெரியானை வாழ்த்திப் பெருமையுடன் வந்தார்கள்.
ஜனங்கள் ஆர்ப்பரித்து சந்தோஷங் கொண்டாடி
இனமாய் வரவேற்றார் இறையை யழைத்தேதக.
தற்பரனு மப்போது தன்னகரைப் பார்த்தழுது
பற்பலவாம் நன்மைபெற்றும் பாராது கண்மறைத்து
தற்காலம் விட்டதனால் நாசம்வந் தெய்துமென
அற்பரின் செயல்நினைந்து கண்ணீர்விட் டழுதாராம்.
பின்னால் வரவிருக்கும் பேர்விபத்தைக் கண்டறிந்து
முன்னால் தெரிவித்தார் முத்தனெனும் எம்பெருமான்.
பரிசேயர் கண்டார்கள் பார்த்திரா எல்லோரும்
பரிவாய் அவன்பிறகே பாங்குடன் போவதையே
என்று மனம்புழுங்கி யேமாந்து மன்னவனை
நின்றுபார்த் திருந்தார்கள் சேர்ந்த பரிசேயர்.
பிள்ளைகள் வரவேற்றுப் பேரானந் தங்கொண்டு
உள்ள மகிழ்ந்தவரும் ஓசன்னா வென்றேதி
கீதங்கள் பாடிக் கிறீஸ்தேசு நாதனையே
ஓதி மிகவாழ்த்தி ஓசன்னா வென்றார்கள்.
அந்நாள் பாஸ்காவின் ஆட்டைப் பலியிடுநாள்.
அந்தமுடன் நம்மையே ஆண்டவருந் தான்பலியாய்
செம்மறிப் புருவையாய் ஜெகத்தோர் களிக்கவென
பெம்மானும் கோவிலுக்குப் பிரியமுடன் வந்தாரே.
பிள்ளைகளோ டிருந்து பிணியாள ராதியரை
உள்ளபடி குணமாக்கி உத்தமர்பெத் தானியவுக்
கேகியவண் தங்கியிருந் தாரஞ் ஞாயிறன்று.
சாக மனிதருக்காய்ச் சார்ந்துவந்த தேவபிரான்
ஓட்டோ லவராக உத்தமரும் போனதினம்
இட்டமாய் நாமும் எழில்குருத்து ஞாயிறெனக்
கொண்டாடுகின்றோம் குவலயத்தில் அம்மானை,
மண்டலத்தை மீட்கவந்த மாபரமன் மாட்சியிது!

## குருத் துரோகம்.

கத்தன் உலகிருந்த கடைசி வாரந்தனிலே
உத்தமரும் பல்விரிய உண்மைகளை வெளியிட்டார்.
திங்கட் கிழமைதினம் திரும்பி நகர்போகத்
துங்கப் பரன்கோவில் தொன்மையிருந் தாப்போலே
பண்டங்கள் விற்கும் பழங்கடையா னதுகண்டு
கொண்டார் கடுங்கோபம் கூவி யுரைத்திடுவார்
என்னுடைய வீடுஜெப வீடெனவே யழைத்தல்
உன்னமல் நீங்களதை உற்றகள்வர் குகையாக்கி
விட்டீர்கள் என்று விமலபரன் சொன்னாரே.
கேட்டார்கள் வர்த்தகர்கள் கிலிகொண்டு பண்டங்களை
எடுத்தும் எடுக்காமல் பிடித்தார்கள் பேரோட்டம்.
ஐயன் குரலொலியும் அச்ச மளித்ததுவாம்.
மெய்யன் மாட்சிமையால் மேவியது தூய்மையதாய்.
கோவில் குருக்களல்லோ கோலத்திற்குக் காரணர்கள்
மேவியொன்றுஞ் சொல்லாமல் மேலவரைக் கொல்லும்வரை
தேடி யிருந்தார்கள் தீய குருக்களுந்தாம்.
நாடிப் பரிசேயர் நாட்டி லவமானம்
நாதனுக்குச் செய்தல் நன்றென்று தாம்நினைத்து
போதகரை யண்டிப் பொருந்தாத கேள்விகளைக்
கேட்க மனங்கொண்டார் கேலிசெய்யும் நோக்கமுடன்.
நாட்கிழமை செவ்வாய் நமதுபரன் போகையிலே
எந்த அதிகாரத் தாலிவற்றைச் செய்கின்றீர்
இந்த அதிகாரம் உமக்களித்த தாரென்றார்.
அதற்குப் பதிலாக அருளப்பர் தீட்சைவந்த
விதங்கேட்க அன்னார் விடையளிக்கக் கூடாமல்
தெரியா தென்றோதவே தேவபிரான் அவர்களுக்கு
உரிய விடையளிக்க மாட்டேனென் றேயுரைத்தார்.
பின்னர்த் திராட்சைக் கனிபாகம் பெற்றுவரத்
தன்னுங் குமாரனையே கொன்ற உவமைதனை
கல்யாணத் திக்கழைத்த காவலன் நன்னுவமை
வல்லவனுஞ் சொல்லி வகைமோசக்காரர்தமை
வாயடக்கினார்பரனும் வஞ்சகரோ மீண்டும்வந்து
நேயரைப் போல்பேசி நிலத்தில் இறையளித்தல்

தகுமோ தகாதோவென் றுண்டவரைக் கேட்டார்கள்.
அகத்தை யறிந்தபிரான் அன்னவரை நோக்கியே
கள்ளமன ஞானிகளே உள்ளஞ்சோ திப்பானேன்
வரிப்பணத்தைக் காட்டுங்கள் வகைசொல்வேன் என்றுரைக்க
தெனிபரெனும் நாணயத்தைத் தேவனுக்குக் காட்டவே
இனியபா னதிலுள்ள எழுத்துடன் ரூபத்தைக்
காட்டியிவை யாருடைய தென்கக் கசடர்களும்
நாட்டில் செசாருடைய தென்றார்கள் நாயகரும்
சேசாரு டையவற்றை சேசாருக் கேகொடுங்கள்
ஈசனு டையவற்றை ஈசனுக் கேகொடுங்கள்
என்று பதிலளிக்க ஏமாற்ற வந்தவரும்
ஒன்றும் சொலமுடியா தோட்டம் பிடித்தார்கள்.
ஜனங்க ளதுகண்டு கனவதி சயங்கொண்டார்.
ஜனங்கள் மனப்பான்மை சாற்றுவ தற் கில்லையம்மா.
பரிசேயர் செய்துவரும் பாதகங்கள் கண்டுபயங்
கரமாக அன்னவரைக் கண்டித்தார் கள்ளமன
ஞானிகளே உங்களுக்கு ஞாலமையோ கேடாகும்.
என ஜெருசலேமின் இழிகுணத்தைக் கண்டித்தார்
அதனழிவை யெண்ணி யடிக்கடி விசன முற்றார்.
அதற்கு வரவிருக்கும் அழிவி னறிகுறிகள்
உலக முடியுமுன் உண்டாகுந் தோற்றங்கள்
விலகரிய தீர்வைநாள் மேவுமுன் காசியினில்
தோன்று மதிசயங்கள் தோல்புவி யழிந்தவுடன்
வான்பரமன் நடுதீர்க்க வன்மையுடன் வானகத்தில்
மகிமையாய் வந்து மாட்சியுடன் தீர்ப்பளிக்கும்
வகைபாதி சீஷருக்கு வல்லபருஞ் சொன்னாரே.
புதன்கிழமை யாதன் புகல்பாஸ்கா பண்டிகையும்
இதமா யிருதினத்தி லிருக்கு மப்போ மனுமகன்றான்
சிலுவையில் சாவரென சீஷர்களுக் கேயுரைத்தார்.
வலுவாயன் கைப்பாஸ் வளர்வீட்டில் சங்கத்தார்
கூடி யொரு முடிவு கொள்ளயோ சித்தார்கள்.
நாடி யொரு மனிதன் நாளும் வரக்கண்டார்கள்.
அவனை பரமனுடன் அந்தரங்கமாய் வசித்து
நவங்கள் பலகண்டு நாதனைநன் கறியூதாஸ்
துரோக சிந்தையுடன் துன்னலரை யண்டிவந்து

விரோதிக்கு மாண்டவரை மெய்யாக வேகாட்டிக்
கொடுத்திடுவேன் நீங்களென்ன கொடுப்பீர்க ளென்றுரைக்க
அடுத்த பகைவரந்த அற்பனுக்கு மூன்றுபத்து
வெள்ளிப் பணந்தந்தார் வேதாக மத்தின்சொல்
உள்ளபடியே நடக்க உலகமிது நேர்ந்ததுவே.
வேதனிடம் நன்மைபல வேண்டுமள வாய்ப்பெற்ற
காதகனும் நாளடைவில் கல்நெஞ்ச னானமையால்
போதகரைக் காட்டி பொருந்தலர்கை யொப்புவிக்க
பாதகனுந் தான்துணிந்தான் பாரகத்தி லம்மானை.
பொன்னாசைப் பேய்பிடித்த புல்லனவன் பூதாசம்
மன்னாதி மன்னவர்க்கு மண்ணில் சதிநினைத்தான்.
இப்படியிருக்கையிலே ஏசுனுந்தான் சீஷர்களை
செப்புமரும் பாடுகட்காய்ச் சித்தப் படுத்தினராம்.
அவர்தந் திருத்தாயார் அவ்விஷயங் கேட்டுமன
அவதிபுற நேர்ந்தாலும் ஆண்டவரின் சித்தத்துக்
கமைந்தாள் திடமாக அன்புமிக்க சேசுவினை
நமைமீட்கும் பொருட்டாக நல்கமனங் கொண்டாளே.

## தேவநற்கருணை யுண்டாக்குதல்.

குருவாரங்காலையிலே கோதிலரின் சீஷர்களும்
மருவியே பாஸ்காவை மண்ணிற் புசிப்பதற்கு
எங்காயத் தஞ்செய்தல் என்றவரைக் கேட்டார்கள்.
துங்கபரன் அன்னவர்க்குச் சொல்லுமொழி கேட்டிடுவீர்.
நகருக்கு நீங்கள்போய் நல்லஜலம் கொண்டகுடம்
திகழ்மனிதன்பின்னாலே தேறியே நீங்கள்போய்
அவனுழையும் வீட்டெஜமான் ஆனவனைப்போதகரும்
நுவமிகுந்தபாஸ்காவைத் துன்னிப் புசிக்குமிடம்
எங்கென்றுகேட்பீர் இனமாக அன்னவனும்
தங்கிப் புசிக்கத் தயாராய் இருக்கின்ற
அசன அறையொன்றை அன்புடனே காட்டிடுவான்
நிசமாய் முஸ்திப்பு நேர்ந்தங்கே செய்யுங்கள்
என்றார் திரிபுவன மீந்தநல்ல தற்பரனார்.
சென்றார் இருசீஷர் சேசுபிரான் சொற்படியே.
வல்லபரன் சொன்னதுபோல் வண்ணகரில்யாவுமே
நல்விதமாக நடந்ததுகாண் அம்மானை.

பட்டணத்தில் சீயோன் பருவதத்தின் பாங்கிருந்த
கட்டடத்தில் பாஸ்காவைக் கத்தனுக்காயத்தம்
செய்தார்கள் வேண்டுவன சேகரித்து வைத்தார்கள்
தெய்வீக நாதன்மனந் தெரியாத சீஷர்களே.
மாலைவந்த போதினிலே மாபரனுஞ் சீஷருடன்
காலைசொன்ன வீட்டினுக்குக் கால்நடையாய் வந்துற்றார்.
ஆசனத்தில் எல்லோரும் அமர்ந்தபின் ஆண்டவரும்
ஆசைமேலாசையாய் யானிருந்தேன் பாடுபட
முன்னுங்களோடிந்த மூரிதரும் பாஸ்காவை
உண்ணமிக ஆவலுடன் உள்ளபடி யானிருந்தேன்
என்றுரைத்தா ரப்போ திளையவரு ளப்பருந்தான்
தொன்றுதொட்டு வருமந்தத் தொல்பாஸ்கா வின்பொருளைக்
கேட்டார்வழக்கம்போல் கிறீஸ்தேசு நாதருந்தான்
நாட்டமுடனதைவிளக்கி காட்டியபின் அங்கிருந்த
செம்மறியாட் டின்குட்டி சிலுவை வடிவாக
தம்முன்னிருக்கவே தற்பரனார் சீக்கிரத்தில்
நிறைவேறப் போகின்ற நேர்பலியைச் சிந்தித்துக்
குறையில்லாக் கோமகனும் குந்துமிடம்விட்டெழுந்து
ஆடை களைந்தபிற கரையிலோர் துண்டுகட்டி
நாடியந்தச்சீஷர்களின் நாறுபதந் தான்கழுவித்
துடைத்து முத்தமிட்டாரந் தூய்மைநிறை எம்பெருமான்.
தடைசொன்ன ராயப்பர் தம்மிடத்தில் பங்கிலையென்
றுரைத்து மவர்பதத்தை உத்தமரு மேகழுவித்
தரைகுனிந்து முத்தமிட்டுத் தரித்தார் தமதாடை.
நானின்று செய்ததுபோல் நாளுநீர் செய்யுங்கள்
ஈனமிதி லொன்று மில்லையென்று திருமகனார்
மேலுமுமக் குள்ளொருவன் மேவலருக் கென்னையே
சீலமாய்க் காட்டி கொடுப்பனிது திண்ணமென்றார்.
உடனே யவரெவரை உட்கருதி னாரென்று
திடமாய்த் தெரிந்துகொளத் தேடினாருஞ் சீஷர்களும்.
மார்பகத்தில் சாய்ந்திருந்த மாபிரிய சீஷரப்போ
யாரந்த சீஷனென ஆண்டவரை யெல்லோரும்
நானுநா னோவென்று நற்பரனைக் கேட்டார்கள்.
தானா யிருக்கின்ற தற்பர னப்போது
என்னோடு பாத்திரத்தில் எவன்கை யிடுகின்றான்

அன்னுன் எனைக்காட்டி ஆற்றலர்கை லொப்புவிப்பான்
ஐயோ அவனுக்குக் கேடாமென் றுரைசெய்தார்.
மெய்யன் மொழிகேட்ட மிகுவஞ்சன் யூதாசன்
நானுவென் றண்டவரை நாணமின்றி கேட்கநீ
தானே யதைச்சொன்னுய் என்றுராம் அம்பரனும்.
பன்னிருவர்க் குள்ளொருவன் பாதகனைப் வஞ்சகனைப்த்
தன்னழிவை நடுவதைத் தற்பரனுங் கண்டுமனம்
வருந்தி யதைப்பற்றி வாட்டமுடன் போசனத்தை
யருந்துகையி லடிக்கடி யாவலுடன் பேசினுர்.
எவ்விதத்திலேனும் ஈனனவ னுக்குமந்தான்
செவ்வியுற வேண்டுமென சேசுபிரா னுசித்தார்.
அன்னவரைச் சூழ்ந்திருந்த இன்னலெனு மேகந்தான்
விலகியதுபோல விளங்கிற்று மவ்வேளை.
அலகில் திருமுகந்தான் அப்போ தொளிவீச
அதன்கண் அணைகடந்த அன்பும் அருளுமவர்
வதனத்தில் தோன்ற மருஉருப மானதுபோல்
நாதன் விளங்கி நடுவிருந்த அப்பமொன்றை
மேதகவே தங்காத்தால் மெள்ள எடுத்தாராம்.
மற்றவர்க ளச்சமயம் மாதவரைப் பார்த்திருக்க
உற்றதோர் அப்பத்தை உத்தமரா சீர்வதித்துப்
பிட்டுக் கொடுத்துரைப்பார் பிரியமா யிதைவாங்கி
உட்கொண் டிடுவீர்கள் உங்களுக்கா யளிக்கின்ற
எந்தன் சரீரமாம் என்னினைவாய்ச் செய்யுங்கள்.
விந்தையிலும் விந்தையிது வேதமொழி விந்தையிது !
அன்னு ரதைவாங்கி யாரா தனைபுரிந்து
மன்னுவைப் போலருந்தி மாதவரைப் பார்த்திருந்தார்.
தண்ணீர் கலந்தரசந் தானிருந்த பாத்திரத்தை
விண்ணவர் கரமேந்தி வேண்டியா சீர்வதித்து
நீங்க ளனைவோரும் நேருமிதில் பானந்தான்
பாங்காகச் செய்திடுவீர் பாவப்பொ றுத்தலுக்காய்
பலபேருக்காகவும் பாரகத்தில் யான் சிந்தும்
நலமருவு டன்படிக்கை நல்லிரத்த மாமென்றுர்.
அந்தநல்ல சீஷர் அதைவாங்கி யுட்கொண்டார்.
சந்ததமும் நாமருந்தும் சர்வதேவ நற்கருணை
யுண்டானவிதஞ் சொன்னேன் உண்மையா யிங்ஙனமே

மண்டலத்தில் வேதகுரு மார்செய்ய அப்பம்ரசம்
சேசுபரன் மாமிசமாய் செங்குருதி யாய்மாறி
நேசநிறை நற்கருணை நேமிமிசை யாகுதம்மா !
இந்தஉயர் சத்தியத்தை இத்தரையில் நம்பாதார்
சந்தமறை சிறீஸ்துவர்க ளாகா ரிதுசத்தியம் !
பத்தியுடன் நற்கருணையைப் பாவமின்றி யுட்கொண்டோர்
சுத்த மடைந்துய்வர் சுத்தமின்றிப் பாவமுடன்
நட்பிழந்து நாதன் நல்குசா பந்தனக்கு
உட்கொண்டோர் யூதாசைப் போலவல மாயழிந்து
என்றுங் கெடுவார்கள் இத்தரையில் சத்தியமே !
நன்று யுணர்ந்திடுவீர் நம்பிக்கை யானோரே !
இதுதான் உலகத்திற் கேற்றமுதல் பலிபூசை !
இதுதான் உலகத்திற் கேற்றமுதல் புதுநன்மை !
அன்றே முதற்குருமார் அணிபட்டம் பெற்றார்கள்
என்று மிதுநடக்கு மென்றறிவீர் அம்மானை.
இப்போ துலகெங்கும் எப்போது நிறைவேறி
வருகின் றதைநாமும் வையகத்தில் பார்க்கின்றோம்.
குருவாம் பரம்பொருளின் குறையற்ற மாட்சியிது !
திவ்யதிரு நற்கருணை சீருரைக்க வும்போமோ ?
அவ்வயினே விட்டந்த அருள்நேர மென்னுற்ற
தென்றுநாம் பார்ப்போம் ஏனெனிலோ பாடுகளும்
அன்றே யருகுற்றே யாரம்பிக்கப் போகிறதே !
ஆண்டவரின் வாண்முகத்தில் மீண்டும் விசனந்தான்
வந்துகுடி கொண்டிடவே வஞ்சத் துரோகமிது
வந்ததற்குக் காரணமென் றந்தநல்ல சீஷர்களும்
தங்களுக் குள்ளாகவே தாழ்குரலில் பேசுகையில்
அங்கிருந்த அருளப்பர் ஆண்டவரே யாரென்று
கேட்கப் பெருமானும் கேண்மையுடன் நானப்பம்
யார்க்குக் கொடுப்பேனோ அவன்தா னறியென்றார்.
அப்பத்தைத் தோய்த்தார் அவணிருந்த யூதாசுக்
கப்படியே தந்தார் அவனுமனஸ் தாபமின்றி
அதையருந்த சேசு அவன்செய்ய வாலோசிப்
பதைவிரைவில் செய்கவென அக்கொடிய பாதகனும்
வெளியே புறப்பட்டு வேகமாய்ப் போயினனும்.
அளிநிறைந்த ஆண்டவரோ எளியவனுக் காயிரங்கித்

தூக்கித் திருந்தார் துயர்கண்ட சீஷர்களை
மக்களே என்றழைத்து மாபரனு மேதுசொல்வார்
இன்னுஞ் சிறிதளவே உங்களோ டிருக்கின்றேன்
என்னையே தேடுவீர் நானேகு மிடத்துக்கு
நீங்கள்வரக் கூடாதென் றேயுரைத்தார் நேசபரன்.
தாங்காமல் ராயப்பர் தானு மவர்க்காக
உயிரைக் கொடுப்பதாய் உரைக்கவே சேசுபிரான்
தயவுடனே சொல்வார் தாணியிலை நீயென்னை
மும்முறை மறுதலிக்கும் வரைசேவல் கூவாதென்
றிம்முறை மெய்யா யியம்புகின்றே னென்றுரைத்தார்.
யாவரு மாச்சரிய மடைந்தார்க ளதுகேட்டு
மேவுமோ இஃதென்று மெதுவாய் நினைத்தார்கள்.
இராயப்பர் மீண்டும் ஏகனுடன் சிறையேக
வாயெடுத்துச் சொல்ல வையகத்தில் அன்னவர்க்குப்
முன்சொன்ன மாதிரியே மும்முறை மறுதலிக்கும்
புன்செயல் தன்னைப் புரவலருஞ் சொன்னார்.
அன்றிரவு போசனத்தின் போதைய னுரைத்தவற்றில்
ஒன்றிரண்டைச் சொல்லுகிறேன் உண்மையுடன் கேட்டிடுவீர்.
ஒருவர் ஒருவரைத்தான் உண்மையுடன் நேசிக்கப்
பொருவிலாப் புதியவோர் கட்டளையைத் தருகின்றேன்
நானுமை நேசித்ததுபோல் நீங்களும் நாட்டமுடன்
தானு மொருவர் ஒருவரையே சந்ததமும்
நினைக்கக் கடவீர்கள் அப்போதென் சீஷரென
நினைக்க வழியாகும் நீணிலத்தோர் மேலு மனங்
கலங்கா திருந்திடுவீர் காரணமா யுங்களுக்கோர்
தலந்தன்னை யாயத்த நலஞ்செய்யப் போகின்றேன்
மீண்டும்வந் தும்மையான் மேவு மிடமழைத்துக்
கொண்டேகு வேன்மேலுங் கோதிலென் பிதாவையே
மன்றாடத் தேற்றுவராம் மற்றவரை உங்களுக்கு
நன்றாகத் தந்திடுவார் நானுமுங்க ளுக்கெனது
நற்சமா தானத்தை நாளும்விட்டுப் போகின்றேன்
தற்சமயம் உங்களிடந் தாங்காத் துயரிருந்த
போதிலும் மீண்டுமிவண் போந்தும்மை நான்பார்க்கும்
போதுமது சந்தோஷம் பொங்குநிலை தானடைய
அதையெடுக்க யாராலும் ஆகாதென் றுரை செய்தார்

வதை யடைய வந்துதித்த வானபரன் அம்மானை.
தமதப்போஸ் தலர்க்காகத் தயாபரனும் வானோக்கி
அமைதியாய் வேண்டியபின் அருஞ்சங்கீ தம்பாடி
எல்லோரு மாயந்த இல்லத்தை விட்டகன்று
வெளியேறிப் போகையிலே வீசுகதிர் சந்திரனும்
ஒளிதந்து நகரினமேல் உன்னதத்தி லேதவழ்ந்தான்.

## பூங்காவனத்தில் இரத்தவெயர்வை வேர்த்தது.

அப்போது சீஷருடன் ஆண்டவர்செந் ரோனென்று
செப்பும் நதியண்டை செல்கையிலே சீஷரைப்பார்த்
தின்றிரவு என்னிமித்தம் இடறற் படுவீர்கள்
என்றாலும் நானுயிர்த் தங்கருநர்கு முன்னோடி
கலிலேயா நாட்டுக்குக் கடிகப்போ வேனென்றார்.
தலைவராம் இராயப்பர் தாமிடறல் படுவதில்லை
என்றுரைக்க மீண்டும்பரன் இன்றிரவே யென்னை
மறுதலிப்பா யென்றுரைய மற்றவரும் உம்முடன்சா
வுறுதலா யிருந்தாலும் ஒருபோது மறுதலியேன்
எனமொழிய எல்லோரும் அப்படியே சொன்னார்கள்.
சனகபரன் சொன்னமொழி காசினியில் பொய்த்திடுமோ?
கெத்சமனி யென்றோர் சிங்காரத் தோப்புண்டாம்
அத்தனங்கு ஜெபஞ்செய்ய அடிக்கடி போவதுண்டு.
ஏனென்றால் அந்த இடந்தனிமைக் கேற்றவிடம்.
வானபிரான் அன்றிரவு வாகாயி ராயப்பர்
ஆகிய மூவருடன் அப்பூங்கா வனமெய்திச்
சோகமுற்றுச் சொல்வார் சகமளிக்க வந்தபிரான்
என்னாத்து மந்தான மரணமட்டுந் துக்கத்தில்
மன்னி யிருக்கிறது மாபிரிய சீஷர்களே
விழித்திருந் தென்னோடு ஜெபித்திருங்க ளென்றுரைத்து
செழித்தடர்ந்த மரத்தடிக்குச் சற்றப்பால் சென்றவரும்
முழந்தாட் படியிட்டு முகந்தானும் குப்புறவே
விழுந்து வரவிருக்கும் வேதனைகள் தாநினைந்து
அச்சமிகக் கொண்டவராய் அப்பாபிதா வேயென
றுச்சரித்தும் மாலனைத்தும் உலகியற்றக் கூடுமித்தப்
பாத்திரத்தை என்னிலிருந் தகற்றிடுவீர் ஆனாலும்
பாத்தியமென் மனதின் படியல்ல உம்முடைய

மனதின் படியாகக் கடவதென் றேஜெபித்தார்.
முனமே உலகத்தின் முக்காலப் பாவங்கள்
யாவையும் தம்மேல் தயவுடனேற் றுக்கொண்ட
மூவா முதற்பொருளாய் முத்திநெறி காட்டவந்த
சுதனுஞ் சருவேசன் சூழ்ந்தந்த நேரத்தில்
ஆதமேவை காலமுதல் அகில முடியுமட்டும்
உலகத்தில் சேர்பவங்கள் ஒன்றாய்த் திரண்டிருண்டு
விலகாமல் எதிர்நிற்க விண்ணவர்தாம் அப்பவங்கள்
செய்ததுபோல் கண்டனைகள் எய்துவதா யிருந்ததுவே.
உலகத்தை மீட்கவந்த உன்னத பராபரன்றன்
கலக்கமுறும் பாவியாய்க் கழன்றுணு நித்தனைகள்
அடியுதைகள் வேதனைகள் நெடுஞ்சிலுவை கள்ளனைப்போல்
தொங்கி யுயிர்நீத்தல் அங்கமெல்லாம் புண்ணாகிச்
செங்குருதி சிந்திச் சிரங்குனிந்து பாடுபடல
முதலியன யாவும் முதல்வ னனுபவிக்க
வேண்டி யிருந்ததுடன் ஆண்டவரின் இரத்தத்தின்
பலனை யடையாமல் பாழாக்கு மாந்தர்களின
நிலையை நினைக்கவே நேசபரன் நெட்டுயிர்த்தங்
கவதி மிகவுற்றார் ஆறுதலை நாடியுற
அவமிருந்த சீஷர்கள்தாம் தூங்குவதைக் கண்டவரைத்
தட்டி யெழுப்பித் தரணியிலே சோதனைகட்
குட்படாத வாறு விழித்திருந்து ஜெபஞ் செய்ய
ஏவியவர் முன்னிருந்த இடஞ்சென்று ஜெபஞ்செய்தார்.
மேவுமந்த நேரத்தில் மெய்யன்மனை முற்றிருந்த
வேதனையை யாரால் விரித்துரைத்தற் கூடுமந்தோ!
நாத னனுபவித்த வேதனைதான் மரணத்தின்
போதனையும் போவல்லதை போலிருந்த தானதினால்
பூத உடற்குருதி பொங்கிமயிர்க் கால்கள்வழி
வியர்வையா கத்துளித்து வெளியத் தரையைநனைத்
தயத்தின்மேல் சொட்டியதாம் அப்போது வானிருந்தோர்
சம்மனசு தோன்றித் தனையவரின் பாடுகளால்
நம்மவர்க்கு வரப்போகும் நன்மையெடுத் தோதினராம்.
தேற்றவே எம்பெருமான் தேவபிதா வின்சித்தம்
ஏற்றதற்குத் தாமடங்கி ஏகபரன் வேண்டிநின்றார்.
சோதனைகள் காலத்தில் தொந்தரைக் கஞ்சாமல்

நாதன் திருவடியை நாம்ஜெபித்தல் நன்றென்று
நமக்கெடுத்துக் காட்ட நயமாயவ் வாறுசெய்தார்.
தமக்குள்ள வேதனைகள் தாங்கொண்ணா தாகையினால்
நெடுநேரம் ஆண்டவரும் நீங்காமலே ஜெபித்தார்.

## யூதாசின் சதிமானம்.

நடுச்சாம நேரமது நாதன் ஜெபிக்கிருக்கத்
விருட்சங்கள் பின்னால் வெளிச்சந் தெரிந்ததுகாண்.
அருட்பரனு மதுகண்டார் அவ்விடத்தி னின்றெழுந்து
நித்திரையி லாழ்ந்திருந்த நேசர்தமை யேயெழுப்பி
மித்திரரே வாருமென மேனோக்கி போவமெனக்
காட்டிக் கொடுப்பவனும் காவலுடனே நெருங்கி
தோட்டத்தில் வந்திருக்கும் துயர்செய்தி சொன்னாராம்.
இவ்வாறு சீஷருடன் எம்பெருமான் பேசிநிற்க
அவ்விடத்தை நாடி அகம்பவத்தன் யூதாசும்
மூப்பர் அனுப்பிவைத்த மூடஜனக் கூட்டத்தார்
தோப்பில் தடிகளையும் சூரிகத்தி யேந்திவர
யூதாசன் தேடிவந்து உத்தமரைத் தானணுகி
ஏதுமறி யாதவன்போல் எங்குருவே வாழ்கவெனப்
பகைவர்க்கு முன்னடி பண்ணியது போலவனும்
வகையாக வான்பரனை வாழ்த்திமுத்தந் தானளித்தான்.
அப்போதில் ஆண்டவரும் அன்பனே யென்றழைத்து
இப்போதேன் வந்துற்றாய் யூதாசே மனுமகனை
முத்தமிட்டோ காட்டிக் கொடுக்கின்றாய் என்றுரைத்தார்.
அன்புநிறை எச்சரிக்கை யன்னான் நிராகரித்தான்.
துன்பம் அனுபவிக்கத் தொல்புவிக்கு வந்தபரன்
வந்தவரைப் பார்த்தாரை இந்தவிடந் தேடிவந்தீர்
என்று வினவ அவர் நசரேயன் ஏசுவையே
இன்றுதேடி வந்துற்றோம் என்றுரைத்தார் வந்தவரும்.
ஏசுபிரான் நான்தான் எனமொழிந்தார் அப்போது
நீசரவர் பின்னிடைந்து நிலத்தில் விழுந்தார்கள்.
மீண்டும் அவர்க ளெழுந் தாண்டவரை யேயணுக
யாரைநீர் தேடுகிறீர் என்றார் அணிபரனும்
நேரிருந்த மானிடரும் நசரேயன் ஏசுவையே
என்றுரைக்க வல்லவரும் முன்போலவே மொழிந்து

சீஷர்களைப் போகவிடக் கட்டளையிட் டார்பரமன்
உடனே ஒன்னலரும் உத்தமரைத் தாம்பிடித்துக்
கடுகவே கட்டுவதை கண்ட அந்த இராயப்பர்
உடைவாளை யோங்கி ஒருவனைக் காதறவே
திடமாக வெட்டினார் திவ்யபரன் கண்டித்துக்
கத்தியை உறையிலிடக் கட்டளையிட் டாண்டவரும்
நித்தியவென் தந்தை நேசமுடன் எனக்களித்த
பாத்திரத்தை நான்பானம் பண்ணா திருப்பேனோ
என்று செவியறுந்த சேவகனைத் தொட்டமலன்
நன்றுகுணந் தந்தார் நல்லகுரு தேசிகரும்.
பின்னரந்த சீஷரெல்லாம் அன்னவரை விட்டோடிப்
போனார்கள் ஆனாலும் போனவரில் இராயப்பர்
யாகப்பர் என்போர் அதிகவெட்கங் கொண்டவராய்
ஏகனிடம் வந்தவரைப் பின்பற்றி யேகினராம்.

## பாடுகளின் ஆரம்பம்.

ஆண்டவரைக் கட்டி யலங்கோலமாய் ஜனங்கள்
ஆண்டிருந்த கைப்பாசின் மாதுலனா மன்னாசன்
மாளிகைக்குக் கொண்டுபோய் மாபரனை நிறுத்தினராம்.
கூளி நிறைமனிதன் கொடும்பாதகன் அன்னாஸ்
மாசற்ற மாபரனை மண்ணிற் டைைத்தவர்க்குள்
மாசுற்ற பாவியவன் வல்லவரைப் பற்றியுடன்
தன்னிடங் கொண்டுவரக் கட்டளையுந் தந்திருந்தான்.
அன்ன காரணத்தாலே ஐயனுமங் குற்றதுவே.
சங்கத்தார் கூடியங்கு சற்றுமதி யில்லாமல்
துங்கனை விசாரிக்கத் துன்னியவண் காத்திருந்தார்.
அன்னாசன் ஆண்டவரின் அரும்போதகஞ்சீஷர்
இன்னவைகளைப்பற்றி ஏகனிடங் குறைகாணப்
பலவாறு கேட்டான பரஞ்சேசு நாதரவன்
நிலைமை யறிந்தவராய் நேரியதம் போதகத்தைக்
கேட்டவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள லாமென்று
நாட்டமுடன் சொல்லிடவே நாயகர் மொழிந்தபதில்
சங்கைகுறை வானதென்று பங்கம் விளைக்கவெண்ணி
இவ்விதமோ எங்குருவுக் கினைபதில் சொல்வதென்று
அவ்விடத்தில் நின்ற அகம்பாவம் கொண்டொருவன்

ஆண்டவரைக் கன்னத்தில் அறைந்திட்டான் அம்மானை.
மீண்டுமெனை யடித்தாய் செய்ததப்பை ருசுவாக்கு
தப்பிதமில்லை யென்றால் தாவியடிப்பானேன்
என்றுரைத்த பின்னர் ஏகனைக் கைப்பாசனது
மன்றல் அரண்மனைக்கு மாதவரை யழைத்தேக
அங்கே விசாரணையும் ஆரம்பமானதுகாண்.
தங்கும் நடுவரெல்லாம் தற்பரனைக் கொல்லவென்று
முன்னடியாகவே முற்றுமன தெண்ணியதால்
அன்னீதியங்கிருக்கும் ஈனரவை தன்னிடத்தே.
மாசில்லா வாழ்க்கை மருவியவர் மேற்குற்றம்
காசினியிற் சாட்டுதற்குக் காதகர்க்குச் சாட்சியங்கள்
வேண்டுமெனத் தேடினர் வெளிநீதி போக்காட்ட
வேண்டு பெருமுளத்தர் வீணராம நீதர்களும்.
கொண்டுவந்த சாட்சிகளின் பொய்யுரையைக் கோதிலரும்
கண்டு மவுனமதாய்க் கேட்டிருந்தார் கைப்பாசன்
என்னபதில் சொல்லாம லிருக்கின்றாய் என்றுரைக்க
யேசுபிரான் பதிலுரையுஞ் செய்யாமலே யிருந்தார்.
மாசு படிந்தகுரு மாதவரைப் பார்த்துரைப்பான்
தேவசுதனாகுங் கிறீஸ்தென்பார் நீதானோ
மேவி யெனக்குரைப்பாய் தேவனின் நாமத்தால்
எனநாதன் அதைநீரே இயம்புகின்றீர் மேலுமினி
மனுமகனார் வல்லவராம் சர்வேசன் வலதுபுரம்.
வீற்றிருந்து மேகங்கள் மேல்வருதல் காண்பீர்கள்
சாற்றுகிறேன் என்றவுடன் சங்கைசினங் கொண்டவன்போல்
ஆடை கிழித்துக்கொண் டவ்வேளை தூஷணத்தை
பேடையிலே சொன்னதாய் மேவுமிடிபோல் கூவி,
உங்களுக்குத் தோன்றுவ தென்னவென்றுங் கேட்டானும்,
அங்கிருந்த பாந்தர்களோ ஆவேசங் கொண்டவர்போல்
சாவுக்குரிய னென்று சத்தமிட்டப் பாதகரும்
கூவிக் குலைத்தார்கள் குக்கலைப்போ லச்சபையில்,
பின்னை நிகழ்ந்த பேசரிய அலங்கோலந்
தன்னுங் காட்சியினைச் சொல்வதரி தம்மம்ம!
ஆண்டவரை நிந்தித் தவமானஞ் செய்வதிலே
பூண்டார் முதலிடத்தைப் பொய்குருக்க ளென்போரே.
உத்தமரை எல்லோரும் தத்த மனதின்படி

பரிகாசஞ் செய்தார் தெரியாமல் கண்கட்டி
முதுகி லறைந்தார்கள் முகத்தின்மேல் துப்பினாராம்.
முதுகி லறைந்தவன்யார் முற்றுமறிந் துரையென்று
நிந்தையவமானம் பல நேசபா லுக்கிழைத்து
எந்தையரைத் தூஷித்துக் கொண்டிருக்க முற்றத்தில்
கூடி யிருந்தஜனக்கூட்டத்தில் சேர்ந்ததையான்
பாடி யுரைக்கின்றேன் பாவையரே கேளுங்கள்.
அனல்மூட்டிக் குளிர்காய்ந்த ஜனங்களிடை இராயப்பர்
வந்ததையுங் கண்டவொரு வாசல்காக்கும் பெண்பிள்ளை
அந்தகலி லேயனுடன் நீயிருந்தா யென்றாளாம்.
உடனே இராயப்பர் நானறியேன் என்றுரைத்தார்.
விடையாகு மற்றொருத்தி வேணுமென்றே இம்மனிதன்
நசரேயன் சேசுவுடன் இருந்தாய் நவின்றிடவே
விசுவாசி ராயப்பர் மெல்லியருஞ் சொன்ன அந்த
மனிதனையா னறியேனென் றாணையிட்டு மறுதலித்தார்
புனிதபரன் சொன்னமொழி பொய்க்காமல் அப்போது
சேவலொன்று கொக்கரித்துக் கூவிற்றாம் அம்மானை.
ஆவல்கொண்ட சீஷர் அகம்பயந்து நின்றாரே.
இதற்குள் அனைவருக்கும் இவர்செய்தி தான்தெரிய
எதற்குமே அஞ்சா இழிஜனங்கள் சீஷரிடம்
வந்துநின் றுநன்றில் நீயும் ஒருவனென
உந்தன் உரைபேச்சு உள்ளபடி காட்டுதென்றார்.
அஞ்சி நடுங்கினார் அதுகேட்ட ராயப்பர்
மிஞ்சிவிடும் போல்பயந்து மேலவரை மும்முறையும்
மறுதலித்தா ரப்போதும் மறுசேவல் கூவிற்று.
அந்தச் சமயத்தில் ஆண்டவரும் அப்பக்கம்
நிந்தையவமானமா நேர்நடந்து போகையிலே
எச்சரித்துத் தப்பிழைத்த இச்சையுள்ள சீஷன் முகம்
பார்த்தாரென் றாலும் பரமன்சினங் கொள்ளவில்லை
வார்த்தை மறந்ததற்கு வருந்தினார் வல்லபரன்.
சேவல் இருதடவை கூவுமுன் மும்முறையும்
என்னை மறுதலிப்பாய் என்றமொழி தன்னையப்போ
துன்னியி ராயப்பர் உளமுறுகி நைந்தழுது
வெளியே புறப்பட்டு தளர்வெய்திப் போயினராம்.

## விசாரணையின் முடிவு.

மரணத்தீர்ப் பிடவந்த மாந்தர்க்கதி காரமில்லை.
ஆரணமின்றி ரோமை யதிகாரி யைக்கொண்டு
தீர்ப்படைய வேண்டுமெனத் தீயர்களும் யோசித்தார்.
கீர்த்தியுற்ற ரோமை யதிகாரி பேர்பிலாத்து.
தேவதூஷண மென்னுங் குற்றத்தை யல்லவவன்
மேவுசீர் இராயனுக்கு விரோத னாய்த் தானடந்தால்
பதவியிழப் போமென்னும் பயமூண் டவனுக்கென்
றிதமாய்க் குருக்களறிந் திதைக்கொண்டு தம்விருப்பை
நிறைவேற்றிக் கொள்வதென நீணிலத்தீர் மாணித்தார்.
குறையில்லா சேசுபிரான் கொலைக்காளா யுற்றசெய்தி
நகர்முழுதும் போய்ப்பரவ மிகவியப்புக் கொண்டனராம்
சிலர்குருக்கள் சொல்கேட்டு செய்ததுவே சரியென்றார்.
பலர்தமக்குத் தோன்றியதைப் பண்ணி யிருந்தார்கள்
நசரேசு நாயகரை நண்ணார் பிலாத்தனிடம்
வசமா யழைத்தேகும் வன்செய்தி கேள்வியுற்ற
பாதகனும் யூதாஸ் பதறிமனஞ் சோர்வடைந்து
காதகத்துக் காக கடுங்குத்தற் காளாகி
குற்றமொன்று மில்லாத கோதிலரை மாற்றலர்க்கு
விற்றபணங் கொண்டு விரைந்தேகி குருக்களிடம்
குற்றமில்லாக் குருதியினைக் காட்டிக் கொடுத்துபவம்
உற்றேனெனச்சொல்லிப் பெற்றபணத் தைத்திருப்பி
யளிக்கவரப் பகைவர் அதைவாங்க மறுத்தார்கள்.
துளக்கமுடன் யூதாஸ் தூயபரன் தாள்பணிந்து
தப்பிதங்கள் செய்தேன் தாணியெனை மன்னியுமென்
றொப்பிலனை நோக்கி உரிய மனஸ்தாபமுடன்
கேட்டிருப் பானாகில் கிறீஸ்தேசு நாதனருள்
நீட்டி யிரட்சண்யம் எய்தியிருப் பான்திண்ணம்.
ஆனாலப் பாவியோ அவ்வாறு செய்யாமல்
தானாசை யாய்க்கொண்ட தனிப்பணத்தை ஆலயத்தில்
விட்டெறிந்து வேதனையே காட்டிக் கொடுத்தபொழில்
கிட்டி ஒருமரத்தில் நான்றுகொண்டு செத்தானும்.
என்னே அவன்மரணம் ஏகபரன் தன்னருளை
உன்னாதியற்றபவம் உற்றபலன் கண்டீரோ?

நன்றியில்லா சீஷன்றன் நாயகரை விற்றதனால்
கன்றிமனஸ் தாபமின்றிக் காதகனுஞ் செத்தொழிந்தான்.
இந்தவொரு சம்பவத்தால் சந்ததமும் நாமறியும்
பாடத்தை நன்குணர்ந்து பாவத்தை விட்டகன்று
தேடியவர் பாதமிசை தேறுதல்காண் போமாக.

## பிலாத்து செய்த தீர்ப்பு.

ஜனங்கள் பெருந்திரளாய் சங்கையின்றி வீதிகளில்
சினந்தலறிக் கூச்சலிட்டு சேசுவினை யீர்த்துகொண்டு
வருவதைக் கண்டான் வல்லபோஞ்சு பிலாத்தென்பான்.
கருத்தை யறிந்ததினால் காவலனுஞ் சிந்தித்தான்.
யூதர் தமைவெறுத்தா னுதரையில் என்றாலும்
நமதரிய ஆண்டவர்மேல் நானுமவற் கொன்றுமில்லை.
இமையவரைப் பற்றி எழில்மனைவி நல்விதமாய்ச்
சொலக்கேட் டிருந்தான் சரிகுழலு மாண்டவரின்
பலநவங்கள் கேட்டுப் பரனிடத்தில் பக்திகொண்டு
ஜெத்சமெனித் தோட்டத்தில் செந்நீர் வியர்க்கையிலே
உத்தமரைப் பற்றி உறங்குகையில் சொப்பனங்கண்
டுளம்வருந்த முற்றாள் அரிவிழைப் பாவைநல்லாள்.
ஆண்டவருக் கேதேனும் ஆனிவிளைப் பாரென்று
ஆண்டஞ்சி யந்நங்கை யார்வமுள்ள காதலனை
எச்சரிக்க வேண்டுமென எண்ணி யிருந்தாளாம்.
சச்சரவை நாடிவரும் சங்கையில்லா மாந்தர்தமை
ஜன்னல் வழியாக இன்னலுடன் பார்த்திருந்தான்.
அதிகாரி யவ்வழக்கை யங்குவிசா ரணைசெய்ய
சதியோசனை செய்யும் சங்கையிலாக் குருக்களையும்
தன்னெதிரில் வாச்சொல்லி அன்னவனுங் கேட்பானும்
இந்த மனிதன்மேல் என்குற்றங் கொண்டுவந்தீர்?
அந்த மொழிகேட்ட ஆ[illegible]கொள் குருக்களுந்தாம்
இவன்குற்ற வாளியன்றே லிவனையுமக் களிப்போமோ
என்றிறுமாப் போடுபதில் ஈனர்களும் சொன்னார்கள்.
அன்றியுமப் பாதகர்கள் ஆவேசங் கொண்டவராய்
மாந்தர்களை யிம்மனிதன் மயக்கிக் கலக்குகிறான்
வேந்தர் வரிசெலுத்த வேண்டா மெனவிலக்கித்
தானே கிறீஸ்துவெனும் தார்வேந்தன் என்கின்றான்

மானமிலா இவ்வுரையை மானிலத்தில் கண்டோமெனச்
சத்தமாய்ப் பேசி சாட்டினார் குற்றங்கள்.
சீசரெனும் வேந்தன்மேல் சிற்றமுள்ள அம்மனிதர்
நேசமாய்ப் பேசியது நிசமல்ல வென்றறிந்தான்.
எண்ணம் நிறைவேற ஈனர்கொண்ட சூழ்ச்சியென
அண்ணலவனிருந்தும் அரையனுக்குத் தான்பயந்து
சேசுவினைத் தன்னெதிரில் சேர்க்க வெனச்சொல்ல
மாசில்லா மாபரனும் வந்தவன்முன் னேநிற்க,
போஞ்சு பிலாத்தென்பான் புண்ணியரைத் தான்பார்த்து
வாஞ்சையுடன் கேட்பான் வல்லவரை நீயரசோ
என்று வினவ அவர் இராஜா வெனநீரே
இன்று புகல்கின்றீர் இத்தரையில் சத்தியத்துக்
குற்றதொரு சாட்சி சொல உற்பவித்து வருவந்தேன்
பற்றில்லா வென்னரசு பாருக் கடுத்ததல்ல
எனமொழிந்தா ரிப்புவியை மீட்கவந்த எம்பெருமான்
கனதுயரந் தாங்கிநின்ற கர்த்தனெனு மெம்பெருமான்.
அன்னவரால் ராச்சியத்துக் கின்னலொன்றும் நேராதென்
றதிகாரி தானறிந்தான் ஆண்டவரைக் கூட்டிவந்து
மதிகெட்ட மானிடர்முன் மாபரனையே நிறுத்தி
நானிவன்கண் குற்றமொன்றும் காணவில்லை யென்றுரைத்தான்.
அதுகண்ட ஆசாரியர் அறைந்தார் பலகுற்றம்
மதுவுண்ட மாந்தரைப்போல் ஆர்ப்பரித்துக் கூவினராம்.
ஆண்டவரும் என்னபதில் அளிக்கின்றார் என்றவனும்
மீண்டுமொன்றும் சொல்லாமல் மேவியவன் பார்த்திருந்தான்.
ஐயன் பதிலொன்றும் அளிக்கவில்லை மௌனத்தின்
மெய்யம் பொருளையவன் மேதினியி லோராமல்
உற்றவரைப் பார்த்தான் உலகத்தி லத்தகைய
குற்றமில்லா மாந்தர் குவலயத்தில் கண்டறியான்,
ஆச்சரியங் கொண்டான் அவனிடத்தில் குற்றமொன்றும்
பேச்சிலுங் காணேனெனப் பேசினன் அதிகாரி.
அப்போதா சாரியர்கள் தப்பிதத்தைச் சொல்லியிவன்
கலிலேயா நாடுமுதல் பலவாறு மானிடரைக்
கலக்கி யிருக்கின்றான் கண்டீரோ என்றுரைத்து
அலக்கணுற்ற மாந்தர்போல் ஆடிப் பதறிமிகு
கோபாவே சத்துடனே கூக்குரலிட் டார்ப்பரித்தார்

மாபாவ மெற்ற மதியில்லாக் காதகரும்.
கோதிலார் வேதனெனக் குவலயத்தில் கண்டறிந்தும்
போதகர்மேற் குற்றமிலை பூவுலகில் என்றறிந்தும்
திடபுத்தி யில்லாமல் தேர்வேந்தற் கஞ்சியவன்
இடம்போகு மென்றெண்ணி கலிலேயர் என்றதினால்
தன்பழியுந் தீர்ந்ததென மன்பொறுப்பை விட்டொழித்து
திருநாட்கு வந்திருந்த ஏரோத னிடமவரை
யனுப்பிப்பழி தீர்ந்ததென அதிகாரி நினைத்திருந்தான்
மனக்கவலை நீங்கினன் மனக்கோழை பிலாத்தனுமே.
யூதர்க் கரசனா யுற்ற ஏரோத னுந்தான்
நாதனையுங் காணவொரு நற்சமயம் வாய்த்ததற்காய்
சந்தோஷப் பட்டான் தரைதலத்தில் பற்புதமை
விந்தையாய்ச் செய்யுமுயர் மனிதர் தமைக்காண
ஆசைமிகக் கொண்டிருந்தா னாதலினால் ஆண்டவரை
நேசமரி யாதையுடன் நீளவையில் வரவேற்று
வழக்கையக் கரையாக மன்னிவிசா ரிப்பான்போல்
சழக்குறையுந் தூர்த்தன் சபையில் நடித்தானும்.
நரியென்று நாதனழை அரையனுடன் பேசுதற்கு
மனமின்றி மௌனமதாய் மாபரனிற் பதுகண்டு
இனமோ டவரையவன் செய்தான் பரிகாசம்.
பித்தனென நாதனுக்குப் பீத்தலங்கி மாட்டிப்பி
லாத்தனிட மனுப்பித் தீர்த்தான்தன் வஞ்சத்தை.
அப்போ ஜனங்களெல்லாம் ஆசையுட னேசித்த
தப்பாத நாயகனைத் தாரணியில் கேலிசெய்து
பரிகசித்துப் பேசிப் பலதுயரை விளைத்தார்கள்.
ஆண்டவரை மீண்டும் அழைத்துவாக் கேட்டகிபன்
ஆண்டமெனக் கோழையனா யச்சமயம் என்னசெய்வ
தென்று தெரிந்திருந்தும் ஏற்றதனைச் செயவஞ்சி
அன்றங் கவன்செய்த அருஞ்சூழ்ச்சி பாருங்கள்.
திருநாளின் போது சிறைவாசம் செய்கைதி
ஒருவன் றனைவிடுதல் செய்வழக்க முண்டதனால்
கொலைப்பா தகனான குற்றமுள்ள பரபாசை
விலைமதிப்புக் கடங்காத விமலனொடு நிற்கவைத்து
யாரை விடுதலென்று கேட்பதென நிச்சயித்தான்.
பாரைப் புரக்கவந்த பார்த்திபனெம் பெருமானும்

மீண்டும்வர் தங்குறிந்த மேலவரைக் கள்வனுடன்
ஆண்டு விறுத்தி யவர்களிலே யாரையப்போ
விடுதலைச் செய்வதென வேவிபவன் கேட்டானும்.
இடையி லவன்மனைவி நடுவிலோர் ஆளனுப்பி
எச்சரித்தாள் அச்சமயம் அச்சமுட னவ்விடன்
போசித்துக் கொண்டிருக்க யூதகுருக் கள்புகுந்து
நீச ஜனங்களை நேரிடவே தூண்டினராம்.
மீண்டும் அதிகாரி மேற்சொன்ன படிகேட்க
ஆண்டவரை நீக்கி பராபாசை அக்கணமே
விட்டுவிட வேண்டுமென வெகுண்டுஜனங் கூவிற்று.
வெறுப்புக் கிகிலுமுற்று பொறுப்பில்லா அதிகாரி
யூதர்களின் ராஜாவை யாதுசெய்வ தென்கநன்றி
யில்லாத மாந்தர்களும் ஏகமன தாயவனைக்
கொல்லவேண்டு மென்றுரைத்து கூக்குரலிட் டார்ப்பரித்தார்.
சிலுவையி லறையுமெனச் சேர்ந்தொருங்கே கூவினராம்.
பலகாலும் யோசித்த பாதிபன் அப்போது
தீங்கென் இவன்செய்தான் தீபதொன் றுங் காணேனே
சங்கிவனைத் தண்டித்து விட்டுவிடு வேனென்றான்.
அதுகேட்டு ஜனக்கூட்டம் ஆவேசங் கொண்டவரை
மதிகெட்டு சிலுவையினி லறைபுமென் றாளையிட
அதுகண்ட பிலாத்தன் யள்ளிஜலத்தாற் கரத்தை
மெதுவாகத் தான்கழுவி மேவுமிந்த நீதிமான்
இரத்தத்தின் மட்டில்யான் ஏதுகுற்ற மில்லனுய்
இருக்கின்றேன் நீங்களே இதைப்பார்த்துக் கொள்ளுங்கள்
என்றுரைக்க அம்மாந்தர் எம்மேலும் எம்முட்னே
பின்றமக்கள் மேலும் நேரிரத்தம் வீழ்கவென
பயங்கரமாய்க் கூவினராம் பாழான யூதர்களும்.
இயங்குவது மிவ்வாறு இத்தரையில் கண்டீரோ!
காரத்தைக் கழுவினதால் கண்ட பலனென்ன
இரத்தத்தைச் சிந்துபலன் இல்லாமற் போபிடுமோ?
மூடனதிகாரி முழுமூடன் பெருங்கோழை
நாடியக நீதியுடன் நடக்காமற் றன்பழியைக்
கழித்துவிட முயன்றென்ன காசினியி லேபெற்றான்
பழியினுக் காகியவன் பாதகத்தை தான்புரிந்து
மாசற்ற மாபரன்மேல் மரணத்தீர்ப் பிட்டபழி

பாசத்தால் கட்டுண்ட பாதகத்துக் காளானான்.
ஜனங்கள்செய் யாநின்ற சந்தடியும் ஆர்ப்பரிப்பும்
கன உக்கிரமாக கர்த்தனது இரத்தத்தை
குடிக்கவரும் ஓனாய்போல் கூவிக் குலைத்தார்கள்.
பிடிக்கடங்கா மாந்தர்தமை பிலாத்தன் கணிக்கவென
ஆண்டவரைச் சாட்டைகளால் அடிக்கக்கட்டளையிட்டான்.
வேண்டார் அவரையொரு கற்றூணில் சேர்த்திறுக்கிக்
கட்டிக் கசைகளால் கன்ற வடித்தார்கள்
மட்டித் தனமான மாந்தரந்த யூதர்களும்.
ஐயன் அடிபட்டு மெய்யெல்லாம் கன்றிமிகக்
களைத்துத் தவித்தங்குக் கர்த்தன் தரைவீழ்ந்தார்
விளைத்த பவத்துக்காய் வேதபரன் அம்மானை.
அரசராய்த் தாமிருக்க ஆசித்தா ரென்றவர்க்கு
சிரசில்முண் முடிவைத்து செந்துகிலைத் தானுரிந்து
செம்போர்வை யொன்றைத்தோள் சேர்த்தார்கள் சேவகரும்
அம்பரமன் கையிலொரு கொம்பொன்றைத் தந்தார்கள்.
யூதர்களின் ராஜாவே வாழ்கவென் றுரைத்தவர்முன்
பாததண்ட னிட்டுப் பரிகாசஞ் செய்தார்கள்.
தடியால் தலையின்மேல் தயவின்றி யடித்தார்முன்
முடிபதிந் திரத்தம் முகமெல்லாம் ஓடிற்று.
மூவுலகை யாளும் முதல்வனுந் தேவபரன்
பாவத்தை மேற்சுமந்து பாதகனைப் போலங்கு
நிந்தையவ மானமிடை நிற்கின்றார் ஐயையோ!
பந்தபாவத் தால்வந்த பரிதாபக் காட்சியிது!
மெய்யனது நிர்ப்பாக்கிய வேஷத்தைக் கண்டெவரோ
இரங்கா திருப்பரென எண்ணி யதிபதியும்
வரங்கொடுக்க வந்தவொரு வல்லபனைக் கொண்டுவந்து
எல்லோர்க்கு முன்னால் இறையவரைத் தானிறுத்தி
அல்லல் நிறைபரனை அதிகாரி காட்டியிதோ
மனிதன் இவனிடத்தில் மாசொன்று மில்லையெனப்
புனிதபரன் நம்மைப் புரவலனை யம்மனிதர்
சிலுவையி லறையுமவன் தேவசுத னென்றுதன்னை
பனுக்கிவந் திருக்கின்றான் பாரிலெனக் கூவினராம்.
தேவசுதன் என்றதுமே திடுக்கிட்டான் அதிபதியும்
தேவசுத னாயிருந்தால் தீங்கென்ன நேரிடுமோ

ஒன்று பயந்தான் அதிகாரி என்பானும்.
மன்றில் மனத்திடனில் லாததொரு மானிடனே!
இருவருந் தனியா யிருக்குமந்த வேளையிலே
திருவுருவாஞ் சேசுவினை எங்கிருந்து நீவந்தாய்
எனவினவ ஏகனொன் றுஞ் சொல்லா திருந்தல்கண்டு
மனத்தாங்க லுற்று மாபரனைப் பார்த்துரைப்பான்
என்னிடத்தில் பேசாயோ உன்னைச் சிலுவைதனில்
அறையவும் விடுதலை யாக்கவு மதிகாரம்
நிறைவா யெனக்குண்டு நீயுமறி யாயோவென்
றியம்ப நம தாண்டவரும் இட்டமுடன் உத்தரமாய்
அடப்புவைக் காட்டுதல்போல் மேலாவி லிருந்துமக்குக்
கொடுக்கப் படாவிட்டால் கூறுமெண்மேல் உந்தனுக்கோர்
தொடுக்கவதி காரமொன் றுந் தொல்லுலகி லிராதென்றார்.
பத்துப் பதினோராம் மணிக்கிடையில் உளநேரம்
சித்தம் உறுதியற்ற தேசாதி பதியவரை
மீண்டும் ஜனங்களின்முன் மெய்யன் றனைநிறுத்த
வேண்டாத ஜனக்கூட்டம் விடுதலைநீர் செய்தீரேல்
இராயனுக்கு நண்பரல்ல என்றுரைக்க அப்போது
இராயனென்ற சொல்கேட்ட சனமதி கேடனுந்தான்
இதோ உங்கள் ராஜனென அதோகதியாய்ப் போகுமந்த
மூடஜனக் கூட்டம் முனிந்தவனைக் கொன்றுவிடும்
நாடாளும் சீசரன்றி வேறெவரும் எங்களுக்கு
வேந்தரில்லை யென்று வெகுண்டுரைத்து கூவினராம்
ஏந்தனிலை யறியாத சனமந்த மாந்தருந்தான்.
சீசர்கிறீஸ் தேசு நாதரெனும் இருவர்க்குள்
மீசுரம் யாரென்று பேசி யவன்தெரிந்து
கொள்ளவேண்டியவனுக் குவலயத்தப் போதிருந்தான்.
உள்ளத்தில் அச்சமுடன் உற்றகொலைப் பாதகனை
விடுதலை யாக்கிவிமலனை யன்னூர்கையில்
விடுவளித்திடான் நாயகரை யம்மானே.
தீர்ப்பைச் செவியேற்றுத் தீயர்மனம் பூரித்து
ஆர்ப்பரித்து கூவி யதிக ஜெயங்கொண் டவர்போல்
சந்தோஷங் கொண்டாடித் தாமதித்தால் காரியமும்
சிந்திவிடும் என்றஞ்சிச் சீக்கிரத்தில் சித்தமாய்ச்
செய்தங்கு வைத்திருந்த சிலுவைதனைக் கொண்டுவந்து

உய்வழியைக் காட்டவந்த உத்தமருக்கே கொடுத்தார்.
நசரேயனுஞ் சேசு யூதர்களின் ராஜனென
வசைபோல் வரைந்திருந்த பட்டயத்தைக் கொண்டுவந்தார்.
கலங்கியழு மானிடரைக் காக்கவந்த தேவபரன்
அலங்கோல ஊர்வலமும் ஆரம்ப மாயிற்றே.

## சிலுவை சுமந்து போதல்.

ஊர்வலமும் வேகமதாய் ஊர்நடுவில் போகிறதே.
போர்வீரர் சூழ்ந்துவரப் போகின்றார் எம்பெருமான்.
கள்ளனைப்போலக் கசையடிகள் பட்டுமிகத்
தள்ளாடி யேநடந்து கற்பரனும் போகின்றார்.
பாவப் பழியழிக்கப் பாவியைப்போல் போகின்றார்.
ஏவைப் பழிதீர்க்க ஏகனுந்தான் போகின்றார்.
கொலைக்களத்தில் யாவுங் குறையின்றி நடந்தேற
கலகம்ஒன்றும் நேராமல் காக்கும்பொருட்டொருவன்
செந்தூரியனெனும் சேவகரின் போர்த்தலைவன்
குதிரைமே லேறி அதிவிரைவாய் முன்னிடத்தில்
செல்ல அவன்பின்னே சேசுபர னார்சிலுவை
நல்லறிக்கை பத்திரமாம் பட்டயத்தை நாட்டமுடன்
தாங்கி யொருவன் தாட்டிகமாய்ப் போகின்றான்.
ஆங்கவன்பின் சிலுவை யறையுண்டு சாவதற்கு
கள்ளரிருவ ரங்குக் கஷ்டமுடன் போகின்றார்.
மெள்ள நடந்து மெலிந்து மிகத்தளர்ந்து
பாரச் சிலுவையினைப் பற்றி யிழுத்தபடி
பாரத்தைத் தாங்கமுடி யாமல் பரிதவித்து
பன்னரிய பாடுகளைப் பட்டு வருத்தமுடன்
மன்னவர்தம் மன்னர் மகத்தான தேவசுதன்
கள்ளனைப் போலங்குங் காவலர்கள் சூழ்ந்துவர
தள்ளாடி யேநடந்து தயாபரனும் வருகின்றார்.
ஆறுதினங் கட்குமுனர் ஆசையுடன் ஓசன்னா
கூறித் துதித்துக் குதித்தசிறு பிள்ளைகளே
சிரித்து விளையாடி சேசுவின்முன் ஓடுகின்றார்.
திரளான ஜனக்கூட்டம் தெருவெல்லாம் நிறைந்துவர
அருகிருந்த மாந்தர் அவர்மீது மண்வாரி
இறைத்தார்கள் கல்லால் எறிந்தார்கள் கேலிசெய்து

பேசிப் பரிகசித்துப் பேரிரைச்சல் போட்டுவர
ஊர்கோலம் வேகமாய் ஊர்நடுவில் போகிறது.
பார்கோலம் இதைப்போலப் பார்த்ததுண்டோ மாண்டரே
ஆயிரத்துத் தொள்ளாயிரம்வருஷத் தின்முன்பு
பேயவெள்ளி வாரமதில் பின்னகராம் ஜெருசலையில்
காலை தனிலிருந்த காட்சியினை என்னென்போம்!
அலங்கோலக் காட்சியது அச்சம் நிறைகாட்சி!
நலங்காக்க வந்தபிரான் தாழ்வடைந்த காட்சியது!
நீச்குநிலை கொள்ளா நீசஜனக் கூட்டம்
வாக்குக் கடங்காத வல்லபரன் பாடுகளைக்
காண ஜனங்களெல்லாம் கும்பியே போகின்றார்
நாணமின்றி நாயகரின் நல்லருளைப் பெற்றவரே.
பூவுலகை மீட்கவந்த புண்ணிய பராபரனை
நாவா லுறையொண்ணாப் பாவமொழி கூறியவை
வாயினிலே வந்தபடி வல்லவரை தூஷித்துத்
தூயவரைத் தான்பழித்துத் துன்னியவண் போகின்றார்.
வீதியிலும் வீடுகளின் வாயிலிலும் மாடியிலும்
ஆதிபரன் கோலமதை ஆசையுடன் காணவென்று
ஆடவரும் பெண்டிரும் அணியணியாய் நின்றுகொண்டு
நாடியெங்கு மேயிருக்க நகரெல்லாம் அல்லோல
கல்லோல மாகக்கணகனர் தோன்றியது
வல்லவரை நிந்தித்த வண்ணநகர் அப்போது.
எம்பெருமான் பாடுகளை முற்றுவிக்கும் சீர்தலமாம்
அம்பெரிய கல்வாரி நாக மதற்சேரும்
பாதை வெகுகடினம் பாரகத்தை மீட்கவந்த
ஆதிசுதனின் சிலுவை ஆகமதில் தாங்கமுடி
ஆபத்சுன பாரத்தால் ஆண்டவரும் தள்ளாடிப்
பூவினிலே வீழ்ந்தார் பரவலனும் அவ்விடத்தே
ஆவிதுறந் தாலென்ன செய்வதென அஞ்சியந்தப்
பாதகரும் சிரேனை யூரானைப் பக்கல்வரும்
நீதனெனும் சீமோனை நின்பவர்க்குத் துணையாகச்
சிலுவை தனைசுமக்கச் சேர்த்துவிட்டாரப் பானே.
சொல்லொருபப் பாக்கியத்தைத் துன்னியதும் விந்தையன்றோ?
இவ்வாறு போகையிலே ஏசனைப் பார்க்கும்பொருட்டு
அவ்வீதி கோடியிலே ஆண்டவரைக் காணுதற்கு

சிலர்நின்று கொண்டிருந்தார் சீர்மருவுந் தாயாரும்
நலங்கொள் மதலேனள் நாதன் விழைசீஷர்
மற்றுஞ் சிலமாதர் மாதுயரோ டங்குநின்றார்.
பெற்றதா யின்வதனம் பேசரிய துக்கத்தால்
நிறைந்திருக்க வப்போது நேசமக னங்கமெலாம்
கறைபொழுகக் காய நிறைந்தவராய்த் தள்ளாடி
நடக்க முடியாமல் நாயகருந் தான்வருதல்
அடக்கவொண்ணுத் துக்கமுடன் ஆரணங்கு கண்டாளே.
ஆண்டவருந் தாயாரை யார்வமுடன் நோக்கினராம்.
ஆண்டவனுக் கோர்மொழியு மையன் உரைக்கவில்லை.
பாடுகளைக் கண்டிறுதிப் பாவை சகித்திருக்க
நீடுபலந் தந்தருள நேர்சித்தங் கொண்டாரே.
ஆனுலும் தாய்வதனம் அச்சமயம் கண்டுபரன்
மோனமா யுள்ளத்தில் முற்றவதி யுற்றுரே.
சற்றப்பால் பட்டணத்துச் சங்கைநிறை மாதர்பலர்
நற்றவரின் பாடுகளைக் கண்டிரங்கி நாளுமவண்
அழுது பிரலாபித் தண்டிவந்த போதுரைப்பார்
பழுதில்லா நாயகரும் பாவையரைப் பார்த்துரைப்பார்:
எருசலேம் புத்திரிகாள் எனக்கா யழவேண்டாம்
மருவுமுங்க ளுக்குமுங்கள் மக்களுக்கு மேயழவும்
என்று தயாபரனும் இச்சையுட னெச்சரித்தார்
மன்றில் நலம்புரிந்த மாதவ ரெம்பெருமானும்.
பாடுகளின் பாதையே பரிதாபக் கோலமாய்
நீடுபரன் தானடந்து நிஷ்டூரர் தாம்குறித்த
கல்வாரி யென்னுங் கனகமலை சேர்ந்தனரே
கொல்வாரைப் பார்த்திரங்குங் குற்றமில்லா தேவபரன்.

## சிலுவையில் அறைதல்

அலங்கோல ஊர்வலமும் அந்தமலை யுச்சியெனும்
தலஞ்சேர்ந்த போது தரையிற்பன்னி ரண்டுமணி
இருக்குமந்த நேரத்தில் எம்பெருமான் சோர்ந்திருக்க
குருக்களுந்தான் கண்டு குருநாதர் சாகுமொரு
தருணமென எண்ணிக் கருணையில்லாக் காதகரும்
சீக்கிரத்தில் காரியமு மாகட்டு மில்லையெனில்
நீக்கமற நாம்செய்த நேர்முயற்சி யாவுமினி

வீணுகப் போகுமெனக் கோணுளத்தர் சேவகரைத்
தூண்டித் துரிதப் படுத்தினராம் துன்பநிறை
யாண்டவரைக் கொல்ல அவசரமுஞ் செய்தனராம்.
வீரர்ஜனக் கூட்டமதை மேல்விழுந்து வாராமல்
தீரமுட னேவிலக்கிச் சேரவொட்டா மற்றடுத்தார்.
வெளியிடத்தி லாண்டவரை வெஞ்சிலுவை மேற்கிடத்தி
அளியார் அவர்கரத்தை நீட்டவென ஏவினராம்.
அப்போ தவண்பயந்தார் ஆதரஞ்சே ராண்டவரும்
தப்பாத மானிடருந் தானே யவர்பணிந்தார்.
ஈவிரக்க மில்லாத ஈனரந்த யூதர்களும்
மேவி வலக்கரத்தை மிக்கவிருப் பாணிகொண்டு
மரத்தோடு சேர்த்தறைந்தார் மாபரனின் வேதனைகள்
உரைக்கவும் போமோதான் உள்ளபடி யிவ்வுலகில்.
இடது கரத்தை இழுத்துவைத் தாணிகொண்டு
திடமா யறைந்தார்கள் தீயரந்தப் பாதகரும்.
பாதங் களையிழுத்துப் பன்னரும்நிஷ் டூரமதாய்
வேதனைக ளுண்டாக வீணர் அறைந்தார்கள்.
என்ன பயங்கரமீ தென்ன அனியாயம்!
இன்னவிதைப் போலியம்ப எங்கேனுங் கேட்டதுண்டோ?
நரம்புகள் தாமறவும் நல்லெலும்பு டைந்திடவும்
வரம்பின்றிச் சோரி வடிந்திடவும் காயங்கள்
நிறைந்திடவும் எம்பெருமான் நீணிலத்தில் பாடுபட்டு
அறைந்த சிலுவையிலோர் ஆறுதலு மில்லாமல்
கஷ்டப் படுகையிலே கர்த்தனருள் பாருங்கள்.
நிஷ்டூர வாதை நினையாமல் நம்முடைய
தேவைகளை யேநினைந்தார் தீயர்நமை யேநினைந்தார்.
ஏவைபழி யால்விளைந்த ஏகபரன் கோபத்தைத்
தணித்திடவுந் தம்மைத் தயவின்றிக் கொன்றிடவும்
கணித்த மனிதருக்குங் காசினியில் பாவத்தால்
தம்மைச் சிலுவையினில் தள்ளியறை வோருக்கும்
இம்மை யினியறையும் ஈனகுண மாந்தருக்கும்
வேண்டல் அவசியமென் றெண்ணிப் பரனையழைத்
தாண்டவருந் தந்தையரே அறியாமற் செய்கின்றார்
இவர்களைமன் னித்தருளு மென்று ஜெபித்தாராம்
பவவினையைப் போக்கவந்த பாங்குநிறை தேவபரன்.

என்னே அவரன்பு! என்னே அவர்பரிவு!
தன்னேரி லாத தனிப்பரமன் தயையென்னே!
அதன்பிறகு சேவகரும் அவராடை பங்கிட்டு
சுதனங்கித் தையலின்றிச் சுத்தமாய் நெய்ததெனக்
கிழிக்காமல் சீட்டெழுதிப் போடுதற்குத் தீர்மானம்
செய்தார்க ளங்ஙனமே திர்க்க தரிசனங்கள்
மெய்யாக இவ்வுலகம் உய்யநிறை வேறினதாம்.
இதற்கிடையில் கள்வர் இருவரைச் சிலுவைதனில்
வதைய அறைந்தார்கள் வாதை பொறுக்காமல்
அலறி யழுதார்கள் பலதேவ தூஷணங்கள்
கக்கிக் கதறினராம் காதகரக் கள்வர்களும்
இக்கொடுமை யெங்குண்டு இக்கு மொழிமடவீர்!

## சிலுவையில் தொங்குதல்

பூவுலகை மீட்கவந்த புண்ணியக் களஞ்சியத்தை
பாவியினைப் போலறைந்து பாதகரும் அம்மரத்தைப்
பூமியிலே நாட்டிப் புகலுமிரு கள்வரையும்
சாமியொடு பக்கமதில் சங்கையின்றி வைத்தார்கள்.
கள்வர் நடுவினிலே கள்வனிலுங் கேடுகெட்ட
கள்வனைப்போ லெம்பெருமான் கல்வாரி மலைமீதில்
சிலுவை மரத்தில் சிரஞ்சாய்த்து தொங்கினரே!
வலுவாயர் என்பார்கள் வல்லவரைக் கொன்றதாய்
நினைத்து மகிழ்ந்தார்கள் நேர்மையிலாப் பாதகரும்.
அனைத்து முடிந்ததெனை அப்பகைவர் எண்ணினராம்.
ஆலயத்தைத் தானிடித்துச் சாலமூன்று நாட்களிலே
கட்டுவதாய்ச் சொன்னவனே இட்டமுடனிப்போது
நின்னையிரட் சித்துக்கொள் நீதேவ சுதனுகில்
இன்னே சிலுவையைவிட்'டிறங்கிவா நாங்களுனை
விசுவசிப்போ மென்று மிகுகேலி செய்தார்கள்.
வசை தூஷணம் வாயில் வந்தபடி பேசினராம்.
சிலுவையிலே தொங்குந் திருடர்களி லேயொருவன்
தலைவரைத் திட்டித் தறிதலைபோல் தூஷணித்து
நீகிறீஸ்து வாயிடிலோ நின்றனையும் என்றனையும்
சாகாமல் ரட்சித்துக் கொள்ளென்றான் சார்ந்திருந்த
மற்றொருவன் கண்டித்து மாநிலத்தில் நாஞ்செய்த

குற்றங் களுக்குரிய கோலமதை நாம்பூண்டோம்
இவரோபொல் லாப்பொன்றும் இங்கே இழைத்தறியார்
தவறென்று நற்கள்வன் தற்பரனைப் பார்த்துரைப்பான்
தேவரீர் உம்முடைய தேசமதிற் சேர்கையிலே
மேவு மடியேனை மிக்கதய வாய்நினைத்துக்
கொள்ளுமென்று வேண்டக் குருசேறு பெம்மானும்
கள்ளனையும் பார்த்துக் கருணையுட னின்றேநீ
என்னோடு மோட்சத்தி லிருப்பாயென் றுன்றனுக்குச்
சொன்னே னிதுமெய்யென் றுரைத்தனராந் தூயபரன்.
பாவிகளை எப்போது மாவலுடன் நேசித்த
தேவபர னப்போது மேவும ருள்சுரந்து
தாமே பரலோக பூலோகத் தற்பரமன்
நேமிகு மாதரையை மீட்கவந்த நின்மலனென்
றன்னவர்க்குக் காட்டும் அருளொளியைத் தந்தாராம்.
துன்னு மிருவருக்குள் தூயவருள் ஒருவற்கே
பலனை யளித்ததுகாண் பாவத்தைத் தானினைந்து
நலனடைய வெண்ணி நாயகரைக் கேட்டதனால்
அவரோடு வானடையும் பாக்கியத்தை யங்கேற்றான்.
பவந்துடைக்க வந்த பரமனருள் கண்டீரோ!
பாவிகளைத் தேடிவந்தார் பாவிகளை யேமுதலில்
கவனித்தா ரதன்பின்பே கன்னியரா மன்னையரின்
துவங்கொள் முகங்காணத் தூயர் திரும்பினராம்.
தன்மகனை யிவ்வுலகில் தாயார் இழப்பதினால்
நன்மை யெலாமிழந்த நங்கையவ ளாயினளே.
அவர்போன பின்னர் அவளைக்காப் பாற்றுதற்கே
எவருண்டு பூதலத்தில் ஏற்பாடு செய்வதெனப்
பொறையு மனத்திடனும் பூண்டுசிலு வைக்கடியில்
பிறைபாத மாமரியாள் பேதைபோல் நிற்பதுகண்
டையன் தமதரிய அன்பன் அருளப்பர்
தைய லருகிருக்கத் தயாபரனுங் கண்டாரே.
தம்முடைய வேதனையைத் தற்பரமன் எண்ணுமல்
அம்மா வெனவழைத்தவ் வாரணங்கை நோக்கியவர்
சொல்லுவதைக் கேளுங்கள் தொல்புவியில் உள்ளவரே!
மகனைப் பிரிய மணங்கலங்கி நிற்பவளுக்
ககனிற்க ஆறுதலாய் ஸ்திரியே இதோஉந்தன்

மகனென்றார் பின்சீஷர் முகநோக்கி மாபரனும்
இதோஉன்தா யென்றார் இனியபரன் அம்மானை.
அதுமுதற் கொண்டச்சீடன் அன்னவளைத் தன்னில்லம்
ஏற்றா ரெனவெழுதி யிருக்குதுகாண் அம்மானை.
போற்றுபரன் சொன்மொழியால் பூவுலகில் உள்ளவர்க்குத்
தமதருமைத் தாயாரை தாயா யளித்தாரே.
நமதருமை தாயாருள் நங்கைமரி யம்மாளும்.
தேவன் நமக்களித்த திருவர மனைத்தினிலும்
மேவுமிந்த நல்வரமே மேலாம் வரமன்றோ!
தேவன் திருத்தாயார் பாவநிறை மானிடருக்கு
கேவைப் பழிதீர்த்த ஏந்திழையாம் நாயகியாள்
அன்னையாய்த் தான்விளங்கி அடியோரைக் காப்பாற்றித்
தன்னையன் பாதம் தநயர்நமைச் சேர்க்கின்றாள்.
இந்தநன்மை செய்தவரைச் சந்ததமும் போற்றுவதும்
பந்தபா வம்விலக்கிப் பாரகத்தி லுய்வதுமே
மாமரியாள் உள்ளம் மகிழ்விக்குஞ் சாதனமாம்.
நாமதனை நன்கறிந்து நல்லொழுக்க மெய்துவமால்.

## சிலுவை மரணம்

இப்போ துலகனைத்தும் இருள்சூழ்ந்து கொண்டதுவே.
செப்புமந்த காரம் சிலகாலம் நாம்பார்க்கும்
அந்தகார மல்ல அதன்தன்மை யோவென்றால்
விந்தையெனல் வேண்டும் விரிதலத்தி ராவினிலே
கவியு மிருளாகும் காசினியை சூழ்ந்தவிருள்
சவிநின்ற நண்பகலில் சாருமந்த காரமிது.
உலகைப் புரக்கவந்த உத்தமப ராபரனும்
சிலுவை மரந்தனிலே சேசுபிரான் நெடுநேரம்
சோர்ந்து மௌனமதாய்த் தொங்கினா ரம்மானை.
சேர்ந்து பலர்பார்க்க சேசுபிரான் தொங்குகையில்
அவருடைய வாயினின்றும் ஆனதொரு பேரொலியும்
துவமா யெழுந்ததுகாண் தூயபரன் வாயினின்றும்.
என்னுடைய தேவனே என்னுடைய தேவனே
என்னைநீர் கைவிட்ட தேதென்றார் எம்பெருமான்.
இம்மொழியை நாமறிதல் எவ்வளவோ கஷ்டமிதன்
செம்மையினை யோசித்தல் ஜெகத்தோர்க்கு நன்மையுண்டாம்.

அவருடைய மோட்சபிதா ஆண்டவருக் கப்போது
நவமாக ஆறுதல்கள் நல்கியிருப் பாரென்று
நாம்நினைத்தற் கூடும் நமதுவினை போக்கிநமைத்
தோமிற் பிதாவினிடந் தூயவராய்ச் சேர்ப்பதற்கே
வானின் றிறங்கி வையகத்தில் வந்துழைத்தார்.
மோனபரன் றன்மகிமை முற்றும் நிறைவேற
உழைத்தார் சகலநன்மை யுற்றவர்க்குத் தாம்புரிந்து
அழைத்தார் பலபேரை ஆர்வமுட னேமுடித்தார்.
அப்படி யிருக்கையிலே ஆதிபிதா ஏன்சுதனை
இப்போகை விடவேண்டும் ஏனென்று லெம்பெருமான்
பாவியிலும் பாவியாய்ப் பாவிக்கப் பட்டாரே.
பாவப் பிணைபட்டுப் பாருலகில் வந்தவர்காண்.
அதற்காக வன்றோ அவரிந்தப் பாடுகளை
விதம்விதமாய் மேவி விரிதலத்தி லேவதிந்தார்.
எத்தகைய பாவிகளாய் இப்புவில் நாமிருந்தும்
கர்த்தர்நமைக் கைவிடுதல் இல்லையெனக் கண்டுகொள்ள
வேண்டுமெனக் காட்டி வியன்பரனை நோக்கிநம
தாண்டவரு மிவ்வா றறைந்திட்டா ரம்மானை.
சிலுவை மரணத்தால் சேரும்பல வேதனையில்
சலங்கொள்ள உண்டாகும் தாகம் மிகக்கொடிய
வேதனையாம் செந்நீர் வெளியாதல் காரணமாம்.
மாதவரும் பல்வழியில் மாண்குருதி சிந்தியதால்
தாங்கவொண்ணுத் தாகமுற்ருர் தற்பரனு மப்போது
பாங்கர்நின்ற பாதகரைப் பார்த்துபரி தாபமுடன்
தாகமா யிருக்கின்றேன் என்றுபகர்ந் தாரருகில்
நின்ற ஒருவீரன் சென்றவர்க்குக் காடியினில்
தோய்த்தவொரு காளானைத் தொன்மொழியை மெய்ப்பிக்க
வாய்த்தவொரு கோலேற்றி வல்லவர்க்குத் தான்கொடுத்தான்.
கடைசியாய்ச் சேசுபிரான் கருதரிய பாடுபட்டு
தடையின்றித் தம்முயிரைத் தந்தைகரந் தந்திடுமுன்
எல்லா முடிந்ததென்ருர் ஏகனிந்தப் பூதலத்தில்
அல்லல்படு மானிடரை யாதரித்து மீட்கவந்தார்
அக்கருத்தைப் பல்விதத்தும் ஐயன் நிறைவேற்றி
மிக்கவொரு மெய்ச்சபையை மேதினியில் ஸ்தாபித்தார்.
மானிடரை அந்தம்வரை மாண்புடனே நேசித்தார்.

தானிடமை மேற்கொண்டு தம்மைப் பலிதந்தார்.
ஆகவே எல்லா முடிந்ததென்றார் ஆண்டவரும்.
போகவே நேரம் புவியிற் குறுகிற்று.
பிதாவே என்னாத்துமத்தை உந்தந் திருக்கரத்தில்
இதோநானும் ஒப்புக் கொடுக்கின்றேன் என்றுரத்த
சத்தமாய்க் கூறச் சடுதியிலே யாண்டவரின்
சுத்தத் திருவிழிகள் அத்தருணம் மூடினவே.
தலைமார்பின் மேல்வீழத் தற்பரனார் அங்கமுற்றும்
சிலுவையிலே தொங்கிற்றுச் சோரணி யின்பலத்தால்
இவையன்றோ சாவின் இயல்பா மறிகுறிகள்.
துவமிருந்த தேவபரன் தொல்லுலகுயிர் துறந்தார்!
உலக மனைத்தும் ஒருநொடியி லாக்கவல்ல
நலங்கொண்ட ஆதிபரன் நரர்தம்மை மீட்பதற்குத்
தன்னுயிரை யேசிலுவை மன்னிப் பலியாகத்
தந்தார் தாரணியை விந்தையாய்க் காத்தருளப்
பாடுகள் பட்டார் பகரொண்ணாப் பாடுபட்டார்.
வீடுபெறு மார்க்கத்தை மேதினிக்குக் காட்டியபின்
மோட்ச பிதாவுக்கு முற்றுந் தமைபளித்து
பூட்சியைப் பூவுலகில் விட்டகன்றார் பொன்னுலகம்,
அப்போதேவாலயத்தின் ஆன திரைச்சீலை
ஒப்பாக மேல்துவக்கிக் கீழ்வரை யிரண்டாகக்
கிழிந்ததுவாம் மேலும் கிடுகிடெனப்பூமியுந்தான்
அழிவதுபோ லேயதிர அங்கிருந்த கற்பாறை
பிளந்ததுவாம் கல்லறைகள் தாந்திறக்கப் பேறுபெற்ற
உளந்தூய மானிடரின் உற்ற சரீரங்கள்
உயிர்த்தனவாம் இவ்வாறு நேர்ந்தபல அற்புதங்கள்
செயிர்தீரக் கண்டதொரு செந்தூரி யன்முதலாம்.
மாந்தர்வியப்புற்று நேருமிவர் மெய்யாகத்
தேவசுத னாயிருந்தார் என்றுரைத்துச் சேர்ந்தங்கு
மேவும் ஜனங்களெல்லாம் மிக்க வருத்தமுற்று
மார்பி லறைந்துகொண்டு வந்தவழி போயினராம்.
இயற்கை யனைத்தும் இவரே பரமனென்று
செயலின் வழியாகச் செப்புவதைக் கண்டார்கள்.
நண்பகலில் எங்குமொரு நள்ளிருள்வந் தாடியது.
நண்பரென வந்து நர்னிலத்தைக் காத்தபரன்

சிலுவை மரத்தில் திருடனைப்போல் தொங்குபவர்
அலவோ எனக்கூறி யங்கி கரித்ததுவாம்.
ஜெருசலேம் பட்டணத்தில் திருநாள் வெறுநாளாய்த்
துக்க மயமாகத் துன்னி யிருந்தார்கள்
மக்கள் மனைவியொடு மாந்தரந்த யூதர்களும்.
சென்ற விஷயமெலாம் சிந்தைசெய்து பாதகத்தை
ஒன்றி னவர்போல உன்னத பராபரனின்
கோபத்துக் காளோவோம் சாபத்துக் காளோவோம்
என்னும் பயங்கரத்துக் கெல்லோரும் உட்பட்டுப்
மன்னுந் திகில்கொண்டு மாநிலத்திலே வதிந்தார்.
அந்திப் பொழுதாக ஆண்டவரின் தாயாரும்
நிந்தைக் குருசடியில் நின்றுகொண்டிருக்கையிலே
ஆண்டவரும் மெய்யாக மாண்டாரோ வென்றறிய
அங்கு நின்ற சேவகரில் ஆங்காரி யாரொருவன்
செங்குருதி தந்திட்ட செம்மல் விலாவதனை
ஈட்டியால் குத்தித் திறந்தான் இரக்கமின்றி.
தேட்டமுடன் சொன்ன தீர்க்க தரிசனங்கள்
இம்மியும் பிசகாமல் இத்தரையில்மெய்யாக
நம்மைப் புரந்தபரன் நாப்பணிறை வேறினதாம்.
அந்தோ மானிடரே ஆண்டவரைப் பாருங்கள்!
நிந்தையவ மானமிடை நேசர் உயிர்நீத்த
அலங்கோலக் காட்சியினை ஆர்வமுடன் பாருங்கள்!
நலங்கொண்ட தேவபரன் நாட்டினதைப் பாருங்கள்!
யாருக்கா யிவ்வளவு பாருலகில் பாடுபட்டார்?
நமக்கென்றே நம்பியிவண் நாமறிதல் வேண்டுமிங்கு.
நமக்காகப் பட்டவைகள் நன்மையின்றிப் போகவிடா
தவர்வழியைப் பின்பற்றிப் பவவழியை விட்டகன்று
புண்ணியத்தைச் செய்து புனிதபரன் பிள்ளைகளாய்
நண்ணி யவர்பதத்தை நாடுவோம் அம்மானை.
பாவமே ஆண்டவரைப் பாரச் சிலுவையினில்
மேவி யறைந்தவிருப் பாணியென நன்குணர்ந்து
பாவநெறி விட்டகன்று பாரி லிருக்கும்வரை
ஆவலாய் நாடுவோம் அறநெறியை அம்மானை.
செந்நீர் பலன்வீணாய்ச் சிந்தவிடா துய்வதுவே
இந்நிலத்தில் நாஞ்செய்யும் ஏர்கருமம் அம்மானை.

## ஆண்டவரின் அடக்கமும் சீஷர்களின் துயரமும்

ஆண்டவரை யங்கே அடக்கஞ்செய் கல்லறைதான்
வேண்டுமென மாதாவும் வேதனருள் செய்வரென
நினைத்தங்கிருக்கையிலே நின்மலருக் கந்தரங்க
இனத்தவரா யுற்ற விருசீஷர் அங்குவரக்
கண்டாள் கனகபரன் காதலன்னை மாமரியாள்.
அண்டிவந்த ஆட்கள் அரிமத்தே யாசூசை
நிக்கொதேமஸ் என்றிருவர் நீணிலத்தில் யாவருமே
துக்கமச்சங் கொண்டவராய் துன்னி யிருக்கையிலே
சூசைஎன்பார் தைரியமாய் சொன்னவதி காரியிடம்
ஆசையுடன் போயணுகி சேசுபரன் தேகமதை
தன்னுடைய தோட்டத்தில் தக்கவித மாயடக்கம்
நன்னயமாய்ச் செய்யவுனி நல்கிடுவீர் உத்தாரம்
என்று விடைகேட்க ஏந்தல் பிலாத்தனுந்தான்
நன்றென் றனுமதியும் நல்கினதால் நிக்கொதேமஸ்
என்பவரோ டாங்குப் பரிவட்டச் சீலையையும்
இன்பமணங் கொள்பொருளும் இட்டமுடன் கையேந்தி
ஐயன் சரீரமதை அன்பாயிச் சிலுவைநின்று
வையமதிற் றனிறக்கி வாட்டமுடன் அங்குநின்ற
தாயார் திருமடியில் சாய்த்துக் கிடத்தினராம்.
அச்சமய மாண்டவரின் ஆத்துமந்தான் ஆதமுதல்
இச்சகத்தில் மாண்ட எழிலான்மங் கள்வதிந்த
இருட்டுத் தலஞ்சென்றே இன்பமளித் தவ்விடத்தை
அருட்டேயன் வல்லமையால் ஆனந்த மோட்சமதாய்
ஆக்கியந்த ஆத்துமங்கள் ஆவலுடன் பார்த்திருந்த
நீக்கமறு நல்வாழ்க்கை நேயமுடன் நல்கினதாம்.
அடக்கம் அதிவிரைவில் ஆகவேண்டும் ஏனென்றால்
உடுக்கஞந்தான் வானில் ஒளிரத் தொடங்கினதும்
ஓய்வுநா ளாரம்பம் உன்னியந்த மாந்தர்களும்
தாய்மடியி லேயிருந்த தற்பரமன் தேகமதை
ஆங்குநின்ற மாது மதலேனாள் அருளப்பர்
நீங்காதருளுதவ நேர்மையினால் சீலைசுற்றி
எல்லோரும் ஆண்டவரின் ஏர்சவத்தைத் தூக்கியரு
கெல்லுறைபூங் காவனமே ஏகினர்காண் அம்மானே.

அவ்வனங்கற் பாறையொன்றில் ஆழவொரு கல்லறைதான்
செவ்விதாக வெட்டி யிருந்ததினுல் சீஷர்களும்
ஆண்டவரின் தேகமதை ஆங்கடக்கஞ் செய்தார்கள்.
ஆண்டோர் பெருங்கல்லை அன்னவர்கள் கல்லறைமேல்
வைத்துமூடி விட்டு வழியேகி ஞர்களன்றே.
இத்தரையி லெம்பெருமான் ஏற்றவடக் கம்மிதுவால்.
அத்தினத்தில் மீண்டுமிருள் ஆதரையைச் சூழ்ந்ததுமே
கர்த்தனைவிட் டோடிக் கரந்திருந்த சீஷர்களும்
ஒருவர் ஒருவராக ஒங்குசியோன் பர்வதமேல்
மருவி யிருந்தவொரு மாடியில்லம் போய்ச்சேர்ந்தார்.
அங்கேசா தாரணமாய் அன்னவர்கள் கூடுவதாம்.
துங்கபாற் குற்றவைகள் சொல்லுமெனக் கேட்கவரு
ளப்பரிடம் வந்தார்கள் அன்னவரும் கண்டவற்றைச்
செப்பிவா ஆண்டவரை ஒப்பி மறுதலித்த
இராயப்பர் தாங்கேட்டார் எல்லையில்லாத் துக்கத்தால்
பராபரனுக் கேசெய்த பாதகத்தை உண்ணினைந்து
கண்ணீர் கசிந்துருகிக் கங்கையென விட்டழுதார்.
அண்ணலெனு மங்குருவை ஆதரையில் விட்டோடி
ஒளிந்தற்காய் யாவருமே உள்ள மிகவருந்தித்
தெளிந்தனர்காண் தஞ்செயலின் தீதையந்த சீஷர்களும்.
அன்னுர் அதன்பிறகு முன்னுளில் சேசுவுடன்
துன்று விருக்கையிலே தொல்புவியில் நேர்ந்தவைகள்
ஒவ்வொன் றையுந்நினைத்தார் உத்தமர்செய் யற்புதங்கள்
செவ்வைபுறு சொற்பொழிவு சேரிறுதி இராவுணவு
முதலியன எண்ணியவர் முன்னிறுத்திப் பேசினாராம்.
இதமொழிகள் பேசுகையில் எம்பெருமான் பின்றமக்கு
நேர விருந்தவற்றை நேசமுடன் சொல்லியதைப்
பாரிலவர் நினைத்துப் பாரதுக்கம் எய்தினராம்.
இனியுலகில் ஜீவித்தல் என்னபய னென்றெண்ணி
இனியபரன் சொன்ன இதமொழியி லொன்றுன
பாடுபட்டுச் செத்துப் பகர்மூன்றும் நாளுயிர்ப்பேன்
நீடவனி யென்றுரைத்த நேர்வசனம் எல்லோரும்
மறந்தார் ஒருவருமே மற்றுமந்த வார்த்தையினை
திறந்தமனந் தானினைந்து தேறவில்லை யம்மானை.
இப்படியே அன்றிரவு ஏகனை நினைந்தவரும்

ஒப்பிலனின் அற்புதத்தை உன்னியுன்னி நீடுமொழு
தியம்பி யிருந்தபின்னர் ஏகினராந் தத்தமிடம்.
நயந்து மறுதினமும் நண்ணிவந்து போயினராம்.
என்றாலும் அன்னவர்க்கு நன்றளிக்கு மாறுதல்தான்
ஒன்றுங் கிடைத்திலதால் உள்ளமிக வருந்தி
எல்லா முடிந்ததென ஏங்கிப் பிரலாபித்து
அல்லல் மிகவுற்றார் ஆதரையில் அம்மானே.
இப்படியாய்ச் சீஷர்கள்தாம் இன்னலுற் றிருக்கையிலே
செப்பமில்லாப் பகைவர் செய்தியினைக் கேட்டிடுவீர்.

## பகைவரின் நிலைமை

சேசுவினைக் கொன்றபின்பு செப்பமிலா யூதர்களும்
ஆசொழிந்து நிம்மதியாய் ஆதரை யிருக்கலாமென்
றெண்ணினவர் அப்போ திருந்த விதம் என்னென்பேன் ?
எண்ணியவா றெல்லாம் இனிது நிறைவேறியதால்
கவலையின்றி யன்னவருங் காலங் கழித்தனரோ ?
உவகையுட னில்லத்தில் உற்றவ ரிருந்தனரோ ?
வஞ்சகனென் றேயழைத்த வல்லவருஞ் சாகையிலே
சஞ்சலங்கள் பூகம்பம் சர்வாந்த காரமுடன்
கற்பாறை பிளந்ததுவும் காதகரா மன்னவர்மேல்
தற்பரனுக் குண்டான எற்பகையி னோர் குறியாம்.
செந்தூ ரியனும் சிலவீரர் தாமுஞ்சென்னீர்
சிந்திச் சிலுவையினில் செத்தவருஞ் தேவசுதன்
என்று மொழிந்ததையும் ஏகன் சரீரமதை
அன்றே எடுத்துப்போய் ஆர்வ முடனடக்கஞ்
செய்ததையுங் கேட்டார்கள் சேசுவினைக் கொன்றவர்கள்.
அதனு லினியொன்றும் ஆபத் திலையேனும்
சதமான ஆலயத்தைத் தானிடித்துப் முத்தினத்தில்
கட்டுவதாய்ச் சொன்னமொழி காதகர் மறக்கவில்லை.
தட்டெனவே மூன்றுநாள் தாரணியி லேதேனும்
நிகழ்ந்தாலென் செய்வதென்று நீசர் நினைத்தார்கள்.
புகழ்வாய்ந்த எம்பெருமான் பூமியிலே மீண்டும்வர
நேர்ந்தால் ஜனங்களெல்லாம் நேசமுடன் மேசையாவென்
றோர்ந்தவரைப் போற்றி புரைசெய்து பாராட்டிக்
கொண்டாடு வார்களெனக் குற்றமுள்ள பாதகரும்

வண்டார் பொழில்நடுவில் வைகுமந்தக் கல்லறைக்குக்
காவல்வைக்க வேண்டுமெனக் காவலதி காரியிடம்
மேவி யுரைப்பார்கள் மெய்யன் பகைவருந்தான்.
மரித்தஅந்த வஞ்சகனும் மண்ணிலிருக்கையிலே
மரித்தமூன்று நாளுயிர்ப்ப தாயுரைத்தான் மன்னவனே,
அவனுடைய சீஷர்களும் அந்தச் சரீரமதை
அவமே களவாடி யாருமறி யாதொளித்து
நசரேயன் தான்மூன்று நாளிருந் துயிர்த்தனென
இசையாக எங்கும் இயம்பித்திரி யாதபடி
கல்லறைக்குக் காவலிடக் கட்டளையுந் தந்திடுவீர்,
இல்லையெனில் ஏமாந்து போய்விடுதல் திண்ணமென்றார்.
நாதன் மரிக்கையிலே நாட்டினிகழ் சம்பவங்கள்
ஓதக்கேட் டச்சமுற்றே உள்ளங் கலங்கிநின்ற
அதிகாரி யன்னவர்மேல் ஆழ்வெறுப்புக் கொண்டவனாய்
சதிகார யூதருடன் சச்சரவு செய்யாமல்
உங்களிடம் போர்வீரர் உண்டே அவர்களைக்கொண்
டங்கே யவர்களைவைத் துங்களிஷ்டத் தின்படியே
காவல் செய்துகொள்ளுங்கள் என்றுரைத் தக்காதகரை
அனுப்பிவிட்டான் அப்படியே அந்தக்கொடும் வஞ்சகரும்
கணப்பொழுதில் கல்லறைக்குக் காண்முத் திரையிட்டு
காவல் வைத்துச் சென்றார்கள் காசினியில் அம்மானை
மேவுமந்த யூதர்களே மேதினியில் அம்மானை.

## உயிர்த்தெழுதல்

ஓய்வுநாள் போயொழிய உற்றவைகறைப் பொழுதில்
ஞாயி றெனுங்கிழமை நாதனமர் கல்லறையில்
அந்தகாரத் தோடமைதி யார்ந்துகுடி கொண்டிருக்க
நொந்து நொறுங்கி நுவலரிய வாதையுற்ற
ஐயன் திருமேனி ஆடையால் சுற்றிவிட்ட
படியே அதற்குள்ளே பக்குவமா யசைவின்றிக்
கிடந்ததுகா ணப்போது கேள்வர் திருமேனி
இருந்த இடமுற்றும் எண்ணருமோர் ஜோதியொளி
நிறைந்தவுடன் ஜோதியிடை நேசமுடை யேசுபிரான்
நின்றார் மரித்தோரில் நின்றுயிர்த்த யேசுபிரான்
குன்றாத சத்தியத்தைக் கோதகற்றி பூதலத்தில்

நிலைநாட்ட நின்று நின்மலனுயிர்த் தெழுந்தார்
தலைசாய்த் துயிர்நீத்த தற்பரனுயிர்த் தெழுந்தார்.
இருட்டுத் தலஞ்சென்ற ஏசுபரன் ஆத்துமமும்
மருட்டுடைத்து மீண்டும் மாண்கல் லறைபுகுந்து
மெய்யுடலிலே நுழைந்து மெய்யாய் உயிர்பெற்ற
ஐயன் அருள்நவத்தில் மேலான அற்புதமாம்.
தேவ சுதனுக்குரிய தேஜோன் மயானந்தம்
மேவியவர் மேனியெங்கும் விந்தை யுடனேயொளிர
ஆண்டவருயிர்த் தெழுந்தார் ஆதரையி லம்மானை
மீண்டுலகம் வந்துயிர்த்தார் விண்ணரசர் அம்மானை.
இதுகாறும் நாம்பார்த்த ஏசுபிரான் அன்னவரே
அதுபோதி லானாலும் ஆனபல மாறுதல்கள்
எந்தையிடந் தோன்றினவே ஏகன்மெயில் காயங்கள்
நிந்தையவ மானங்கள் நின்றவடை யாளங்கள்
ஒன்றுமே தோன்றிலவாம் உற்றபரன் மேனிநின்று
என்றுமிலா வின்ப எழில்ஜோதி வீசஅவர்
ஐந்துகாயங் கள்மட்டும் ஆண்டவரின் சீர்வனப்பை
எந்தவிடத் துங்கெடுக்கா தேர்சுடர்விட் டாபரணம்
போலொளிர்ந்து மான்மகிமை புங்கவர்க்குத் தந்தனவால்
சாலவுந்தம் வல்லமையால் சாவைவென்று யிர்த்ததுபோல்
எம்பெருமான் கல்லறையை மூடி யிருந்தகல்லை
உம்பர் புரட்டாமல் உள்ளபடி விட்டுவெளி
வந்துவிட்டார் தம்மகிமை யுத்தான வல்லமையால்
விந்தையிலும் விந்தையிது வேதமொழி யம்மானை.
நின்றங் கிருந்தவர்கள் நித்திரையி லாழ்ந்திருந்தார்
ஒன்றியபல் முத்திரைகள் உள்ளபடி யேயிருக்க
ஜெருசலேம் பட்டணமே சீர்குலைந் தழிந்துவிடும்
உருவழிந்து வீழுமென உற்றதொரு பூகம்பம்.
ஏனென்றால் அச்சமயம் வானத்திருந் தொருசம்
மனசோரும் பூவிறங்கி மாபரமன் கல்லறையை
இன்பமாக மூடுகல்லை எட்டப் புரட்டியதன்
மேலமர்ந்தார் ஆருருவம் மின்னலன ஆடையணி
போலவெண்மை யாயிருக்கப் போர்வீரர் பார்த்தலறி
அஞ்சி நடுங்கிஉயி ரற்றவர்போ லாயினராம்.
வஞ்சகர்தஞ் சூழ்ச்சியொன்றும் வையகம்ப லித்திலதே.

## தரிசனமளித்தல்

ஐயன் உயிர்த்தபினர் யாரைநாடிச் சென்றிருப்பார்?
மெய்யன்றன் மாதாவை மேவிமுதல் கண்டிருக்க
வேண்டுமென்றே நாம்நினைக்க வேண்டுமிந்தப் பூதலத்தில்.
ஆண்டவரே புத்திரர்க்குள் ளேசிறந்தார் ஆதலினால்
தம்மைப் பலிக்கொடுத்துத் தாங்கொண்ணா வின்னலுற்றுச்
செம்மை யிழந்த திருத்தாயர்க் காறுதலை
யளிக்காதிருப்பாரோ அன்னைமரி யாள்குமரர்?
களிப்பருளக் கர்த்தருந்தான் கல்லறை நின்றேறியதும்
மின்னலைப்போல் சீயோனில் மேவியசிற் றில்லஞ்சேர்ந்
தன்னையரைக் கண்டார் அவ்வமயம் மாமரிக்கும்
புத்திரர்க்கு மென்னிகழ்ந்த தென்றுரைக்கப் போமோதான்?
சுத்தஅந்தச் சம்பவந்தான் தொல்சுருதி புத்தகத்தில்
சொல்லப்படவில்லை சோதிநிறை விண்ணுலகின்
எல்லையிலா இன்பத்தில் இஃதொன்றே போதுமென்க!
ஆண்டவரும் பின்னர் அவருக்காய்க் காத்தினலைப்
பூண்டிருந்த நண்பர்களைப் போய்க்காண வேண்டுமென
நேசத்தின் சீரனுவல் நேர்மையுடன் செய்திடுவான்
ஆசையுடன் ஆண்டவரும் அன்னவ ரிடந்தேடி
போயினராம் அன்னையரைப்போல்வருந்தித் துன்புற்ற
நேயமதலேனாள் நின்மலரோ டந்தம்வரை
யிருந்தவரும் நல்லடக்கம் எய்தத் துணைநின்றாள்.
அருந்தவரும் போயினபின் ஆனதெல்லாஞ் செய்வதென்னும்
நன்னோக்கத் தோடங்கு நாதன்திரு மேனியின்மேல்
மன்னுமணத் தைலங்கள் மாண்புடனே பூசுதற்குக்
கொண்டுசில மாதருடன் கூடியந்தக் கல்லறையை
யண்டிப்போய்ப் பார்க்கையிலே ஆங்கிருந்த கல்புரட்டப்
பட்டிருக்கக் கண்டாள் பாவை மதலேனாள்.
தட்டெனவே யோடித் தலைவர் இராயப்பர்
அருளப்பர் ஆனவரை ஆண்டவரின் கல்லறைதான்
இருக்குமிடம் யாதெனவே ஏந்திழையுங் கேட்டாளாம்.
அதற்கிடையி லன்னவளோ டாங்குசென்ற பாவையர்கள்
இதமா யருகண்டி ஏறெடுத்துப் பார்க்கையிலே
அங்கே யொருவாலன் அமர்ந்திருக்கக் கண்டார்கள்.

துங்க நிறைவாலிபனும் தோகையரை நோக்கியஞ்ச
வேண்டா மெனவுரைத்து மேதகநீர் தேடுவது
மாண்டபரன் சேசுவினை மாநிலத்தி லென்றறிவேன்
அவரிங்கே யில்லை யவர்மொழிந்த வாக்கின்படி
நவமாயுயிர்த் தெழுந்தார் நாதன்மெ யிருந்தவிடம்
பாருங்கள் மேலும் பரிந்தோடிச் சீஷருக்கு
கூறுங்கள் செய்தியினைக் கோதையரே உங்கள்முனர்
ஐயன்கலி லேயாவுக் கார்வமுடன் போகின்றார்
மெய்யாக அங்கவரை மேவிநீங்கள் காண்பீர்கள்
என்றுரைக்க மாதர்களும் ஏகபரன் காணவெனச்
சென்றன ரங்நாட்டினுக்குத் தீவிரமாய் அம்மானை.
மதலேனாள் சொற்கேட்டு வந்திருவர் நோக்குகையில்
உதயத்தில் கல்புரள, உள்ளிடத்தில் சீலைமட்டும்
இருப்பதையுங் கண்டுமனம் ஏங்கித் திரும்பினராம்
மாதுமத லேனாளோ மாதுயரத் தோடுமன
வேதனை மிகுந்தழுது வேறெங்கும் போகாமல்
அங்கேயோ நின்றிருந்தாள் அப்போ தழுதவண்ணம்
நங்கையவள் கல்லறையை நாட்டமுடன் பார்க்கையிலே
வெள்ளைவஸ்தி ரந்தரித்த விண்தூதர் தாமிருவர்
உள்ளிடத் திருப்பதுகண் டுத்தமியுந் தானழுதாள்.
அன்னாரும் பாவையரை ஏனீ யழுகின்றாய்
என்றுகேட்க ஏந்திழையாள் என்னாண் டவர்தம்மை
எடுத்தேகி யெங்கடக்கஞ் செய்தனரோ என்றுரைத்துச்
சடுதியிலே பின்றிரும்பித் தையலவள் பார்த்தாளாம்.
அங்கே அவளருகில் ஆண்டவர்தாம் நின்றிருக்க
நங்கை யடையாளம் நன்கறியா தப்பொழிலின்
காவலனென் றெண்ணுகையில் கர்த்தன்முக நோக்கி
பாவா யழுதாரைத் தேடுகின்றாய் பாரிலென
ஐய்யாநீர் ஆண்டவரை அவ்விடம் நின்றப்புறமாய்ப்
பையவே கொண்டடக்கம் பாங்காகச் செய்திருந்தால்
என்றுனக்குச் சொல்லிடுவாய் என்றிரைஞ்சிக் கேட்டாளாம்.
மன்றில் நவம்புரிந்த மாபரனுஞ் சேசுபிரான்
மரியாயே என்க மதலேனாள் பார்த்தவரை
இரபோனி என்றவரை எட்டித் தொடமுயன்றாள்.
அப்போது சேசுபிரான் அன்னவளைத் தாம்பார்த்து

இப்போ தென்னைத்தொடுதல் ஏற்றதல்ல ஏனென்றால்
இன்னும் பிதாவிடத்தில் ஏறிநான் போகவில்லை
என்னுடைய சோதரர்க்கு என்பிதாவும் உம்பிதாவும்
என் தேவன் உந்தேவனாகி யிருப்பாரிடம்
ஏறிப்போகின்றேன் எனமொழிவா யென்றுரைத்தார்.
அப்படியே அந்நங்கை ஆண்டவரின் தரிசனத்தைச்
செப்புமவர் சீஷருக்குச் செய்திசொல்லி எச்சரித்தாள்.
பேதையந்த சீஷர்களோ பெண்பேச்சை நம்பவில்லை
கோதையர்சில் லோர்மொழிந்த கூற்றினையும் நம்பவில்லை.
பெண்கள்மொழி வீண்பிதற்றல் என்றிருந்தார் பேதையர்கள்
கண்கண்டாற் போலு மதலேனாள் களித்திருந்தாள்.

## வழியில் தரிசனை

அன்று பகற்கழித்துச் சென்று ிருசீஷர்
எம்மாவூஸ் என்னு மெழிலூருக் கம்மானே.
அம்மா அதுபோதில் அன்னவரோ டன்னியராம்
மாந்தர் ஒருவர் வழிநடந்து வந்தாராம்.
சேர்ந்திருவர் சேசுபரன் செய்தநவ அற்புதங்கள்
யூத ரவரிடத்தில் கொண்டிருந்த நம்பிக்கை
நாதன்புவி மீட்பரெனத் தாங்கொண்ட நம்பிக்கை
சிலுவைதனில் மரித்த சிந்தாகுலச் செய்தி
அலகில்லாத் துன்பங்கள் ஆதியவை பேசியவர்
போவதாய்ச் சொல்லிப் புண்ணிய ருயிர்த்தரெனப்
பாவையர்கள் கூறியதைப் பாரிடத்தில் நம்பவில்லை
என்றும் புகன்றவர்கள் ஏங்கிமனம் நொந்தார்கள்.
அன்றவர்கள் சொன்னதுகேட் டன்னியரும் ஏதுசொல்வார்
பேதைமதி யீனர்களே பேசுங் கிறீஸ்தென்பார்
வாதையுற்று மாண்டதுபோல் வருங்காலச் சம்பவங்கள்
தெரிந்துரைத்த தீர்க்க தரிசனங்கள் யாவையுமே
திரியாமல் பூவுலகில் திட்டமாய் நேருமென
விசுவசிக்கா மற்போன விந்தையென்ன என்றுரைத்தார்.
இசைமருள் மோயீசன் என்பார் முதற்பலரும்
சொன்னவற்றைத் தாமெடுத்துச் சொன்னார் அவைநிகழ்ந்த
தன்மையினை நன்றாகத் தாரணியி லேவிளக்கிப்
பாடுகளின் உட்பொருளைச் சீடருக்குத் தாம்விளக்கி

வீடுபெறு மார்க்கம் வெளிப்படுத்திக் கொண்டேக
மற்றிருவர் அன்னியரின் மாபுனித வார்த்தைகளை
உற்றுக்கேட் டன்னார் உபதேசத் தால்மகிழ்ந்தார்.
ஆறுதல் சமாதானம் அன்னியரின் சேர்க்கையினுல்
ஊறுவதைக் கண்டவரை விட்டகல உள்ளமின்றி
போகையிலே ஊர்குறுகப் போந்தவரும் தூரமதாய்
ஏகுபவர் போலிருக்க ஏற்றவிரு சீஷர்களும்
அந்திநேர மாயிற்ருல் அட்டியின்றி எங்களுடன்
வந்திருந்தி ராப்பொழுதை வாகுடனே போக்கிடுவீர்
என்று மொழிந்தார்கள் இசைந்தங்குத் தங்கினராம்.
நன்ருகப் பந்தியமர்ந் துற்றவரும் அப்பமெடுத்
தாசீர் வதித்துப்பிட் டன்னவர்க்குத் தந்திடவே
மாசகன்று கண்திறக்க மாபரனென் ருேர்ந்தனராம்.
ஆனு லதுசமய மாண்டவரும் போய்மறைந்தார்
மேனுட்டை விட்டுவந்த மெய்ப்பரமன் அம்மானே.
அன்னு ரதிசயித்துத் தூன்னுபரன் தங்களுக்கு
நன்னயமாய்க் காட்சிதந்த நன்மையினை யேவியந்து
பேசித் திரும்பிவந்து பேதுருவு மற்றுமுள்ள
நேசமிகு சீஷர்களும் நேர்விடுதி யேகுழுமி
ஆண்டவரும் சீமோனுக் கற்புதமாய்த் தோன்றியதை
மீண்டுமீண்டுஞ் சொல்லி மிகுவியப்போ டாங்கிருக்கக்
கண்டார்கள் தங்களுக்குக் காட்சிதந்த செய்தியையும்
விண்டுரைத் திருந்தார்கள் மிக்கமன நிம்மதியாய்.
யாவர் வதனத்தில் ஆனந்த மோடமைதி
மேவி யிருத்தலங்கு மிக்கதெளி வாயிற்றே.
சீமோன் அவர்களுக்கு திட்டமுடன் ஓர்மொழியில்
சாமிஉயிர்த் தாரென்று சாற்றியதே யன்னவர்தாம்
நம்புதற்கு போதியதாய் நாட்டி யிருந்ததுகாண்.
இவ்விதமாய்ச் சீமோ னிராயப்பர் மற்றவருல்
செவ்வியதாய் முன்போல் ஜெகத்தில் உறுதிபெற்ருர்.
சீமோன் தலைவரெனச் செப்பவிது ஆதாரம்
ஆமா றறிந்திடுவீர் ஆதரையில் அம்மானே.

## யாவர்க்குந் தரிசனை

இவ்வாறு சீஷர்களும் ஏகனது மாட்சிமையை
அவ்வமயம் பேசி யகமகிழ்ந்தி ருக்கையிலே

அனைவோருங் காணவென ஆண்டவரும் ஆங்குதரி
சனைதந் தவர்நடுவில் தற்பரனும் நின்றாரே.
அவர்தாம் சேசுபரன்! அங்க வடையாளங்கள்
தவறும லேபொருந்தித் தாங்கிநிற்கக் கண்டார்கள்.
ஆச்சரியத் தாலொன்றும் ஆங்கியம்பக் கூடாமல்
மூச்சுவிட வும்பயந்து முன்னவனைப் பார்த்திருந்தார்.
கருணைக் கடலாகுங் கர்த்தனுந்தான் அன்னவரை
அருணயநத் தானோக்கி யாசீர்வதித் துரைப்பார்.
உமக்குச் சமாதானம் உண்டாவ தாகவென்று
தமைக்கண்டு பீதியுடன் தானிருக்கும் சீஷர்களை
அஞ்சவேண்டாம் நான்தான் என்றுரைத்தார் ஆண்டவரும்.
செஞ்சொன் மொழிகேட்டுஞ் சீஷரொன்றும் பேசாமல்
பூதந் தனைக்கண்டார் போல்பயந்து தானிருக்க
ஆதரஞ்சே ராண்டவரும் அன்னவரைப் பார்த்துரைப்பார்.
ஏன்கலங்கி நிற்கின்றீர் ஏன்வருந்தி வாடுகின்றீர்
நான்தானென் றோர்ந்திடநீர் நாட்டமொடென் கைகளையும்
கால்களையும் பாருங்கள் கைகளினால் அச்சமின்றி
மால்கழலத் தொட்டு மனமாறப் பாருங்கள்
என்புகளும் மாமிசமும் எந்தனுக் கிருப்பதைநீர்
கொன்பொருகக் காண்பீர்கள் கூறுமொரு பூதமதற்
கிவையிருப்ப தில்லையன்றோ என்றவர்க்குத் தங்கரங்கால்
காட்டிநின்று ரப்பொழுது காசினியை யார்வமுடன்
மீட்டெழுந்த எம்பெருமான் மேதகவே அம்மானை.
சீடர் அதுகண்டு சிந்தைமகிழ்ந் தாரெனினும்
நீடுவிசு வாசமின்னும் நேர்ந்திலதென் றையனுந்தான்
உங்களிட மேதேனும் உண்பதற்குண் டோவென்க
அங்கிருந்த சுட்டமச்சங் கொண்டுவந் தளித்தார்கள்.
ஆண்டவரும் கொஞ்சமதிற் பிட்டருந்தி மீதியினை
மீண்டு மவர்களிடம் மேதகக் கொடுத்துவிட்டார்.
பின்னர் அவர்களுக்குச் சொன்னமொழி மெய்ம்மறைக்குப்
பென்னம் பெரியதொரு பேசருமூன் றுவதெனுந்
தேவத் திரவியநு மானமதாய்ச் சீருறவே
மேவி விளங்குவதை மேதினியில் காண்பீர்கள்.
சேசுபிரான் அப்போது சீஷர்களின் மேலூதி
நேசமுட னிஸ்பிரீத்து சாந்துவினை நீங்கள்பெற்றுக்

கொள்ளுங்கள் யாருடைய பாவங் களைநீங்கள்
தள்ளிப் பொறுப்பீரோ அன்னவரின் பாவங்கள்
மன்னிக்கப் படுமெவைதாம் மன்னிக்கப் படவிலேயோ
துன்னுமந்தப் பாவங்கள் மன்னிக்கப் படாதென்ருர்.
இம்மொழிக ளாற்பரமன் எண்ணரும்பச் சாத்தாபம்
செம்மையாய்ச் செய்துவைத்தார் என்றறிவீ ரம்மானே.
இதனுல் பரமனுடை இங்கித குணதிசயம்
பதமா யறிவதல்லால் பாரி லுயிர்த்தபின்பும்
மாணிடர்மேல் வைத்த மகத்தான நேசமிது
தானென்றுக் காட்டத் தகுந்தவுயர் சாட்சியரோ!
பாடுகளின் காலத்தில் பார்வேந்தர்க் கேபயந்து
பீடுமறந் தோடியவர் பேதைகளாஞ் சீஷரெனச்
சேசுபரன் பாராமல் சீற்றமொன்றுங் கொள்ளாமல்
பாசமுடன் கல்லறையின் பாரகத்துயிர்த்தவுடன்
அன்போடு காட்சிதந்தார் ஐயமறச் செய்திட்டார்
துன்பத்தைப் போக்கித் தூயவதிகாரந் தந்தார்
எம்பெருமானன்பின் எழில் பெருமை என்னவென்கோ!
உம்ப ருலகின்வந்த உத்தமர்தம் அருளென்கோ!

## தோமையாரின் சந்தேக நிவர்த்தி

ஆண்டவரு யிர்த்தரென யாவருமே நம்பவையம்
பூண்ட வொருசீஷர் பூதலத்தில் தோமையென்பார்
நானவரைக் கண்டு நவிலுந்து வாரமதில்
தீனரது காயங்களில் தேற்றமுடன் என்விரலே
நுழைத்தா லொழியவிசு வாசியேன் என்றுரைத்தார்
விழைவிற் குறையாத வேதமுறை தோமையரும்.
விசுவாசம் நம்பிக்கை என்னுமிரு மேலறமும்
நசிந்தாலும் நேசமெனும் நேரறம் நிலைத்ததனுல்
வானபரன் ருமிரங்கி வையகமெட் டாந்தினத்தில்
ஆனதொரு வீட்டினிலே யாவருமிருக் கையிலே
நவமாய் நடுவில்நின்று நம்பாத தோமையர்க்குத்
துவமிக்க தோர்மாற்றந் தூயவருந் தான்மொழிந்தார்.
இவ்விடத்தி லுன்விரலே யிட்டென் கரங்களையுஞ்
செவ்வையாய்ப் பார்விரலைச் சேர்த்திடென்வி லாவினிலே
அவிசுவாசி யாயின்றி ஆழவிசு வாசியாக

இருப்பா யெனவுரைத்தார் ஏர்பரமன் அப்போது
தருக்கித் திருந்தவராம் தாள்பணிந்த தோமையரென்
ஆண்டவரே என்தேவே என்றுரைத்தா ரம்மானை.
மாண்டபிரான் நோக்கி மாநிலத்தில் தோமையேநீ
எனைக்கண்ட தாலே விசுவசித்தாய்க் காணுமல்
தனியிருந்தும் விசுவசிப்போர் தாரணியில் பாக்கியராம்
என்றுரைத்தா ரீதுண்மை இன்றுமென நன்கறிந்து
நன்றியுடன் நாதன்மொழி நம்பியுல குய்வோமால்.
விசுவாச முள்ளவரே மேதினியில் தேவனருள்
நிசமா யுறுவரிது நிச்சயங்காண் அம்மானை.
நாத னுயிர்த்தெழுந்த நல்லசுப சம்பவந்தான்
வேத அடிப்படையாம் விண்ணுலகுக் கோர்வழியாம்
மாநிலத் தோரப்படியே மாட்சிபெறும் உத்தானம்
தானுறுவர் என்பதற்குத் தக்கநல்ல அத்தாட்சி
இதுவாகும் என்றறிவீர் ஏகனது மெய்மறையில்
பொதுவாகச் சேர்ந்திருக்கும் புண்ணியரே நன்கறிவீர்.
யூதர்களச் சம்பத்தின் உண்மையினைத் தாமறைக்கத்
தீதுற நிகழ்த்தியவை தேசம் பலிக்கவில்லை.
ஆண்டவரின் உத்தான ஆச்சரியந் தேசநூல்
ஈண்டுரைக்குஞ் சம்பவங்காண் ஈதுமறுப் போர்வீணர்
என்றுமதித் தம்பரமன் இட்டமொடு யிர்த்தெழுந்த
வென்றிகொளுந் தானமதை வீரமுடன் நம்பிடுவீர்.
ஆதி யந்தமில்லாத ஆதிபரன் வல்லபத்தால்
ஏதுநிகழா துரைப்பீர் இத்தரையி லம்மானை.

## இராயப்பர் திருச்சபையின் தலைவர்

உத்தானம் நேர்ந்த ஒரு வாரத்தின்பிறகு
உத்தமரை யேகண் டுவகைநிறைந் துள்ளவராம்
சீடரொரு நாளன்று சேர்ந்த கலிலேயாவை
நாடி நடந்தார்கள் நற்பிழைப்புக் காயேரிக்
கரையோரம் சென்றவுடன் வரையெனுமி ராயப்பர்
திரையேகி மீன்பிடிக்கச் செல்லுகிறேன் என்றுரைத்தார்.
அதுகேட் டறுவர் அவரோடு சேர்ந்திடச்சம்
மதித்தார்க ளன்னோரில் மால்கொண்ட தோமையரும்
தானிருந்தார் ஏனெனிலோ தக்கவெச்சந் தர்ப்பமினித்

தானிழத்தல் நல்லதல்ல வென்றுநினைத் தார்போலும்.
மாலைப்போ தன்னவரும் மாறிவலை வீசியந்த
வேலையிலி ராவெல்லாம் மீன்பிடித்துப் பார்த்தார்கள்.
விடியளவு மீனொன்றும் வீசுவலை சிக்கவில்லை
விடியுந் தருணத்தில் மூடுபனி மேவியுள
கரையகத்தில் ஒருருவங் கண்டார்கள் மங்கொளியில்
உரைசெய்து மக்களே உண்பதற் கியாதேனும்
உண்டோ வெனவாங் குசாவுவதைக் கேட்டார்கள்.
தண்டலை யிராவெல்லாம் தாளா துழைத்தகளை
மேலிட் டிலையென்று மேவிபதில் தந்தார்கள்.
சாலவுங்கள் தோணி வலதுபுறந் தாழாமல்
வலைவீசிப் பாருங்கள் வாகுடனே மீன்படுமென்
றலையருகில் நின்றிருந்த அவ்வுருமொ ழிந்ததுவால்.
ஐயமொன்றுங் கொள்ளாமல் ஆக்ஞைபடி யேபணிந்து
பையவவண் வீசவலை பன்னரிய மீனிறைந்து
திடமாக ஆழத்தைச் சேர்வதுகண் டெல்லோரும்
படகேற்றச் சங்கடந்தான் பட்டார்க ளச்சமயம்
அருளப்பர் சொன்னார் அவர்சாமி தானென்று,
மருணீங்கி ராயப்பர் மற்றவரி ழுக்கவிட்டுப்
படகைக் கரைசெலுத்தி பாசமுடன் வந்தனராம்.
மற்றாறு பேரும் வலையீர்த்துக் கொண்டுகரை
யுற்றார்கள் கஷ்டமுடன் உள்ளபடி யம்மானை.
அக்கரையில் தீமூட்டப் பட்டிருக்க ஆங்கொருமீன்
வைக்கப்பட் டதன்பக்கல் அப்பங்கள் வைக்கப்பட்
டிருப்பதையுங் கண்டார்கள் ஏகனப்போ தேதுரைப்பார்
விருப்பமாய் நீர்பிடித்த மீன்கொஞ்சம் தாருங்கள்
என்றா ரதுகேட் டிராயப்பர் மீன்வலையை
நன்றாய்க் கரையிழுத்து நாட்டமுடன் பார்க்கையிலே
நூற்றைம் பதுமீன்கள் நோக்கியிறும் பூதுற்றார்.
போற்றுபர னப்போது போசன மளித்தனராம்.
பந்தியமர்ந் தாரெவரும் பார்த்திபனை யாரென்று
சிந்தைசெய்து கேட்கத் துணியவில்லை ஏனெனிலோ
அன்னவர்தாஞ் சாமியென்று திண்ணமா யறிந்தார்கள்.
நன்னயமாய்த் தானளித்த நல்லுணா வருந்தியபின்
சீடரிலி ராயப்பரைச் சேசுபரன் பார்த்துரைப்பார்

நாடியிவர் தமுள்ளார்நீ நன்கதிக மாகவென்னை
நேசிக்கின் றயோசொல் நீணிலஞ் சீமோனேயென்
றுசையுடன் கேட்கவவர் ஆண்டவரே நானும்மை
நேசிக்கின் றேனென்று நீரே யறிவீரென்
றுசைகொளி ராயப்பர் அப்போ விடையளிக்க
குணநிதியும் என்னுட்டுக் குட்டிகளை மேய்ப்பாயென்
றிணக்கமுடன் சொன்னுராம் இங்ஙனமே மும்முறையும்
கேட்டு விடைவந்ததிறுல் கேள்வரவர் நேசமதை
நாட்டி வலியுறுத்தி நானிலத்து மக்களுக்கு
அந்த நல்லசீஷர்க் கதிகாரத் தின்றலைமை
சொந்தமெனக் காட்டுதற்குச் சுத்தபரன் சித்தமுற்றுர்.
திருச்சபையின் மக்களையே தேவபரனுடென்றுர்
திருச்சபையி னுடுகளை சேர்த்துவைத்து மேய்ப்பவரே
இராயப்ப ராந்தலைவ ரின்னுமவர் பின்வருவோர்
பராபரனுர் நேமிக்கும் பாப்பெனுந் தலைவர்களாம்.
இந்தஉயர் சத்தியத்தை நிந்தனைசெய்வாரெவரும்
சந்தமறை மக்களல்ல சத்தியமாய்ச் சொல்லுகிறேம்.
தலைவர்நமக் கில்லையென்றுல் தாரணியில் மேய்ப்பனில்லா
தலைகின்ற ஆடுகளாய்த் தாமிருப்போம் அம்மானை.
ஆண்டவரு யிர்த்தபின்ன ராதரையி னோர்ந்ததெலாம்
ஈண்டெடுத்தி யம்பிடுவ தென்று விடம்போதா
தாதலிறுல் அருளப்பர் ஐயனுடை காதையினில்
ஓதாத அற்புதங்கள் உண்டுபல வென்றுரைத்தார்.
அப்படியே தற்பரனுர் ஆதரை யுயிர்த்தபின்பு
இப்புவியில் நாற்பதுநாள் இன்பமுடன் சீஷருக்குக்
காட்சி யளித்திட்டார் கர்த்தனதி ராச்சியத்தின்
ஆட்சியினைப்பற்றி அரிய பல சங்கதிகள்
சொல்லி யுயிருடனே தூயவரி லங்குவதாய்
அல்லல்படுஞ் சீஷர்முதல் யாவருக்குங் காட்டினராம்.
ஒருநாள் மலைமீதில் உத்தம பராபரனும்
மருவிநின்ற சீஷர்சமார் ஐந்நூறு மாந்தருக்கு
மேலிருக்கக் காட்சிதந்து மெய்ய னதிகாரமுடன்
ஞாலத்தும் வானத்தும் நாளுமெனக்கதிகாரம்
யாவு மளிக்கப்பட் டிருக்கின்ற தாகையிறுல்
ஆவலுடன் நீங்கள்போய் யாவருக்கும் போதித்துப்

பிதா சுதனோ டிஸ்பிரீத்து சாந்துவினு மத்தாலே
சதாஞானஸ் நானந்தான் தந்துமக்கு நானளித்த
கட்டளைகள் யாவும் அனுசரிக்கக் கற்பிப்பீர்
இட்டமுட னெந்நாளும் இப்புவிதான் போகுமட்டும்
உங்களோடு கூட விருக்கின்றேன் உண்மையென
அங்கிருந்தோர்க் கெல்லாம் அறைந்திட்டார் அம்மானை.
இந்த மொழியாலுலகம் எங்குஞ்சுவி சேஷமதை
நந்தாம லோதுமுயர் நற்கருமந் தன்னைத்தம
தப்போஸ்த லர்க்கருள அம்பரனுஞ் சித்தமுற்றார்
அப்படியே இன்றளவும் நேருகின்ற தம்மானை.

## மோட்சாரோகணம்

இப்போது கர்த்தாவின் ஏரலுவல் பூரணமாய்த்
தப்பாம லேமுடியத் தற்பரனின் தந்தையிடம்
திரும்புதினம் வந்ததுகாண் சீஷர்பதி னொருவரும்
விரும்புபழ மாடியில்லம் மேவி யிருக்கையிலே
எம்பெருமான் தோன்றியன்னம் இன்பமோடருந் துகையில்
அம்பர வாக்குத்தத்தம் அன்னவரெ திர்பார்த்துக்
காத்திருக்கு மாறுபரன் கட்டளையளித் துரைப்பார்
ஆத்துமத்துக் கேற்றமொழி அம்பரனெடுத் துரைப்பார்.
அருளப்பர் தண்ணீரால் ஞானஸ்நானங் கொடுத்தார்
மருணீங்க நீங்களுந்தான் மற்றுஞ்சில நாட்களின்பின்
இஸ்பிரீத்து சாந்துவினால் ஏற்றஞானஸ் நானமதைத்
தப்பாமற் பெறுவீர்கள் தாரணியில் என்றுரைத்தார்.
இவ்வாறு ரைத்தபின்ன ரேகபரன் அன்னோரைச்
செவ்விநிறை பெத்தானியா செப்பு மூரழைத்தேக
அவர்பிறகே சீஷர்களும் அன்புடனே போயினராம்
அவர்களது ஞாபகத்தில் அன்றுநிகழ் சம்பவங்கள்
வந்துதிக்கப் பெற்றார்கள் வாகான சீஷர்களும்.
சிந்தாகுலத் துடனே சேசுபரன் அந்நாளில்
செந்நீர் வியர்வையதாய்ச் சிந்தவனஞ் சென்றதுபோய்
பன்னரிய பாடொழிந்து பாங்காக வானகத்துக்
கேறியுற அம்மலைக்கே ஏகனும்போய்க் கொண்டிருந்தார்
மீறுவினை போக்கவந்த மேலான தேவபரன்.
ஒலிவமலைக் கேறுகையில் உற்றமெஜத்த மேனிபொழில்

நிலையாக மார்க்கத்தில் நின்று தவவொளியில்
விளங்குவதைக் கண்டார்கள் வேதபரன் பாடுகளை
உளங்கொணர்ந்து சென்றார்கள் உண்மையுள்ள சீஷர்களும்.
சேசுபரன் சுற்றியுள்ள சீரியலை நோக்குகிறார்
பாசமுடன் நோக்குகிறார் பாரகத்தின் ஊர்களையே
நசரேத்தா ராதியன நாதனுந்தான் நோக்குகின்றார்.
இசைஜெருச லேம்நகரம் ஏரடியில் நோக்குகின்றார்.
கல்வாரி பர்வதமும் கல்லறையும் நோக்குகின்றார்.
பல்வருஷம் பாரிருந்து பன்னு பிதாவுக்கிழைத்த
மகிமையையும் மாந்தருக்கு மாண்டளித்த பொக்கிஷமும்
அகத்தில் நினைக்கவரு ளானந்த மெய்துகின்றார்.
எல்லா முடிந்ததென ஏகனன்று சொன்னதுபோல்
எல்லா முடிந்ததென ஏகன் நினைக்கின்றார்.
உலகைவிட்டுப் போகும் உயர்நேரந் தான்குறுக
விலகரிய தேவன் விடைபெற்றுக் கொள்நேரம்
வந்தெய்த அப்போது வாழ்பரனைப் பெற்றெடுத்த
அந்தநிறை தாயாரும் ஆங்கருகில் நிற்கின்றாள்.
சூழ்ந்தாப்த சீஷர்கள்கு தூகலமாய் நிற்கின்றார்.
ஆழ்ந்தவரின் உள்ளத்தில் அன்புவிதை யூன்றுவதுபோல்
இதவசனங் கூறிபர இன்பமளி தன்னவரை
பதமாக விசுவாசம் நம்பிக்கை தேவசினேகம்
என்னுமுயர் புண்ணியங்கள் ஏற்று நிலையாயிருக்க
துன்னுமதி கூறுகின்றார் தூய பராபரனும்.
இறுதியினில் யாவருக்கும் ஏகன் பொதுவாக
உறுதிமொழி கூறுகின்றார் உத்தம பராபரனும்
நீங்களுல கெங்கும்போய் நேர்சிருஷ்டி கட்கெல்லாம்
ஓங்கு சுவிசேஷமதை உண்மையுட னோதுங்கள்
விசுவசித்து ஞானதீட்சை மேவுபவன் இரட்சண்யம்
வசுமதியில் தானடைவான் விசுவசியா மானிடனோ
ஆக்கினைக்குள் ளாவன்விசு வாசமுடை யாரடையும்
நீக்கமறு நல்வரங்கள் நீணிலத்தி லாகுமிவை
பேய்களையென் னுமத்தால் போயகல ஓட்டுவர்காண்
ஆய்கலைபல் பாஷைகளில் அன்னவரும் பேசுவர்காண்
பாம்புகளைத் தூக்குவர்காண் பாழ்மரணத் துக்குரிய
தாம்பகைவ ரீய்வ தருந்திடினும் சாகார்கள்

நொயுற்ரோர் கைநீட்ட நோய்நீங்கு வார்களெனத்
தூயபர னுள்ளுவந்து சொல்லிக் கரமுயர்த்தி
ஆசீர்வதித்த வண்ணம் அந்தரத்தில் தாமெழுந்து
நேசர்தமை விட்டுவிண்ணில் நேராகப் போயினர்காண்.
பாருலகை மீட்ட பராபரனுஞ் சேசுபரன்
ஏருலகை நாடி எழுந்தருளிப் போயினர்காண்.
அண்டினரை யாதரிக்கும் அம்பரனு மந்தரத்தில்
விண்டலத்தை நாடி வியப்புறவே போயினர்காண்.
சத்தியத்தை நாட்டவந்த சர்வேசன் மேலெழுந்து
நித்தியத்தை நாடி நேராகப் போயினர்காண்.
சுத்தமறைப் போதகத்தின் கத்தனெனு மெம்பெருமான்
இத்தரை விட்டோங்கி எழுந்தருளிப் போயினர்காண்.
ஒட்டோ லகராக உம்பரெழுந் தேகுவதைப்
பட்டம் பகலதனில் பார்த்துநின்ற ரெல்லோரும்
அப்போ தொருமேகம் அன்னோர்தங் கண்மறைக்க
ஒப்பாயவர் மருங்கில் உற்றார் இருவாலர்.
வெள்ளுடை தரித்தவந்த மேலான வாலிபரும்
தள்ளரிய காட்சியினைப் பார்த்துநிற்குந் தாசர்களை
நோக்கியுரை செய்தவற்றின் நுண்பொருளைக் கண்டறிவீர்.
கலிலேயா மாந்தர்களே கண்களையேன் வானுயர்த்தி
நிலமருவி யண்ணாந்து நேர்நோக்கி நிற்கின்றீர்
உம்மினின்று வானுலக முற்றவிந்த சேசுபிரான்
கம்மெழுந்து போனதைநீர் கண்டதுபோல் மீண்டுவரக்
காண்பீர்க ளென்றுரைத்துக் கண்மறைந்தார் காட்சிதந்த
பாண்மருவுந் தூதரெனும் பாலியரும் அம்மானை.
அங்கிருந்தா ரெல்லோரும் ஆராதனை புரிந்து
பொங்கு மகிழ்ச்சியுடன் பொன்னகர் திரும்பிவந்து
எங்கும்போய்ப் போதிக்க எல்லோரு மாரம்பம்
தங்காமற் செய்தனராம் தாரணியில் அம்மானை.
நசரேசு நாதனுந்தான் நாளுமவரோ டிருந்து
திசையெங்கு மேவத் திருச்சபைக்கு நல்லுதவி
செய்துவரு மற்புதத்தின் சீரதனை என்னவென்கோ!
மெய்திகழு மாமறையின் மேன்மையாமீ தம்மானை.

## முடிவுரை

சத்தியத்தை யோராத சண்டையிடும் போர்வீரன்
அத்தமித்த நண்பகலில் ஆச்சரியத் தானிறைந்து
மெய்யாக விம்மனிதன் மேலான சர்வேசன்
துய்ய குமாரனெனச் சொன்னமொழியால் முடிப்போம்.
யேசுக் கிறீஸ்தென்பார் தேவமகன் றனென்று
பாசகன்ற சம்மனசோர் மங்களங்கள் பாடியன்று
தாழ்ச்சியுறுங் கற்குகையில் சாட்சிபகர்ந் திட்டனரால்.
சூழ்ச்சிவென்ற தாரகையுஞ் சாட்சிபகர்ந் திட்டதுவால்.
ஞானதீட்சை போதெழுந்த வானவ சரீரிமொழி
தீனபரஞ் சோதியெனச் சாட்சிபகர்ந் திட்டதுவால்.
கொந்தளிக்குந் தண்கடலும் கொன்னவில்புயற் காற்றும்
சந்தசக நாதனெனச் சாட்சி பகர்ந்திட்டனவால்.
பூமியதிர்ந் தம்புவியில் போய்மரித்தோரு யிர்த்தெழுந்து
சாமியென யாவருக்குஞ் சாட்சி பகர்ந்திட்டனரால்.
எண்ணிலடங் காநவங்கள் முன்னடையாளங் களுந்தாம்
தண்ணளியார் தேவனெனச் சாட்சிபகர்ந் திட்டனவால்.
உன்னரிய உத்தானம் உற்றமோட் சாரோகணமும்
ஒன்னலரு மின்னுயிரை உத்தமர்க்க ளித்தவரும்
ஊழியுள்ள காலமெல்லாம் உண்மையெனச் சொல்லிகணந்
தாழாது போற்றிசெய்து சாட்சி பகர்ந்திடுவர்.
ஆதரையை மீட்கவந்த அம்பரமன் காதையினை
மேதகவே கேட்டுவந்த மேதினியின் மாந்தர்களே
இந்தச் சரிதையினுல் ஈண்டறியும் பாடமென்ன ?
அந்தமுடன் கேட்டிடுவீர் அன்புநிறை சோதரரே,
சின்னப்பர் சொன்னதுபோல் தீரவிசு வாசமென்னும்
பன்னரிய கேடயத்தால் பாரில் பகைவர்விடும்
பாணத்தி னக்கினியைப் பாரவிக்கத் தேடுவதே.
மாணுக்க நாமொழிந்த மாண்புநிறை சீர்சரிதை
சம்பவங்கள் உண்மையல வென்றுபறை சாற்றுமிழி
வம்பர்களின் கூற்றை மடுக்காதீ ரும்செவியில்.
பாவிகளை மீட்கவெனப் பாருலகம் வந்திறங்கி
ஆவிதந்த மாபரன்மேல் மேவுவிசு வாசமதை
யழிக்க முயற்சித்தல் அநியாய மாவதுடன்

பழியாருங் குற்றமொடு பாதகக் குரூரமெனச்
சொல்லிடவும் வேண்டுமோ சோதரரே யோசியுங்கள்.
வல்லபிரான் சாபமது வம்பரவர் மேனிற்கும்
திண்ணமிது சொன்னேன் தீயர்மொழி கேளாதீர்.
அண்ணலை விசுவசிப்பீர் ஆர்வமுடன் அன்பர்களே.
தப்பறையாங் கொள்கைகளைத் தாங்கிநிற்கும் புத்தகங்கள்
செப்பு மனிதருமைச் சேரக்கண் டால்நீங்கள்
நச்சரவங் கண்டதுபோல் நானிலத்தி லப்பாலே
நிச்சயமாய்ச் சென்றிடுவீர் நீடுவிசுவாச மெனும்
கேடயத்தால் உங்களையே கேண்மைபெறக் காத்திடுவீர்.
பீடுயரம் மந்திரத்தைப் பேறுபெறச் சொல்லிடுவீர்
சேசு பிரான்றம்மைச் சேர்த்தகம் பிணித்திடுவீர்.
மாசில்லா மாமரியின் வல்லபத்தை நாடிடுவீர்.
எத்தகைய மானிடரும் எத்தகைய காரியமும்
சுத்தபரஞ் சேசுவையும் தூயமரியன் னையையும்
உங்களிட நின்றகற்றிப் பங்கமுற நேராதீர்.
தங்கமெனுந் தற்பரனே தாரணியில் உங்களுக்குக்
துன்பம் பிணிவறுமை தோன்றியக்கா லாறுதலை
அன்புடன ளிக்கவல்லார் என்பதை யுணர்ந்திடுவீர்.
இன்னலில் மனத்திடனும் இன்பமதில் நன்றியையும்
நன்னயமாய்த் தந்தருள்வர் நாயகனுஞ் சேசுபரன்.
இவ்வுலகி லெவ்வவரும் ஏசிக்கை விட்டாலும்
எவ்வமற உங்கள்பக்கம் எப்பவுந் துணையிருந்து
காப்பாற்று வாருண்மை காசினியில் உங்களையே
மூப்பென்றும் பாலரென்றும் முன்பாராச் சாக்காடு
வந்துறு மந்நேரத்தில் வல்லபரன் தாயுடனே
வந்துதுணை யாயிருப்பர் வான்வீ டளித்திடுவர்
சோதனை யாபத்தென்றால் சொன்னவந்தக் கேடயத்தால்
தீதறவே உங்களைத்தான் திட்டமுடன் காத்திடுவீர்.
சத்தியத் திருச்சபையின் மக்களெனச் சந்தோஷம்
இத்தரையிற் கொண்டிடுவீர் ஏக பரிபூரணனும்
சுயஞ்சீவி யாகுஞ் சருவேசன் புத்திரனும்
தபவுகிறீஸ் தேசுவேநீர் என்று மனச்சந்தோஷம்
பொங்கி யவர்புகழைப் போற்றியுரை செய்திடுவீர்.
பத்தியுடன் சேசுபதம் பணிந்து வேண்டுவதால்

டத்தியுடன் நற்கருணை பந்திய மருவதால்
கற்பனைகள் தூயசபைக் கட்டளைகள் மீறாமல்
பொற்புட னெழுகுவதால் பொற்பரன்மே லுள்ளவிசு
வாசத்தைக் காட்டிடுவீர் பூதலத்தி லஞ்சாமல்
சேசுபரன் சீஷரெனத் திட்டமாய் நடந்திடிலோ
சேசுபிரான் மீண்டுமிவண் கீர்த்தியுடன் தோன்றுகையில்
தாசர்தமக் கேபுரியர் என்று தயாளமுடன்
அங்கீ கரித்துநம்மை ஆனந்த மாயேற்று
மங்குதலில் லாதவுயர் வானுலகில் சேர்த்திடுவார்.
மங்களமா யாசீர் வதித்துநமைப் பேரின்பந்
தங்குமிடஞ் சேர்த்திடுவார் தற்பரனும் அம்மானை.
இந்தப் பெரும்பாக்கியந்தான் இந்நூல் படிப்பவர்க்கு
வந்துற மன்றாடுகிறேன் வையகத்தில் அம்மானை.

## விருத்தம்

தேவபரன் திருவுருவா யுலகில் வந்து
தீயபவந் தீர்த்தவனி யோரைக் காக்க
மேவுபல நிந்தை யவ மானமுற்று
மேலுதிரஞ் சோரகுரு சேறி நின்று
ஆவியினைத் தந்தபரஞ் சேசு தந்த
அணிமறையை மருவாதார் முத்தி தன்னை
மேவியுற வறியாதா ராவ ரென்று
மெய்யுணர்ந்து மொழிந்தவுரை பொய்க்காதன்றோ !

அண்ணலேயெனை யாண்டு கொண்டருளிய வமுதே
மண்ணிலே பவமாய்கையில் யான் கிடந்துழலா
வெண்ணிலேனையுன் னெழில் கரத்தா லணைத்துன்னை
நண்ணியானுய நல்வரந் தந்தருள் புரியே.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

---

PRINTED AT THE "SATYA NESAN" PRESS, MADRAS.